# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 17 திங்கட்கிழமை (02.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 249


# கே.பிக்கு அரசாங்கத்தின் சுகபோகம்; தமிழ் இளைஞர்களுக்குச் சிறையா?

## நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லை என்று ஜே.வி.பி. சீற்றம்

கொழும்பு, ஓகஸ்ட் 02



விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கு சர்வதேச ரீதியில் நிதி சேகரித்து, ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வழங்கிய கே.பி. என்ற குமரன் பத்மநாதன் அரச சுகபோகங்களை அனுபவிக்கும் அதேவேளை, புலிகளால் கட்டாய ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட அப்பாவி இளைஞர், யுவதிகள் விசாரணைகள் எதுவுமின்றி சித்திரவதை அனுபவிக்கின்றனர்.

ஒரு குடும்பம் நினைத்ததுதான் இங்கே சட்டம் என்றாகிவிட்டது. குற்றம் இழைத்தவர்கள் வெளியே நடமாட, அப்பாவிகள் தண்டிக்கப்படுகிறார்கள். இதுவா நியாயம்?

இவ்வாறு கண்டனத் தொனியில் கேள்வி எழுப்பினார் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

(23ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்க – பலாலி விமான சேவை விரைவில்

கொழும்பு, ஓக.2

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பலாலிக்கு விமானசேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. பெரும்பாலும் வருட இறுதியில் இச்சேவை தொடங்கும்.

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் தயாசிறி திஸ்ஸரா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனைக் கடலோரத்தில் கரை ஒதுங்கியது சடலம்

கொழும்பு, ஓக. 02

கல்முனைக்குடிக் கடற்கரையோரத்தில் நேற்றுக்காலை சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாய்ந்தமருது, ஹமிதியா வீதியைச் சேர்ந்த 19 வயதுடைய மேசன் தொழிலாளியான அப்துல் ஹமிட் அஸ்லம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் காணாமல் (24ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரபூர்வ அமர்வுகளை இம்மாதம் ஆரம்பிக்கிறது ஐ.நா. நிபுணர் குழு

### நான்கு மாதங்களில் இறுதி அறிக்கை வெளியாகும்

கொழும்பு,ஓக.2

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா என்பதை ஆராய்வதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமித்த மூன்று பேர் அடங்கிய நிபுணர்கள் குழு இம்மாதம் முதல் இரண்டு வாரங்களில் தனது அதிகாரபூர்மான அமர்வுகளை நடத்தவிருப்பதாக அறியப்படுகின்றது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இணைப் பேச்சாளர் சவுங்காகொய் தகவல் தருகையில், அக்குழு தனது அதிகாரபூர்வ அமர்வுகளை ஆரம்பித்ததன் பின்னர் 2009 ஆம் ஆண்டு பான் கீ - மூன் இலங்கைக்கு விஜயம் செய்த போது விடுக்கப்பட்ட அறிக்கையில் காணப்படும் மனித உரிமைகளுக்கு பொறுப்பு கூறுவதற்கான இந்த நாட்டின் (24ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தை முகாமிலுள்ள தமிழ் இளைஞர்களை பெற்றோர் நேற்று நேரில் சென்று பார்த்தனர்

### ஜே.வி.பியின் ஏற்பாட்டில்

கொழும்பு, ஓகஸ்ட் 02

வெலிகந்தை புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை அவர்களது பெற்றோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். ஜே.வி.பியினர் அவர்களை அங்கு அழைத்துச் சென்றனர்.

இதுதொடர்பாக ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சந்திரசேகரன் 'உதயனு'க்குக் கூறியவை வருமாறு:- (24ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது: அது மஹிந்த சிந்தனையில் இல்லை

### தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி நேரில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 02

அரசாங்க ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தில் 2,500 ரூபா உயர்வு வழங்கப்படுவது குறித்து மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்படவில்லை. அதனால் அத்தகைய ஒரு சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது.

இவ்வாறு தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் முகத்தில் அறைந்தது போல் நேரில் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கடந்த வாரம் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒன்றை நடத்தினார். அப்போது ஜனாதிபதித் தேர்தலில் தெரிவிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான 2,500 ரூபா சம்பள உயர்வு தொடர்பாக கேட்கப்பட்டபோதே(24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சென்ற இந்தியப் பிரஜை ஓமந்தையில் வைத்துக் கைது

கொழும்பு, ஓகஸ்ட் 02

யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த இந்தியப் பிரஜையொருவர் ஓமந்தைச் சேதனைச்சாவடியில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்படும் போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி இவர் யாழ்ப்பாணம் பயணித்தமையாலேயே கைது செய்யப்பட்டார் என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் படையினரால் கைதுசெய்யப்பட்ட இந்த நபர் ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றப் பணிகளை நேரில் பார்வையிட இந்திய அதிகாரி இவ்வாரம் இலங்கை விஜயம்

### மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

சென்னை, ஓக. 02

ஈழத் தமிழர் மறுவாழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி இந்த வாரம் இலங்கை செல்கிறார். அவர் அங்கு நடைபெற்றுவரும் வீட்டு நிர்மாணப் பணிகளை நேரில் ஆய்வு செய்வார்.

- இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பெண்கள் 41 பேர் சவூதியில் நிர்க்கதி நிலையில்!

கொழும்பு, ஓக. 02

சவூதி அரேபியாவுக்கு இந்த வருட ஆரம்பத்தில் வேலைவாய்ப்புத் தேடிச் சென்ற இலங்கைப் பெண்கள் 41 பேர் அங்கு கைவிடப்பட்ட நிலையில் நிர்க்கதியற்றுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இவர்கள் சவூதி அரேபிய வைத்திய சாலை ஒன்றுக்கு கடந்த மார்ச் மாதம் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இவர்களை இலங்கையிலிருந்து அனுப்பிய வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்கு இவ் வருடம் 2 லட்சத்து 68 ஆயிரம் பேர் தோற்றுகின்றனர்

### அனுமதி அட்டைகளை பாடசாலைகளில் பெறலாம்

யாழ்ப்பாணம், ஓக 2

இந்தவருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 68 ஆயிரத்து 933 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் என்ற வகையில் 2 இலட்சத்து 14 ஆயிரத்து 239 மாணவர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 54,694 மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் பரீட்சை செப்ரெம்பர் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 22 தினங்களுக்கு நடைபெறும்.

மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு (24ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் டெங்கு தீவிரமடைந்து வருவதால் குடாநாட்டில் தடுப்பு நடவடிக்கை அவசியம்

## பொதுமக்களுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஓக.2

குடாநாட்டில் வருட ஆரம்பத்தில் இருந்ததைவிட டெங்கு நோயின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது.

தெற்கில் தீவிரமாகப்பரவிவரும் டெங்குவின் தாக்கம் இங்கும் பரவ இடமளிக்காமல் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வருட ஆரம்பத்தில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் டெங்குத் தாக்கத்துக்கு இலக்காகி 17பேர் வரையில் மரணமானார்கள்; நூற்றுக்கணக்கானவர்கள் நோய்த் தாக்கத்துக்கு உள்ளானார்கள்.

படிப்படியாக நோய்த் தாக்கம் குறைந்து கடந்த ஜூன் மாதத்தில் இருவரும் ஜூலை மாதத்தில் ஒருவரும் மரணமானார்கள். நோய்த் தாக்கம் குறைந்து வந்தாலும் முழுமையாகக் கட்டுப்பாட்டில் வந்துள்ளது என்று கருத முடியாது.

தெற்கில் டெங்கு தீவிரமாகப் பரவுகிறது. அங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகி இங்கு பொதுமக்கள் வரும்போது நோயின் பரம்பல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

எனவே டெங்கு நோய் பரவுவதைத் தடுக்க முன்னேற்பாடாக தடுப்பு நடவடிக்கையில் சகலரும் ஈடுபட வேண்டும் - என்றார் அவர். (ஓ-ஐ)

# அரச திணைக்களங்கள், பாடசாலைகளில் இன்று டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஓக.2

குடாநாட்டிலுள்ள அரச திணைக்களங்கள மற்றும் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் இன்று வைபவ ரீதியாக அங்குரார்பணம் செய்யப்படவிருக்கிறது.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலும் முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.மாநகர சபை அலுவலகத்திலும் அங்குரார்பண நிகழ்வுகள் இடம்பெறும்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இந்த நிகழ்வுகளில் பங்குபற்றுவர்.

இன்று சகல திணைக்களங்களும் பாடசாலைகளிலும் ஒரே நேரத்தில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படவிருக்கின்றன.

(ஓ-ஐ)

# 'உதயன்' சாவகச்சேரி முகவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 02

உதயன் பத்திரிகையின் ஆரம்பகால சாவகச்சேரி விற்பனை முகவர் வி.சுப்பிரமணியம் வீதி விபத்தில் காயமடைந்து மரணமானார். விபத்தில் இவரது மகளும் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் வெள்ளிக்கிழமை மட்டுவில் வடக்கு தோப்பு வீதியில் இடம்பெற்றது.

பத்திரிகை விற்பனையை முடித்துக்கொண்டு ஆசிரியையான மகளின் மோட்டார் சைக்கிளில் சென்று அவரது வீட்டுக்குச் செல்லும் ஒழுங்கையில் திரும்பியபோது எதிரே வந்த ஹைஎஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளிலும் மோதுண்டதில் இருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்ட இவர் நேற்றுமுன்தினம் அதிகாலை மரணமானார். மட்டுவில் வடக்கு தோப்பு வீதியைச் சேர்ந்த வி.சுப்பிரமணியம் (வயது 80).

இவரது மகளான சுப்பிரமணியம் கேமாவதி (வயது 40) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். (ஓ-207- 14)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் வினாசித்தம்பி சுப்பிரமணியம்



(மணியம் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி)

உதயன், சுடர்ஒளி பத்திரிகைகளின் சாவகச்சேரி முகவராக ஆரம்பகாலம் தொட்டு அரும்பணியாற்றிய அமரர் வினாசித்தம்பி சுப்பிரமணியம் அவர்களின் அகால மரணமானது ஈடுசெய்ய முடியாதது. அன்னார் உதயன் நிறுவனத்தில் கடந்த 25 வருடங்களாகத் தன்னைப் பிணைத்துக்கொண்டவர். நேர்மையும், விடாமுயற்சியும் மிக்க அன்னாரது சேவை என்றும் நினைவில் நீங்கா திருக்கும். அவரது திடீர் மறைவினால் கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு உதயன் வெளியீட்டகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகப் இயக்குநரும்,
பணியாளர்களும்
'உதயன்' வெளியீட்டகம்.

(ஓ/569628)





## சின்னமடு யாத்திரைதலப் பெருவிழா

நற்கருணை விழா 4ஆம் திகதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கும் பெருந் திருவிழா 5ஆம் திகதி வியாழன் அன்று காலை 6.30 மணிக்கு முதற் திருப்பலியும், பெருவிழா திருப்பலி காலை 8 மணிக்கும் ஆரம்பமாகும்.

தங்குமிட வசதி உண்டு.

(101199) - பரிபாலகர்.



## LAVA HOSPITAL

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

www.lavahospitals.com/blog

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

**Basic Body Checkup**
அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
**Obesity package - 1200/=**


## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைக்கு பொறுப்பான ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-207)

## தயார் நிலை 'கொங்கிறீற்' நிலையம் நாளை மிருசுவிலில் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.2

தயார் நிலை 'கொங்கிறீற்' உற்பத்தி நிலையம் ஒன்று நாளை செவ்வாய்க் கிழமை மிருசுவிலில் திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டோக்கியோ சிமெந்து நிறுவனத்தினர் இந்த தயார் நிலை 'கொங்கிறீற்' உற்பத்தி நிலையத்தை மிருசுவிலில் அமைத்துள்ளனர். இதன் திறப்பு விழா நாளை மு.ப. 10.30 மணியளவில் மிருசுவில் காடு, எழுதுமட்டுவாழ் தெற்கு, மிருசுவில் என்ற விலாசத்தில் நடைபெறும். (க)

## கைதடியில் நேற்று நடந்த விபத்தில் ஐவர் காயம்; இருவருக்கு கால் முறிவு

கைதடி, ஓக 2

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற 'ஹன்ரர்' - 'ஹைஏஸ்' வான் விபத்தில் ஐவர் காயமடைந்தனர். இருவருக்கு கால் முறிந்தது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த 'ஹைஏஸ்' வானும் கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹன்ரரும் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் இருவரின் கால்கள் முறிந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-ஐ-288)

### திருத்தம்

30.07.2010 வெள்ளிக்கிழமை உதயனில் 2 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய விளம்பரத்தில் 'பொருளியல் கல்லூரி' என்பதனை 'பொருளியற் கல்லூரி' என திருத்தி வாசிக்கவும்.

## முச்சக்கர வண்டி திருத்தும் கற்கைநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக 2

ஸ்ரீலங்கா தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். வளாகத்தில் இன்று ஆரம்பிக்கப்படும் புதிய கற்கை நெறியான முச்சக்கர வண்டி திருத்துதல் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் என்.வி.கியூ. தேசிய அரச அங்கீகாரச் சான்றிதழ்களை வழங்கிவரும் தொழிற்பயிற்சி அதிகார சபையே இந்தக் கற்கைநெறியை ஆறுமாத காலத்துக்கு நடத்தவுள்ளது.

இதில் இணை விரும்புபவர்கள் சுயமாகத் தயாரித்த சுயவிவரக் கோவையுடன் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல. 375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமுகம் தருமாறு மாவட்டத் திட்டமிடல் இணைப்பாளர் இரா. அகிலன் கோரியுள்ளார். (ஓ-10)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணுலகு | | விண்ணுலகு |
|---|---|---|
| 13 ★ 05 ★ 1942 |  | 18 ★ 07 ★ 2006 |

### அமரர் செல்லம்மா கணேசலிங்கம்

திதி: அட்டமி

பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
திகழ்ந்த எங்கள் தெய்வமே
ஆண்டுகள் நான்கு
ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை
விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாலன் களஞ்சியம்,
இல. 272, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் தேவபாலன்



குளப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தேவபாலன் 31.07.2010 அன்று ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் துஷ்யந்தி, துளசிதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரவதனி, சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
Germany - 00496943008159
Kokuvil - 0212225583

தகவல்:
சகோதரன்,
சுப்பிரமணியம்
சிவபாலன்,
குளப்பிட்டி.

(101475)

### செல்லப்பா பத்மநாதன்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பத்மநாதன் நேற்று (01.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சர்வலோகநாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் பரிமளகாந்தியின் அன்புக் கணவரும் தர்சினி, கலாவள்ளி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோன்ஸன், நவகீசன் ஆகியோரின் மாமனாரும் ரொக்சனா, றொசான், றொபின்சன், சிரான் ஆகியோரின் பேரனும் ராஜி, ஜீவன், கீதா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.08.2010) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் இடம்பெற்றுப் பூதவுடல் இருபாலை கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விதானையார் லேன்,
இருபாலை.
077 2055254

(101480)

தகவல்:
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அவசரபுத்தி வேண்டாம், தலைவர்களே...!

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் (அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலான தமிழ்க்கட்சிகளின் கூட்டு) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தனது அணியில் சேர்த்துக்கொள்ள விரும்புகிறது. அதனால் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைத் தேடிச் சென்று சந்திக்கவும் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்கள். தமிழ் மக்களின் அமோக ஆதரவு பெற்ற கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்பதனை கடந்த பொதுத்தேர்தல் தெட்டத் தெளிவாகக் காட்டி உள்ளது. அதனால் கூட்டமைப்பைத் தேடிச் செல்ல வேண்டிய கட்டாயம் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துக்கு. இதனைத் தமிழ் மக்கள் எவரும் புரிந்துகொள்வர்.

ஒற்றுமையே பலம். ஆகையால், தமிழ்க் கட்சிகள் யாவும் ஓரணியில் திரண்டு, ஒரே குரலில் ஒலித்தால், அரசாங்கத்தை இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை வழங்குமாறு அசைக்க முடியும் என்று த.க. அரங்கம் நினைப்பதில் தவறு காணமுடியாது. ஆனால் தமிழ் மக்களுக்கு எந்த வகையான தீர்வை அது அரசிடம் கேட்கப்போகிறது என்பதுதான் பெரும் தேடுதலுக்குரியது.

தற்போது உள்ள அரசியல் சூழ்நிலையில், அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற நிலையை தமிழ்த் தலைவர்கள் எய்துவது அத்தியாவசியமே. ஆயினும் தமிழ் மக்களின் பிரச்சினைக் கான தீர்வில் ஆதார சுருதி எங்கிருந்து உற்பவிக்க வேண்டும் என்பது குறித்துத் தீர்க்கமான, உறுதியான பார்வையும் நிலைப்பாடும் தேவை.

முதற்கோணல் முற்றும் கோணலாகிவிடும். ஆகையால் சரியான புள்ளியிலிருந்து தமிழர் பிரச்சினைக்கான தீர்வு முயற்சி ஆம்பிக்கப்பட வேண்டும்.

தந்தை செல்வா காலத்தில் இருந்து வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தேசம் ஒன்று சமஷ்டி அமைப்பின் கீழ் இந்த நாட்டில் உருவாக வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அதனை அடித்தளமாக வைத்தே வெவ்வேறு அரசியல் சித்தாந்தங்கள் இலங்கைத் தமிழர்களிடையே புகுந்தன.

தமிழ் மக்களின் தேசியம், அவர்களின் சுயநிர்ணய உரிமை, வடக்கு - கிழக்கு இணைந்த ஆட்சி அதிகாரம் ஆகியனவே நிரந்தரமான ஒரு தீர்வின் அத்திபாரமாக அமைய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் இன்றைய அரசியல் அபிலாசையும் ஆகும். தமிழ்க் கட்சிகளின் அரங்கம் இந்த நிலைப்பாட்டை ஆதரிக்கிறதா இல்லையா என்பது இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

இத்தகைய ஒரு சூழலில், தமிழ்த் தேசியம் என்பது ஒரு மாயையே என்று வர்ணித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமையில் கூட்டுச் சேர்ந்துள்ள தமிழ்க் கட்சிகளின் அரங்கம், தமிழர்களை அரசியல் ஓட்டாண்டிகள் ஆக்கிட வேண்டும் என்று வலைவிரித்து வைத்திருக்கும் மஹிந்த அரசு, கிள்ளிப் போடும் அரசியல் சலுகைகளுக்காகவா கூட்டமைப்பைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளப்பார்க்கிறது...?

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுவிட்ட பின்னணியில் தமிழர் பிரதேசங்களை இராணுவமயமாக்கி, பாதுகாப்பு முன்னேற்பாடு என்ற போர்வையில் தமிழர் பிரதேசங்களை சிங்கள மக்கள் பிரதேசமாக்கியதன் பிற்பாடு, தான் நினைத்ததைக் கிள்ளித் தெளிக்கக் காலத்தைக் கடத்தும் வியூகத்தை அமைத்திருக்கிறது அரசு.

தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தையும் ஒரே அணியில் சேரவைத்து, தான் கிள்ளித் தெளிக்கும் அரசியல் வலுவற்ற அற்ப சொற்பத்தைத் திணித்துவிடும் திட்டத்தின் ஓர் அங்கமே, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது 'நூடில்ஸ்' சமைப்பது போன்றதல்ல என்பதன் சூட்சுமம்.

அத்தகைய அரசுடன், இணக்க அரசியல் நடத்தியே தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பெற முடியும் என்ற சித்தாந்தம். இந்தக் காலகட்டத்தில் ஒவ்வாத ஒன்று தமிழ் மக்களின் தேசியம், இனத்தனித் துவம், தாயகம் என்ற கோட்பாடுகளை கரைத்துக் கரியாக்கி விடுவதற்கு கண்ணுக்குப் புலப்படாதவிதத் தில் செயற்படுகிறது அரசு. தமிழர்களின் ஐக்கியம் என்ற போர்வைக்குள் அதனைச் செய்து முடிக்கும் திட்டத்தோடு, அரசின் ஏஜென்சிகளாக எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் சேர்த்து ஏப்பம் விட அது போட்டுள்ள சதியில் சிக்காதிருக்க தமிழ்க் கட்சிகள் அரங்கம் மட்டுமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தீர்க்க தரிசனத்துடன் செயற்பட வேண்டும். இதுவே நொந்து நொடிந்து போயுள்ள தமிழ் மக்களின் வேணவாவும் நிபந்தனையும் ஆகும். தமிழ்க் கட்சிகள் அரங்கத்தின் பிரமுகர்களும் இது குறித்து ஆற அமர இருந்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். தமிழ் மக்களின் இன்றைய நிலை நாடி அதுவே பொருத்தம். அவசரபுத்தி வேண்டாமே!

# இராணுவமும் பொலிஸும் நிறைந்துள்ள தலைநகரில் ஆயுதம் தரித்த குழுக்கள் சுதந்திரமாக நடமாட்டம்!

**நேற்று (01.08.2010 அன்று) சண்டேரைம்ஸ் எழுதியிருந்த விமர்சனக் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி**

கடந்த வாரம் நிகழ்ந்துள்ள முக்கிய சம்பவங்களில் சியத்த தொலைக் காட்சி நிறுவனம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமையும் ஒன்றாகும்.

பிரபல சினிமா நடிகை சங்கீத்தா வீரரட்ணவின் கணவர் ரோகாந்த காரியப் பெருமாவுக்குச் சொந்தமானது இந்தத் தொலைக்காட்சி நிறுவனம். தொலைத் தொடர்புகள் ஒழுங்கமைப்புகள் ஆணைக் குழுவின் தலைவராக இருந்தவர் இவரது சகோதரர் பிரியந்த காரியபெருமா. ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு அவர் இந்தப் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டு தோல்வி கண்டவரான ஜெனரல் சரத்பொன்சேகாவை அவர் ஆதரிக்கிறார் என்ற செய்திகள் வெளியாகியிருந்த சமயத்திலேயே அவரது பதவி விலகல் பற்றிய செய்தியும் வெளியாகியிருந்தது. இம்மூவரும் அத்தேர்தலுக்குப் பின்னர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கிருந்துவிட்டு கடந்த வாரம் தான் நாடு திரும்பியிருந்தார்கள்.

### கும்பல் வந்து தாக்கியது

சம்பவம் நடந்த வேளையில் ஹூணுபிட்டிய லேக் வீதியிலுள்ள கட்டடத்தின் இரண்டாம் மாடியில் இருந்த இரு அலுவலர்கள் கட்டட வாயிலில் ஒரு கும்பல் வந்து தாக்கிச் சத்தம் உண்டாக்கியதைப் பார்த்ததாகக் கூறினார்கள். அங்கு ஆயுதம் தரிக்காத ஒரே ஒரு பாதுகாவலர்தான் இருந்துள்ளார். வந்தவர்களிடம் ரி-56 றைபிள் துப்பாக்கி இருந்துள்ளது. சிலர் பெரிய தடிகளை வைத்திருந்துள்ளார்கள். செய்தி அறை எங்கே இருக்கிறது என்று கத்தியபடியே அவர்கள் வந்துள்ளார்கள்.

அந்தவேளையில் செய்தி அறையில் இருவர் மட்டுமே இருந்துள்ளனர். கட்டடத்தில் சுமார் எட்டு சியத்த ஊழியர்கள் இருந்துள்ளனர். குழப்பம் நடப்பதைக் கண்டவுடன் மின் வெளிச்சத்தை அவர்கள் நிறுத்திவிட்டனர். தாக்குதல் நடவடிக்கையை வழி நடத்தியவர் முக மூடி முதற் கொண்டு முழுவதும் கறுப்பு உடையே தரித்திருந்தார் என்று ஊழியர்களில் ஒருவர் கூறினார். செய்தி அறை எங்கே என்று அவர் கேட்டுள்ளார். செய்தி அறையைக் கண்டு பிடித்தவுடன் மற்றவர்களை உள்ளே போகும்படி அவர் பணித்துள்ளார். மற்றவர்கள் தமது முகங்களை கைக்குட்டைகளால் மூடிக்கட்டியிருந்தார்கள்.

### ஊடகவியலாளர்களைத் தாக்கி முழங்காலில் இருக்கச் செய்தமை

அறைக்குள் சென்றதும் ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்டு முழங்காலில் இருத்தப் பட்டனர். அவர்களின் தலைகள் மீது கைத்துப்பாக்கிகள் வைக்கப்பட்டன. பேசாமல் இருக்கும்படி கேட்கப்பட்டனர். தன்னை யார் என்று இனம் காட்டிக் கொள்ள விரும்பாத ஊழியர் ஒருவரே இதைக் கூறினார்.

கும்பலில் ஒருவன் மரத்தடியொன்றை எடுத்துக் கணனிகளை அடித்து நொறுக்கலானார். இன்னொருவர் அறையில் பெட்றோல் ஊற்றினார், இன்னொரு வர் பிரதான கட்டுப் பாட்டு அறை எங்கே இருக்கிறது என்று கேட்டார். ஒருவர் அதைத் தேடிமேல் மாடிக்குச் சென்றார்.

**'சியத்த' ஊடகம் மீதான தாக்குதல் எழுப்பியுள்ள கேள்வி**

இருளாய் இருந்தமையால் திரும்பி வந்தார். என்றாலும் அங்கி ருந்த எல்லாவற்றையும் யன்னல்கள், கண்ணாடி கதவுகளையெல்லாம் அடித்து நொறுக்கினர்.

செய்தி அறையின் வாயிலில் இரு ஊடகவியலாளர்களும் இருத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

தாக்குதல் நபர்களில் ஒருவர் அறைக்கு நெருப்பு மூட்டிவிட்டு பின்னால் நகர்ந்தார். பின்னர் பெற்றோல் குண்டு ஒன்றை அறைக்குள் அவர் வீசி தீயை மூட்டி எரியச் செய்தார்.

கட்டடத்தில் புகை மண்டியதால் மேல் மாடியில் இருந்த ஊழியர்கள் அனைவரும் கீழே வந்தனர். புகையினால் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த அவர்கள் வெளியில் வரும் போது தாக்குதல் நடத்தியவர்கள் தாங்கள் தமது செய்தி அறையை அழித்துவிட்டதால் தங்கள் நோக்கம் நிறைவேற்றி விட்டதாகக் கூறிக் கொண்டதைக் கேட்டுள்ளார்கள்.

இரண்டு கார்களில் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் வந்திருந்தார்கள் என்றும் அவர்களில் 12 பேர் இருந்துள்ளனர் என்றும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். ஒரு பகுதியினர் தாக்குதல் நடத்திய போது ஏனைய வர்கள் வெளியில் இருந்துள்ளனர்.

### மூன்று மொழி எஃப் எம் நிலையம்

சியத்த சிங்களம் தமிழ் மொழி அலைவரிசைகளை நடத்துகின்றது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எஃப் எம் நிலையங்களை நடத்துகின்றது. வானொலியின் செய்தி அறை மற்றும் தொலைக்காட்சி செய்தி அறைகள் நாசமாக்கப்பட்டுள்ளன. அவைகள் முற்று முழுதாக அழிக்கப்பட்டுவிட்டன. எமது ஆவணங்கள் யாவும் அழிக்கப்பட்டு விட்டன. நூலகமும் நாசமாக்கப்பட் டுள்ளது. எதுவானாலும் பிரதான கட்டுப்பாட்டறை நாசமடையாமல் இருக்கிறது என்று பெயர் குறிப்பிட விரும்பாத நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதலின்பின்னரும் வானொலி நிலையங்கள் செயல்பட்டன. ஆனால் தொலைக்காட்சி பாதிக்கப்பட்டிருந்தது. தொலைக்காட்சியும் விரைவில் செயல்பட தொடங்கும் என்று அவர் தெரிவித்தார்.

12 பேர் கொண்ட கும்பல் ஒன்று ரி 56 றைபிள் ஆயுதத்துடன் இன்னமும் ராணுவம் பொலிஸினால் நிறைந்து காணப்படும் கொழும்பு நகரில் சுதந்திரமாக சுற்றித்திரிய முடிகிறதென்றால் அது வேதனைக்குரியதாகும். இம் மாதிரி சந்தர்ப்பங்களில் தாக்குதல் நடத்துபவர்கள் தண்டனை பற்றிய பயமில்லாமல் அதனைச் செய்துவிட்டுத் தப்பி விடுகிறார்கள்.

• இந்த சம்பவம் வெளிநாட்டில் அரசின் தோற்றப்பாட்டுக்கு நன்மை புரியமாட்டாது.

கொம்பனி வீதி பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றார்கள். ஊடகங்களுக்கு எதுவும் தெரிவிக்கக் கூடாதென்று பணிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் தமது அதிகாரபூர்வ அதிகாரி ஊடாகவன்றி தகவல் எதையும் கொடுப்பதற்கு அதி காரிகள் மறுக்கிறார்கள். சம்பவம் தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்பதை மட்டுமே தாம் சொல்ல முடியும் என்று அதிகாரி ஒருவர் கூறினார். (ப)

**தமிழில்: கோகுலன்**

# பணிப்பெண் மீதான வல்லுறவு முறைப்பாடு; வழக்கை புலனாய்வுப் பொலிஸ் கையாளும்

கொழும்பு,ஓக 2

நுவரெலியா சாந்திபுரத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தான் பணிபுரிந்த வீட்டின் எஜமானர் - மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி-ஒருவரால் பாலியல் ரீதியில் இம்சிக்கப்பட்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு புலனாய்வுப் பிரிவு பொலிஸாரின் விசாரணைக் குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்டவரால் ஆரம்பத்தில் இந்த முறைப்பாடு மவுண்ட் லெவினியா பொலிஸில் செய்யப்பட்டிருந்தது. ''சரத் மகாத்தயா' என்பவரால் தாம் பாலியல் ரீதியில் இம்சைப் படுத்தப்பட்டதாக அவர் புகார் கூறியிருந்தார்.

இந்த வழக்கு இப்போது புலனாய்வுப் பொலிஸாரின் விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான விசாரணைப் பிரிவின் பொலிஸ் அதிகாரி, இந்த வழக்கு மூடி மறைக்கப்பட்டு வருவதாக இதில் கரிசனையுள்ள சில தரப்புக்களால் தெரிவிக்கப்பட்டு வருவதில் உண்மையில்லை. இப்பொழுது அதில் இரகசிய பொலிஸ் பிரிவுப் புலனாய்வுகளை மேற்கொண்டு வருகிறது என்றார்.

இம்மாதிரி புகார்களின்போது அது சாதாரண ஒரு பொதுமகன் மீது என்றாலும் நாங்கள் உடனடியாக எவரையும் கைது செய்யவோ ஏற்கனவே நாங்கள் செய்துள்ளவற்றுக்கு அதிகமாக வேறெதுவுமோ செய்யமுடியாது என்று பொலிஸ் அதிகாரி கூறினார்.

துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகள் தொடர்பாக எடுக்க வேண்டிய முறையான நடவடிக்கைகளையே பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பொலிஸார் செய்து வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே இந்த நீதிவான் நீதிமன்ற குமஸ்தா ஒருவர் மீது தாக்குதல் நடத்தினார் என்ற வழக்கொன்று இருக்கிறது. இந்தப் பெண் மீதும் இவர் தாக்குதல் நடத்தி இருப்பாரானால் அது பாரதூரமான ஒரு சம்பவம் என்று ட்ரான்ஸ்பெரன்ஸி இன்ரநேஷனல் நிர்வாக பணிப்பாளரும் சிரேஷ்ட வழக்கறிஞருமான ஜே.சி.வெலியமுன தெரிவித்தார். இம்மாதிரி வழக்குகளை கொண்டு நடத்துவதற்கான தைரியமும் சுதந்திரமும் பொலிஸாருக்கு இருக்குமோ என்பதில் தமக்கு நிறைய சந்தேகம் இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

நீதிவான் என்பவரும் ஒரு மனிதன்தான். அவ்வாறான நீதிபதி மீது குற்றச்சாட்டு ஒன்று இருந்தால் அது விசாரிக்கப்பட வேண்டும். அதனை எவரும் மறைக்க முயன்றால் அது ஒரு குற்றமாகும் என்றார் அவர். இந்த வழக்கில் ஏற்பட்டுள்ள தயக்கமும் காலதாமதமும் தமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறினார். (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆடி18 | 03.08.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | : அட்டமி மு.இ.06.55 வரை |
| நட்சத்திரம் | : பரணி பி.இ. 02.13 வரை |
| [illegible] | : 10.34-12.04 வரை |
| [illegible] | : 03.04-04.34 வரை |

## ஈழத்துச் சிதம்பரத்தில் தேவி பெருந்திருவிழா

காரைநகர்,ஓக 2

காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த தேவி பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளது.

இந்த பெருந்திருவிழாவில் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு ரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

பெருந் திருவிழாவை முன்னிட்டு பத்து தினங்களும் யாழ்.நகரில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ்சேவைகள் இடம்பெற உள்ளதுடன் ஆலய சூழலில் உள்ள அறப்பணி நிலையம், மாணிக்கவாசகர் மடாலயம் என்பவற்றில் அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதா அபிஷேகம் காணும் தம்பதிகளை வாழ்த்தி ஆசி பெறுகின்றோம்

நாரந்தனை கர்ணந்தோட்டம் கந்தசுவாமி கோயில் பிரதம குருவும் சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்திகோயில் பிரதமகுருவுமாகிய சிவாச்சார்ய குருமணி சிவஸ்ரீ

## நா.யோகீஸ்வரக்குருக்கள் சுபதாம்பிகைஅம்மா



தம்பதிகளுக்கு இன்று (02.08.2010) திங்கட்கிழமை திருச்சி திருக்கடவூர் அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் சதாபிஷேகம் நடைபெறுவதையிட்டு எல்லாம்வல்ல அத்தியடி விநாயகரின் திருவருள் கிடைக்க அவர்களை வாழ்த்தி வணங்கி அவர்களிடம் இருந்து ஆசி பெறுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

யோ.பிரபாகரக்குருக்கள்
அத்தியடி,
பிள்ளையார் கோயில்,
யாழ்ப்பாணம்.

(101472)

### பாம்பு தீண்டிய இருவருக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை

பளை, கொடிகாமம் பகுதிகளில் பாம்பினால் இருவர் தீண்டப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பளை, தம்பகாமம் வளவு துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்ட திருச்செல்வம் நிலக்ஸன் (வயது - 16) என்பவரும், கொடிகாமம் கண்டி வீதியில் இரவு படம் பார்த்துவிட்டுச் சென்ற வரதராசா சுதன் (வயது 36) என்பவருமே பாம்பினால் தீண்டப்பட்டவர்களாவர்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### புதிய கழிவு நீர் வாய்க்கால்

யாழ்ப்பாணம்-மானிப்பாய் வீதியின் அருகில் கழிவு நீர் வாய்க்கால் அமைக்கப்பட்டு வருகின்றது.

மானிப்பாய் வீதி, சண்டிலிப்பாய் வீதி, ஆகிவற்றின் அருகிலேயே புதிதாக இந்தக் கழிவு நீர் வாய்க்கால் வெட்டப்படுகின்றது. இதனால் மழை காலங்களில் ஏற்படும் வெள்ளம் தேங்காமல் வழிந்தோடக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

துணுக்காய் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ/து)

## பகிரங்க அறிவித்தல்

துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) இடம்பெயர்வின்பின் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளதுடன் கணக்காய்வும் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்க்ளில் ஈடுபட்டவர்களும், கிராமிய வங்கியில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டவர்களும் 2010.08.31 இற்குள் தகுந்த ஆவணங்களுடன் சங்கத்துடன் தொடர்புகொண்டு வருமதி, செல்மதி மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

திருமதி யோ. அழகராணி
பொதுமுகாமையாளர்

(101476)

திரு. இ. புவன்ராஜ்,
கணக்காய்வாளர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தின் தலைவராக இருந்த

### சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்

அவர்கள் 29.07.2010 வியாழக்கிழமை சர்வதேச இந்து மத குருபீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை இட்டு மனமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்.

நயினை.

கைலாசநாதக்குருக்கள்
வாமதேவகுருக்கள் குடும்பத்தினர்.

## காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில்

(ஈழத்துச் சிதம்பரம்)

### வருடாந்த ஆடி - அம்மன் மஹோற்சவம் 2010

உற்சவ விவரம்

| | |
|---|---|
| 03.08.2010 | செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றம் |
| 06.08.2010 | 4ஆம் திருவிழா இரவு 8.30 மணி கைலாயவாகனம் |
| 09.08.2010 | திங்கட்கிழமை ஆடி அமாவாசை |
| 11.08.2010 | புதன்கிழமை காலை 9 மணி இரதோற்சவம் |
| 12.08.2010 | வியாழக்கிழமை மு.ப. 10 மணி தீர்த்தோற்சவம் |

குறிப்பு:
பத்துத் தினங்களும் மகேஸ்வரபூசை இடம்பெறுவதுடன் போக்குவரத்துச் சேவையும் இடம்பெறும்.
தினமும் காலை 8 மணிக்கு அபிஷேகம் மு.ப. 11 மணிக்கு வசந்த மண்டப பூசையும், மாலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.

ஆதீனகர்த்தாக்கள்.

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர்.

(ê/569600)

ஆ.அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்.

## யாழ். மக்களுக்கு வரப்பிரசாதமான நிதி நிறுவனமாக

### ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மென்ஸ் லிமிட்டெட்

(இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டது)



தனது கிளையை தமிழ் மணம் கமழும் யாழ்.மண்ணில்

**இன்று**

கோலாகலமாக ஆரம்பிக்கின்றது.
இடம்: இல. 74, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 9.45

மிகக் குறைந்தகாலத்தில்,
மிகக் குறைவான ஆவணங்களுடன்,
விரைவானதும், தரமானதுமான
சேவையை வழங்குகின்ற உங்கள் பங்காளன்

**TRADE FINANCE & INVESTMENTS LTD.**
**(Approved by the Central Bank of Sri Lanka)**



T.P: 021 222 1898 / 1900
FAX: 0212221899
E-mail: tradefij@sltnet.lk



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 03 |
| 09 | 07 |
| 1938 | 2010 |

அமரர்

### சதாசிவம் பத்மநாதன்

(ஓய்வுபெற்ற கணக்காய்வுப் பரீட்சகர்)

அமைதியின் உறைவிடமாய்
பாசத்தின் சிகரமாய்
எம்முடன் வாழ்ந்த ஆறு வருடங்களில்
எம்மை அன்பால் கட்டிப் போட்ட
எம் அன்பு மாமாவே!
நீங்கள் எம்மைப் பிரிந்து மாதம்
ஒன்று ஆனதுவோ.....
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றோம்

எமது அன்பு மாமா வைத்தியசாலையில் அனுமதித்திருந்தவேளை அவருக்கு வேண்டிய உதவிகள் செய்து அரவணைத்த வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உதவிகள் பல புரிந்த வைத்தியசாலை ஊழியர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (02.08.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ராஜ வீதி,
தோப்பு, அச்சுவேலி.

திருமதி ஆ.ஜெயலக்சுமி
(மருமகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேசு பொருளாக இனப்பெருக்க சுகாதாரம் எனும் தொனிப்பொருளிலான 'உயிர்ப்பு' எனும் நூல் வெளியீடு கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் தியாகி அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் மங்கள விளக்கேற்றுவதை முதற்படத்திலும், நூலை ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த மஹாடமாஜ் வெளியிட்டு வைக்க யாழ்.செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன் பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும், யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்ர இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:-சுகந்தன்).

# வயோதிபர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முதியோர் பராமரிப்புச் சபை ஆரம்பம்

நாவற்குழி,ஒக.2

சமூக சேவைகள் அமைச்சு முதியோர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை எனும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமது பிள்ளைகளினால் நிராகரிக்கப்பட்டு வாழ்வதற்குப் போதுமான அளவு வருமானம் இல்லாத முதியோர்கள் தமது பிள்ளைகளிடம் இருந்து ஏதேனும் பராமரிப்பு நிதியினைப் பெற்றுக்கொள்ள விரும்பின் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்திசெய்து சபைக்குச் சமர்ப்பிக்க முடியும்.

60 வயதிற்கு மேற்பட்ட பெற்றோர்களே பராமரிப்புக் கோருவதற்கு உரித்துடைய முதியோர்கள் எனக் கணிக்கப்படுவர். எனினும் 60 வயதிற்குக் கீழ்ப்பட்ட பெற்றோர் தமது சொந்தப் பராமரிப்பிற்காகப் போதுமான அளவு வருமானத்தைத் தேடிக்கொள்ள முடியாத வகையில் ஏதேனும் உடல் ரீதியான, உளரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளவரெனில் அவர்களும் விண்ணப்பத்தினைச் சபைக்குச் சமர்ப்பிக்க முடியும்.

பராமரிப்பு விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரி தனது வருமானம் மற்றும் ஏனைய விவரங்கள் அனைத்தையும் சரியான விதத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அதேபோன்று பிரதிவாதியாகக் கருதப்படும் பிள்ளைகளின் பெயர்கள், சரியான விலாசம், தொழில் மற்றும் அண்ணளவான மாதாந்த வருமானம் போன்றவை சரியாகக் குறிப்பிடுதல்

வேண்டும்.

இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவம் கிடைக்கப்பட்டதன் பின்பு 2000ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் பிரிவு 25இன் பிரகாரம் சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து விசாரணை செய்ததன் பின்னர் பராமரிப்புப்பற்றி சபை தீர்மானிக்குமென சபையின் உயரதிகர்ரி ஒருவர் தெரிவித்தார். (த-121)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 6 பாடசாலைகளில் நிர்மாணப் பணிகள்

நாவற்குழி,ஒக.2

வடமாகாண கல்வி அமைச்சினால் அறிவுசார் சமூகத்திற்கான கல்வித் திட்டத்திற்குரிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் 6 பாடசாலைகளில் நிர்மாண வேலைகள் நடைபெறவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கரவெட்டி விக் னேஸ்வராக் கல்லூரியின் இரண்டு மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப் படவுள்ளது.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் மூன்று மாடிக்கட்டடம் ஒன்றும், இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றும் நிர்மாணிக் கப்படவுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி யிலும் இரண்டுமாடி, மூன்று மாடிக் கட்டடங்கள் நிர்மாணிக்கப் படவுள்ளன.

வரணி மகாவித்தியாலயத்திலும் இவை போன்று இருகட்டடங்கள் உருவாக்கப்பட வுள்ளன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இரண்டு மாடிக் கட்டடங்கள் இரண்டு நிர் மாணிக்கப்படவுள்ளன.

மன்னார் முருங்கள் மகா வித்தியாலயத்திலும் இரண்டு மாடிக் கட்டடங்கள் இரண்டு அமைக்கப்படவுள்ளன. இத்தகவல் களை வடமாகாண கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-121)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# பதினைந்து பனடோல்களால் படைச்சிப்பாய் நிலை படுமோசம்

தென்மராட்சி,ஒக. 2

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட படைச்சிப்பாய் ஒருவர் 15க்கும் மேற்பட்ட பனடோலை ஒரே தடவையில் உட்கொண்டதால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் உள்ள முகாமில் கடமையாற்றும் சிப்பாயே இவ்வாறு பனடோலை அளவுக் கதிகமாகப் பாவித்துப் பாதிப்புக்குள்ளானவராவார்.

இவரைப் பரிசோதனை செய்த போது டெங்கு நோய் ஏற்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதால் அவர் உடனடியாக கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-207)

# கொட்டடி பழைய மீன்சந்தைப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் துர்நாற்றம்

கொழும்புத்துறை,ஒக2

யாழ்.கொட்டடி பழைய மீன்சந்தைப் பகுதியில் பெருமளவு பொலித்தீன் கழிவுகள் மற்றும் உருளைக்கிழங்கு, மரக்கறிக் கழிவுகள் குவிக்கப்பட்டுப் பல நாள்களாக அகற்றப்படாமல் துர்நாற்றம் வீசி சுகாதாரச் சீர்கேடுகளை விளைவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதி வர்த்தக நிலையங்களில் சேரும் பொலித்தீன் மற்றும் பழுதடைந்த கிழங்கு வகைகள் இவ்விடத்தில் குவிக் கப்பட்டுள்ளன.

கால்நடைகள், பறவைகள் அவற்றை இழுத்துவந்து வீதியில் பரப்புவதால் அவ்வீதியால் பயணிப்போர் பல அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர்.

அதேவேளை கால்நடைகளும் கிழங்குகளுடன் பொலித்தீன் பைகளையும் சேர்த்து உண்பதால் பல நோய்த் தாக்கங்களுக்கு உட்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதேபோன்று கஸ்தூரியார் வீதி சைக்கிள் பாதுகாப்பு நிலையப் பகுதியிலும் குப்பை கூழங்கள் குவிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. (த-135)

# சுறுசுறுப்படையும் 'சுவீப் ரிக்கெற்' வியாபாரம்

யாழ்.குடாநாட்டில் 'சுவீப் ரிக்கெற்' வியாபாரம் மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் களைகட்ட ஆரம்பித்து விட்டது.

பெரும்பாலான சந்தைகளின் வெளிப்புறங்களில் 'சுவீப் ரிக்கெற்' வியாபாரம் நடைபாதை வியாபாரமாக நடைபெறுகின்றது.

சைக்கிளில் ஒலிபெருக்கி இணைத்துப் பாடல்களை ஒலிபெருக்கியபடி ஊர் ஊராகத் திரிந்து 'சுவீப் ரிக்கெற்'றுக்கள் விற்கும் முறையும் உருவாகி வருகின்றது.

மக்களும் சுரண்டல் ரிக்கெற்றுக்களில் கூடுதலாகவும், குலுக்கல் ரிக்கெற்றுக்களில் அடுத்ததாகவும் ஆர்வம் செலுத்துவதைக் காணமுடிகின்றது.

வேலையற்றோருக்குப் புதியதொரு சுயதொழில் முயற்சியாக 'சுவீப் ரிக்கெற்' வியாபாரம் வந்துள்ளதெனக் கூறப்படுகிறது. (த-121)

# நாள்பட்ட நோய்களுக்கு ஆயுள்வேத மருந்து: வலி .கிழக்கில் நோயாளர்களைக் கவரும் மருந்தகங்கள்

கோப்பாய்,ஒக.2

வலி. கிழக்குப் பிரதேச சபையின் கீழ் செயற்பட்டு வரும் இலவச சித்த ஆயுள்வேத மருந்தகங்களில் அண்மைக்காலமாகப் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெற்று பலனடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேச சபையின் கீழ் இருபாலை, நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி, உரும்பிராய் ஆகிய உப பணிமனைகளில் செயற்பட்டு வரும் சித்த ஆயுள்வேத மருந்தகங்களுக்குப் பெருமளவு நோயாளர்கள் வருகை தந்து வரிசையில் நின்று சிகிச்சை பெற்றுச் செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக நீண்ட நாள்களாகத் தொல்லை கொடுக்கும் வாத நோய்கள் மற்றும் பல்வேறு நோய்களுக்கும் இங்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது.

தற்போது பல்வேறு வகையான சித்த ஆயுள்வேத மருந்துகள் அதிகளவில் கிடைப்பதாகவும் இதனால் தமக்கு நாள்ப்பட்ட நோய்கள் பலவும் படிப்படியாகக் குணமடைந்து வருவதாகவும் நோயாளர்கள் தெரிவித்தனர்.

தற்போது இலங்கை அரசாங்கமும் சித்த ஆயுள்வேத மருத்துவத்துறையை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளைத் துரிதகதியில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-72)

# வலிகாம வலய அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம் ,ஒக.2

பிராந்திய சேகரிப்புநிலையம், யாழ்ப்பாணம்-11இற்குட்பட்ட வலிகாமம் கல்வி வலயம்,வடமராட்சி கல்வி வலயம், கோப்பாய் கல்விக் கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சைக் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்ட இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் ஆகியோரை உரிய நேரத்திற்கு இக்கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் [illegible] டுள்ளார். (ஐ)

# அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் 120 பேருக்கு சுயதொழிற் கடன் வழங்கப்படும்

## சமூக சேவைகள் திணைக்களத் திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

கைதடி ,ஒக.2

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் சமூக சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினூடாக 120 பேருக்கு சுயதொழில் மேற்கொள்வதற்கான உதவித் தொகை வழங்கப்படவிருப்பதாக சமூக சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட திட்ட இணைப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

சுயதொழில் உதவித் தொகையைப் பெறும் பயனாளிகளாக தெரிவு செய்யப்படுவோர் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டிருப்பதுடன் அதிக பிள்ளைகளை உடைய, வறிய குடும்பமாகவும் அல்லது உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து வந்து அங்கு மீளச் செல்ல முடியாமல் இருக்கின்ற வறிய குடும்பமாகவும் இருக்க வேண்டும் எனவும் தெரிவு செய்யப்படும். 50 குடும்பங்களுக்கு 30 ஆயிரம் ரூபா வீதமும், பால் நிலை வன்முறையால் பாதிக்கப்பட்ட குடும்பம் எனில் 70 குடும்பங்களுக்கு 20 ஆயிரம் ரூபா வீதமும் சுயதொழிற் கடனாக வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே தகுதியானவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக தத்தமது பிரதேச செயலகங்களுக்குச் சென்று இது தொடர்பாக சமூக சேவை உத்தியோகத்தரோடு தொடர்புகொண்டு உரிய விவரங்களைப் பெறுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (எ-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.C.E (A/L) பரீட்சை - 2010

விசாகா-றோயல்-கண்டி-FWC-கொழும்பு வலய வினாத்தாள்கள் விடைகளுடன் கிடைக் கும்.
காலம்: 03.08.2010 செவ்வாய்க்கிழமை
1.30pm - இரசாயனம், 3.30pm - உயிரியல்.
(கணித, பௌதிகவியல் வினாவிடை உண்டு)
இடம்: Science Hall கன்னாதிட்டி, யாழ்.
பிரவேசம் ஒன்றிற்கு ரூபா 200/=
வடமராட்சி மாணவர்கள் எனது வீட்டில் (புதன், வியாழன் 4pm பெறுக)
தொடர்பு : அழையுங்கள் வித்யா
சுழற்றுங்கள் 0777730838/ 0212264814
வணிக பாட வினாத்தாள்களும் கிடைக்கும்.


# டெங்கு ஒழிப்புக் கூட்டம்

தென்மராட்சி, ஓக.2

தென்மராட்சிப் பிரதேச திணைக்களத் தலைவர்களுக்கான டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் படையினர், பொலிஸார் உட்பட பிரதேசத்தில் உள்ள அனைத்துத் திணைக்களத் தலைவர்கள் என்போர் கலந்து கொண்டனர். சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரும் பிரதேச செயலகத்தினரும் இணைந்து இக் கூட்டத்தை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது.


## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 43
திகதி - 31.07.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: P — அதிர்ஷ்ட இலக்கம்: 03 — வெற்றி இலக்கம்: 1 4 7 1 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P | 03 | 1 | 4 | 7 | 1 | 9 | ரூ. 14,502,379.00 | பரிசு - |
| 1 பரிசு | | 03 | 1 | 4 | 7 | 1 | 9 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 1 | 4 | 7 | 1 | 9 | ரூ. 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | | | | 4 | 7 | 1 | 9 | ரூ. 10,000.00 | பரிசு 25 |
| 4 பரிசு | | | | | 7 | 1 | 9 | ரூ. 1,000.00 | பரிசு 256 |
| 5 பரிசு | | | | | | 1 | 9 | ரூ. 50.00 | பரிசு 2479 |
| 6 பரிசு | | | | | | | 9 | ரூ. 20.00 | பரிசு 23753 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 1 | 4 | 7 | 1 | | ரூ. 1,000.00 | பரிசு 27 |
| 8 பரிசு | | | 1 | 4 | 7 | | | ரூ. 100.00 | பரிசு 244 |
| 9 பரிசு | | | 1 | 4 | | | | ரூ. 50.00 | பரிசு 2472 |
| 10 பரிசு | P | | | | | | | ரூ. 20.00 | பரிசு 9552 |
| 11 பரிசு | P | 03 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1113 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,882,350.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.14,865,219.00


## விபத்தில் சிக்கி தபால் ஊழியர் காயம்

நவாலி,ஓக.2

ஆனைக்கோட்டையில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் நவாலியைச் சேர்ந்த தபால் ஊழியரான ஈஸ்வரன் என்பவர் கால் பாதம் பிளந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் ஆனைக்கோட்டைமூத்த நயினார் ஆலயத்திற்குச் சமீபமாக இடம் பெற்றுள்ளது.

இவரை மோதிய மோட்டார் சைக்கிள் அவ்விடத்தில் நில்லாது வேகமாக சென்று மறைந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (எ-100)

## கல் தடுக்கியதில் கால் முறிந்தது

கைதடி,ஓக.2

தனது பேரப்பிள்ளையின் பூப்புனித நீராட்டுவிழாவுக்கு பொருள்கள் வாங்குவதற்காகச் சைக்கிளில் சென்றவர் கல் தடுக்கி வீழ்ந்ததினால் இடது முழங்கால் எலும்பு முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

இச் சம்பவம் கைதடி கிழக்கில் இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவலை திரவியம் ( வயது67) என்பவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (எ-288)

## கூட்டங்கள்

காரைநகர்,ஓக.2

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது. (201-250)

* * *

தென்மராட்சி,ஓக.2

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் இக்கூட்டம் நடைபெறுமென சகல திணைக்களத் தலைவர்களுக்கும் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (எ-207)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.2

ஆனைக்கோட்டை பிரதேசத்தில் சிறுவர் மட்ட கண்காணிப்பு குழு தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கூட்டம் ஒன்று நடைபெற்றது.

சிறுவர்களது தேவை, கல்வி என்பன பற்றி கலந்துரையாடுவதற்காகவே இக் கூட்டம் நடைபெற்றது.

கிராம உத்தியோகத்தர் நிஷாந்தன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மேரி ஸ்ரெலா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சிறுவர் நலன் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-314)






## சிவகாளி ஜோதிடம்

இந்தியாவின் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்.

### மைஞ்சுநாத சுவாமி

077 2624729 - 077 2699373

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப்போகின்றவை பற்றிய விவரங்களை பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப்பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்து சாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விசேடபயணம், எதிரிகள் கண்திருஷ்டி, கஷ்ட, நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம்,பெண்பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்துகொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன்பெறுங்கள்.

கடைச்சாமி கோயில் ஒழுங்கை,
211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(கொழும்பு மூக்குக்கண்ணாடிக்கடைக்குப் பின் வீடு.)

Kaddaychchamy Kovil Lane,
No.211, Navalar Road, Jaffna. (Colombo Opticians Back House)

கைரேகை ஜோதிடம் பார்க்கும் நேரம்: காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு — உதிர்வு
1952.08.30 2010.07.30

### திருமதி சிவராசா கமலம்

எம்மை யெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது குடும்ப தலைவியின் மரணச் செய்தகேட்டு ஓடோடிவந்து பல்வேறு வழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை கூறிக் கொள்வதோடு

இன்று (02.08.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில்நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## சேவை நலன் பாராட்டு



எமது பாடசாலையில் 21 ஆண்டுகள் சேவை செய்து இன்று (02.08.2010) தனது சேவையில் இருந்து ஓய்வு பெறும் கணித ஆசான்

### திரு.யோசவ் யோசுதாசன்

[பயிற்றப்பட்ட விசேட கணிதம் இ.ஆ.சே.தரம் - 1]

அவர்களையும் அவர்தம் சேவையையும் பாராட்டி வாழ்த்துவதில் பாடசாலைச் சமூகத்தினராகிய நாம் பெருமையடைகிறோம். மேலும் அவர் ஓய்வுக் காலத்தில் நோய் நொடிகள் இல்லாது சீரும் சிறப்பும் பெற்று குடும்பத்தாருடன் சுகமாக வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

### ஆசிரியரின் சேவைக்காலம்

1. 22.08.79 - 31.01.83 - மன்/ கருங்கண்டல் றோ.க.த.க. பாடசாலை
2. 01.02.83 - 31.12.84 - யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
3. 01.01.85 - 14.01.87 - முல்/ உடையார் கட்டு கனிஷ்ட அ.த.க. பாடசாலை
4. 15.01.87 - 30.06.88 - முல்/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்
5. 01.07.88 - 31.12.88 - முல்/ அம்பலவன் பொக்கணை அ.த.க.பாடசாலை
6. 01.01.89 - 31.03.89 - முல்/ விஸ்வமடு அ.த.க. பாடசாலை
7. 01.04.89 - 01.08.2010 - யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், சங்கானை.

வாழ்த்துவோர்:
ஆசிரியர், ஊழியர் நலன்புரிச் சங்கம்.

(101331)

துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் அவர்களின்

## நூல் அறிமுக விழா

இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திப் பிரச்சினைகள் ஓர் சமகால மீளாய்வு

காலம் : இன்று (02.08.2010) திங்கட்கிழமை
நேரம் : பிற்பகல் 2 மணி
இடம் : நூலகேட்போர் கூடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
தலைவர் : பேராசிரியர் என்.சண்முகலிங்கன் (துணைவேந்தர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன்
(முன்னைநாள் கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், முதல்வர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம்)


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொருளியல் துறையினர்,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

(101457)

## நெஞ்சைவிட்டுஅகலாத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 06 ★ 11 ★ 1983



இறைவனின் அடியில் 02 ★ 08 ★ 2008

### செல்வன் பீற்றர் நிறஞ்சன்

(மாணவன் - புனித பத்திரிசியார் கல்லூரி)

பாச மகனே! உன் அமைதியான பேச்சும்
அழகான தோற்றமும் - நித்தம் சிரித்த முகமும் -எம்மால்
மறக்க முடியவில்லை. ஆண்டுகள் இரண்டு கடந்தும்

வெளிநாடு புறப்பட்ட உனக்கு நேர்ந்த கதி தெரியவில்லை.
வந்த செய்தியும் தெளிவில்லை. மெய் உரைக்க யாருமில்லை.
நிலையற்ற வாழ்வைத் துறந்து நிலையான வாழ்வில் நுழைந்த -நின்
ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகின்றோம். எந்நாளும்.

இல.1, சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.மாவட்ட பாதுகாப்புப்படை தலைமை அலுவலக சிவில் விவகார மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகத்தில், வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கான புலமைப் பரிசில் கொல்லைப்புற கோழி வளர்ப்பு ஊக்குவிப்பு நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைத் தலைமை அலுவலக சிவில் விவகார மற்றும் மக்கள் தொடர்பு அலுவலக அதிகாரி சி.வடுகொட உரை நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மாணவி ஒருவருக்குப் புலமைப் பரிசில் வழங்குவதையும், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி வி.அமிர்தலிங்கம் கோழிக் குஞ்சுகளை பயனாளி ஒருவருக்கு வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: டிலீப், தமிழினியன்)

# அபிவிருத்தியில் பின் தங்கிய நெடுந்தீவின் நிலையை மாற்றியமைப்பதற்குக் கூட்டமைப்பு பாடுபடும்

## சரா எம்.பி.தெரிவிப்பு



சரியான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படாததால் நெடுந்தீவுப் பிரதேசம் பின் தங்கிய பிரதேசமாக இருப்பதாக எனக்கு தோன்றுகிறது. இதனை மாற்ற நாம் முயல்வோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன் தெரிவித்தார். அண்மையில் நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு நெடுந்தீவுப் பிரதேச செயலகத் தொகுதியில் அமைந்துள்ள நடமாடும் நீதிமன்றக் கட்டடத்தில் பிரதேச செயலக ஊழியர்களுடனான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்றுதான் முதற்தடவையாக நான் இங்கு வந்திருக்கின்றேன். இதற்கு முன்னர் இங்கு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியும். அதன் காரணமாக இங்கு செல்வதை தவிர்க்குமாறு பலர் கேட்டிருந்தார்கள். இருப்பினும் நானும் எனது சக நாடாளுமன்ற உறுப்பினரும் இங்குள்ள மக்களின் பிரச்சினையை எம்மால் இயலுமானதை தீர்க்கவே வந்தோம்.

இங்குள்ள மாணவர்கள், பொதுமக்கள் பலரையும் சந்தித்துக் கதைத்தோம். அவர்கள் அனைவரும் முதலில் கூறியது இந்த குமுதினிப் படகுச் சேவையின் குறைபாடுகள் பற்றியே. இந்தப் படகு கால்நூற்றாண்டுக்கு மேலாக சேவையில் ஈடுபடுவதாகவும், நடுக்கடலில் சில வேளைகளில் பழுதடைவதாகவும் எம்மிடம் தெரிவித்தார்கள். நாங்களும் இன்று அந்தப் படகில்தான் இங்கு வந்தோம். எமக்கும் மக்கள்படும் அவலங்கள் தெரிந்தது.

நெடுந்தீவு மாணவர்கள் ஏனைய பிரதேச மாணவர்களைப் போன்ற வசதிகளை அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் இதுவரை கல்விச் சுற்றுலா எதனையும் மேற்கொண்டு வெளியிடங்களுக்குச் செல்லவில்லை. ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் தாம் விரும்பிய துறையினைத் தேர்ந்தெடுத்து கற்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அவ்வாறு கற்பதாயின் கூட அவர்கள் வேறு இடங்களுக்கே செல்ல வேண்டி ஏற்படுகின்றது. முன்னர் 15ஆயிரம் மக்கள் வாழ்ந்த இந்த நெடுந்தீவில் தற்போது 5ஆயிரம் மக்களே வாழ்கின்றனர் என்பது வேதனையான விடயமே.

இவற்றையெல்லாம் வைத்து நோக்கும்போது இந்த நெடுந்தீவுப் பிரதேசமும் கிளிநொச்சியில் தற்போதுள்ள நிலைமை போன்றுள்ள அபிவிருத்தி ரீதியாகப் பின் தங்கிய பிரதேசமாகவே எனக்குத் தெரிகிறது. இங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும்.

எங்களுடன் மக்கள் துணிந்துவந்து கதைக்கப் பயப்படுகின்றார்கள். நாங்கள் சென்ற பின்னர் இங்குள்ள மக்களை யாராவது வந்து அச்சுறுத்தக்கூடும் என்ற அச்சம் மக்களுக்கு இருக்கின்றது. அந்தப் பயம் அகலவேண்டும். அதனை இல்லாமல் செய்வதற்காகவே நான் முயற்சி செய்து வருகின்றேன். இனிவரும் காலங்களில் அடிக் கடி இந்தப் பிரதேசத்திற்கு விஜயம் செய் வேன்- என்றார். (எ-319)

### மானிப்பாய் பகுதியில் ஆதன மீள் மதிப்பீடு

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மானிப்பாய் கிராம (ஆனைக்கோட்டை) உப அலுவலக ஆதன மீள் மதிப்பீட்டு பணிகள் வரிமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே இப்பிரதேச சபைக்கு உட்பட்ட மக்கள், திணைக்கள அதிகாரிகளுக்கு வேண்டிய ஆதனங்களுடன் தொடர்பான தகவல்களை வழ்ங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு வலி. தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-323)


# மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி, ஓக.2

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு தகைமையுள்ள தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் தரம்-Iஐச் சேர்ந்தவர்களும் கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டத்தையுடைய இலங்கை அதிபர் சேவை தரம்II-I ஐச் சேர்ந்தவர்களும் நியமிக்கப்படும் காலத்திலிருந்து தொடர்ச்சியாக மூன்று வருடங்களுக்குக் குறையாமல் கடமையாற்றக் கூடிய வயதினை உடையவர்களும் விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஓகஸ்ட் 5ஆம் திகதிக்கு முன்னர் அதிபர், கோட்டக்கல்வி அலுவலர் ஆகியோரின் சிபார்சுடன் அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (எ-207)




கோப்பாய், ஓக.2

நீர்வேலி மேற்கு மாசிவன் மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறுகின்றது.

எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை ஆடிப்பூர உற்சவத்துடன் திருவிழா நிறைவுறும். (204-72)

* * *

கோப்பாய், ஓக.2

சிறுப்பிட்டி வடக்கு, ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா இடம்பெற்று எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை திருவிழா நிறைவுறும்.

திருவிழாக்காலங்களில் தினமும் கவிமணி க.ஆனந்தராசா தெய்வீகப் பேருரை நடைபெறும். (204-72)




### மூடப்பட்ட வீதி திறப்பு

குருநகர் "சீநோர்" சந்தைப் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளமாக புதிய கடற்கரை வீதி மக்கள் பாவனைக்காக இன்று முதல் திறந்து வைக்கப்படுகிறது.

கடந்த 15 வருடகாலமாக உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த இந்த வீதியை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். (க-319)

# பெற்றோருக்கு கஷ்டத்தைக் கொடுப்பதை விடுத்து கல்வியில் கவனமெடுக்க மாணவர்கள் முயல வேண்டும்

## கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் உரை

கோப்பாய், ஓக.2

பெற்றோர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்காமல் மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்து உரிய காலத்தில் கல்வியைச் சிறப்பாகக் கற்றுக்கொள்ள முயலவேண்டும். புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் கடந்தவார இறுதியில் நடைபெற்ற உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்ஷ்மி இராசநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தமது உரையில்-

இலங்கையில் நடைபெறும் பரீட்சைகளிலே மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையே. இதில் வெற்றிபெறுவதென்பது மிகவும் கடினமான உழைப்புடன் கற்பதிலேயே தங்கியுள்ளது.

ஆனால் இன்று பல மாணவர்கள் கைத்தொலைபேசி மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் மோகம் கொண்டு அவற்றைப் பெறுவதற்கான வழிவகைகளைத் தேடுவதற்காகப் பெற்றோரை நச்சரிப்பதுடன் அவர்களை வற்புறுத்தியும் வருகின்றனர். இதனால் பல்வேறு குடும்பப் பிரச்சினைகள் எழுந்து, கற்றல் செயற்பாடு பாதிப்படைவதுடன் மாணவனின் எதிர்காலமும் கேள்விக்குறியாகின்றது.

உலகளவில் இன்று பல்கலைக்கழக கல்வியில் பல புதிய துறைகள் உருவாக்கப்பட்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். அத்துடன், வெளிநிலைத் தேர்வு நாடியாக அதிகமானோர் தம்மை பதிவு செய்து உயர் கல்வியைக் கற்று வருகின்றனர். இதன் மூலம் உயர் நிலையான வேலை வாய்ப்புக்களையும் பெற்றுள்ளனர்.

அடிப்படைக் கல்வியை உரிய காலத்தில் பெற்றுச் சிறந்த பெறுபேற்றை அடைவதன் மூலம் மாணவர்களுக்குப் பல்கலை அனுமதி கிடைக்காவிடினும் பல்வேறு உயர் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் இப்போது கிட்டியுள்ளன.

எமது நாட்டில் நல்லொழுக்கமுள்ள சமுதாயத்தை கட்டியெழுப்ப மாணவர்கள் தமது மனதை ஒரு நிலைப்படுத்தி கற்கப் பழக வேண்டும். இதற்காகப் பெற்றோர், ஆசிரியர், பெரியோர் ஆகியோரின் அறிவுரைகளைப் பின்பற்றி அவர்களை மதித்து, வாழ வேண்டும்- என்றார்.

மாணவர் மன்றத் தலைவர் செல்வன் சி.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் இ.இராஜமகேந்திரன் மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள் என்போர் கலந்து நிகழ்வினைச் சிறப்பித்தனர். (எ-72)

# சிறுவெங்காயம் கூடிய விளைச்சல்; குடாநாட்டு விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஓக.2

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் தற்போது வெங்காயப் பயிர்ச் செய்கை சூடு பிடித்துள்ளது.

இதற்கு முன் விவசாயிகள் புகையிலைப் பயிர்ச்செய்கையிலேயே ஆர்வத்தோடு ஈடுபட்டனர். தற்போது சிறு வெங்காயப் பயிர்ச்செய்கையின் பக்கம் தமது கவனத்தை திருப்பியுள்ள விவசாயிகள் பெருமளவில் சிறுவெங்காயத்தைப் பயிரிட்டு அறுவடை செய்து வருகின்றார்கள்.

தென்னிலங்கையில் சிறு வெங்காயத்துக்கு அதிகமான கேள்வி காணப்படுவதாலேயே விவசாயிகள் வெங்காயச் செய்கையில் நாட்டம் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதனால் வெங்காயத்தின் விளைச்சல் அதிகரித்து பெரும் விளைச்சலையும் விவசாயிகள் பெற்றுள்ளார்கள்.

சிறு வெங்காயம் ஒரு கிலோ 40ரூபாவுக்கு தற்போது விற்கப்படுகின்றது. வெளிமாவட்டங்களிலிருந்து வருவோர் பெருமளவில் சிறுவெங்காயத்தைக் கொள்வனவு செய்ய முண்டியடிப்பதால் சிறு வெங்காயத்தின் விலை உயர்வடையலாமென விவசாயிகளால் எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-313-318)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேஷம்



கவனக் குறைவு, மறதியால் அவதிப்படலாம். உங்களிடம் உதவி பெற்ற ஒருவரே உங்களை விமர்சனம் செய்யலாம். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். கணவன் மனைவி இடையே சிறு சச்சரவுகள் உண்டாகலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம்.

### இடபம்



உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். குடும்ப உறுப்பினர்களின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். அலைச்சல்கள் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

### மிதுனம்



சிலரிடம் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் பெறலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் தெம்பு தரும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். நேரம் காலம் பார்த்து சில வேலைகளைச் செய்வீர்கள்.

### கடகம்



மறைமுக எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல திட்டமிடுவீர்கள். உங்களைப் பார்த்து அயலார் பொறாமைப்படலாம். மற்றவர்களுக்காக உங்களுக்கு பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். ஒவ்வாத பண்டங்களை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு வயிறு உபாதைகளுக்கு ஆளாகலாம்.

### சிங்கம்



ஏட்டிக்குப் போட்டியாகப் பேசி மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் ஏதாவது ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உடல் உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறையலாம். சில பொருள்களை எங்காவது மறந்து வைத்து விட்டு தேடலாம்.

### கன்னி



வெறுப்பு, சலிப்பு இல்லாமல் உற்சாகமாக செயற்படும் நாள். உறவினர் ஒருவருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சிலரை உபசரிப்பதற்காக கணிசமான பணத்தை செலவிடலாம். உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கலாம். பரபரப்பாக செயற்படும் நாள்.

### துலாம்



பார்க்கச் சென்ற நண்பர் ஒருவரை பாதையில் சந்திக்கலாம். இரண்டு நாள்களுக்கு முன் எதிர்பார்த்த பணவரவு ஒன்று இன்று கைக்கு கிடைக்கலாம். இதுவரை உங்களிடம் உதவி கேட்காத ஒருவர் திடீரென கேட்கலாம். கடந்த கால சம்பவம் ஒன்றை அசை போட்டுப் பார்த்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள்.

### விருச்சிகம்



நீங்கள் சொல்லியதைக் கேட்காமல் சிலர் ஏட்டிக்குப் போட்டியாக செயல்படலாம். ஒரு விடயத்தில் சந்தோஷ அனுபவத்தையும், மற்றொரு வகையில் சங்கடங்களையும் சந்திக்கலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். உங்களைப் பாராட்டிப் பேசி சிலர் வேலைகளை முடிப்பர். இறை வழிபாடு அமைதி தரும்.

### தனுசு



பல நாட்களாக எதிர்பார்த்த பணவரவு வரும். உறவினர்கள் சிலருக்கு அவர்கள் கேட்காமலேயே சில உதவிகளைச் செய்வீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். உங்களுக்கு வேண்டியதை சாதிக்க மற்றவர்களை நச்சரிப்பீர்கள்.

### மகரம்



பிறர் உதவியுடன் சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளுக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். கல்மனம் படைத்த சிலரிடமும் கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். குடும்பத்தினருக்கு தெரியாமல் ரகசியமாக சிலவற்றை செய்வீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிட கணிசமாக செலவு செய்வீர்கள்.

### கும்பம்



விளையாட்டாக செய்த வேலை ஒன்று விவகாரமாகி விடலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். பெண்கள் பிறந்த வீட்டின் பெருமைகளைப் பேசுவர். கேளிக்கை,கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். வாக்குவாதம் தவிர்க்கவும்.

### மீனம்



நினைத்தது நினைத்தது போல நடக்கும். ஆபத்தான பொருள்களை கவனமாக கையாள வேண்டும். சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகலாம். எதிர்பாராத பணவரவுகள், பொருள் வரவுகளைப் பெறலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகிவிடும். மதிப்பு,கௌரவம் அதிகரிக்கும்.


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 560

திகதி 2010/07/31

சுப்பர் இலக்கம் 19

வெல்லப்பட்ட இலக்கங்கள் 18 30 34 43

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 28,162,826.40 வீகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீகிதம் | 12 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீகிதம் | 223 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீகிதம் | 453 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீகிதம் | 11,300 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீகிதம் | 6,451 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 162,236 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 25,947 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ.7,650,700.00

சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 28,323,550.40

தேசிய லொத்தர் சபை



## மாபெரும் ஆடித்தள்ளுபடி
## குமரன் சில்க்ஸ்

இந்தியன் சீக்குயின்ஸ் சாறி வகைகள், துணி வகைகள், இந்தியன் கொட்டன் சாறி வகைகள், பட்டுச்சாறி வகைகள், சல்வார் வகைகள், சர்வார் துணி, சிறியோர்களுக்கான சூட் வகைகள், கவுண் வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ் வகைகள், ஆண்கள், பெண்களுக்கான ஜீன்ஸ் வகைகள், டெனிம் ஜீன்ஸ் வகைகள், சூட்டிங் ஆண், பெண்களுக்கான ரீசேட் வகைகள் அனைத்தையும் 15% இருந்து 35% வரை விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.



★இச்சலுகை 19.07.2010 முதல் 10.08.2010 வரை மட்டுமே!

அதிரடி விலைக்கழிவு

இல-02A,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(101460)


## சாரணிய வழிகாட்டுநர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக.2

உலக பெண் சாரணிய நூற்றாண்டு விழா பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப.1மணி தொடக்கம் 4மணி வரை யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும்.

இந்தக் கலந்துரையாடலில் சாரணிய வழிகாட்டுநர் (ஆசிரியர்கள்) அனைவரையும் சமுகமளிக்குமாறு வடமா காண ஆணையாளர் திருமதி என்.தர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-323)

## வீதிக்கு விமோசனமில்லை

யாழ்ப்பாணம், ஒக.2

பண்டத்தரிப்பு-சண்டிலிப்பாய் பிரதான வீதி மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது.

எனினும் இவ்வீதியைப் புனரமைப்புச் செய்வதற்காக கற்கள் கொண்டுவந்து வீதியோரமாகக் கொட்டப்பட்ட நிலையிலும் கூட புனரமைப்புக்கான எந்த வேலையும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. அத்துடன் வீதியோரமாகக் காணப்படும் இந்தக் கற்குவியல்களால் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திச்செல்ல முடியாமல் விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக் காணப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-313-318)

## குப்பை கோட்டுவது ஏனோ?

யாழ்ப்பாணம், ஒக.2

சிவன் வீதியும், கே.கே.எஸ்.வீதியும் சந்திக்கும் இடத்தில் கழிவுப் பொருள்களை அவ்வீதியில் உள்ளவர்கள் கொட்டிச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

மாநகரசபை ஊழியர்கள் எப்போதும் இவ்வீதியைச் சுத்தமாக்கி வைத்திருக்கின்றபோதும் அவ்வீதியில் இயங்கிவரும் கடைகளின் உரிமையாளர்கள் சிலர் தமது கடையில் உள்ள கழிவுப்பொருள்களை இவ்வீதியில் கொண்டுவந்து போடுவதால் வீதியெங்கும் குப்பையும் துர்நாற்றமயமுமாகக் காணப்படுகிறது. அத்துடன் வீதியால் வாகனங்கள், பாத சாரிகள் செல்வதிலும் பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(எ-314-318)


## தவறிவிட்டது

கிளாக்கர் வீதி, பத்தமேனி, அச்சுவேலி என்னும் முகவரியுடைய காசிலிங்கம் சிறிகந்தகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (502553321V) கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்திக்கும், யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அடையாள அட்டையில் குறிப்பிட்ட விலாசத்திற்கு அல்லது தொலைபேசி: 0776859237 உடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2143 திகதி 31-07-2010

ஆங்கில எழுத்திற்கும் I

வெற்றி எண்கள் 22 42 52 67

போனஸ் இல: 46

ஜக்பொட் பரிசு ரூ. 15,908,525/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 164995 | 20/- | 3,699,900/- |
| 2 இல | 13235 | 100/- | 1,323,500/- |
| 3 இல | 270 | 1,000/- | 270,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7249 | 40/- | 289,960/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 520 | 1,000/- | 520,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,908,525/- | - |
| 1 இல + போனஸ் இல | 8856 | 100/- | 885,600/- |
| 2 இல + போனஸ் இல | 406 | 500/- | 203,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 338 | 200/- | 67,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,778,060/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 215913 | | 10,378,060/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 302166220-5-49 |
| யாழ்ப்பாணம் | 302183807-7-32 |
| திருகோணமலை | 302164191-1-22 |
| மட்டக்களப்பு | 302183884-6-18 |
| காலி | 302168596-9-36 |
| நுவரேலியா | 302164856-2-25 |
| மாத்தளை | 302164161-5-29 |
| பதுளை | 302166418-8-34 |
| கண்டி | 302164783-9-41 |
| புத்தளம் | 302162126-4-10 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 16,413,125/-

புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு


அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

புஞ்சிபன் பிலேஸ், கொழும்பு - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வெற்றித் தேர்வு விசேட கருத்தரங்குகள் நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் கே.விஜயானந்தமூர்த்தியின் அழைப்பின்பேரில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன், வளவாளர் கே.தவயோகராஜா ஆகியோர் திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரியில் நடத்திய கருத்தரங்கில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன், வளவாளர் கே.தவயோகராஜா ஆகியோர் கருத்தரங்கில் கருத்துரை வழங்குவதையும், கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# கிழக்கு மக்களின் குறைகளைக் கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு மக்கள் குழுக்கள்!

## மட்டு, அம்பாறையில் மாவை நடவடிக்கை

மட்டக்களப்பு, ஓக 2

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அபிவிருத்தி மற்றும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் ஆகியவற்றுக்குத் தீர்வுகாணும் இலக்குடன் அரசியற் கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்சமயம் கிழக்கு மாகாணத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் அவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார்.

இந்தச் சந்திப்புக் குறித்து அவர் நேற்று முன்தினம் உதயனுக்குத் தெரிவித்தமை வருமாறு:-

மட்டக்களப்பில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று எமது ஆதரவாளர்களையும் பொதுமக்களையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகிறேன்.

கட்சி அரசியலுக்கு அப்பால் நிர்வாகக் குழுக்களை அமைத்து மக்களின் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்க வசதியாக இந்தக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

பிரதேச செயலகம் அமைத்தல், தொகுதி நிர்ணயம், அபிவிருத்தி போன்ற விடயங்களில் மக்களின் கருத்துக்களைப் பெறுவதே இதன் முக்கிய நோக்கமாகும். மக்களின் தேவைகளை கண்டறிந்து அவற்றை தீர்க்கும் வழிகளை இனங்காணப் பிரதேச வாசிகளைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படுகின்றன - என்றார். (ஒ-ஐ)

# மீராகேணி பிரதேசத்தின் சாதனையாளர் கௌரவிப்பு

ஏறாவூர் மீராகேணி பிரதேச சாதனையாளர்கள் அண்மையில் மீராகேணியில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள். விருதுகளும் வழங்கப்பட்டன.

அகமட்பரீட் விளையாட்டுக்கழகம், மீராகேணி கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து இவ்விழாவிற்கு ஏற்பாடுகள் செய்திருந்தன.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கே.எம். பைசர் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார். சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மீராகேணிப் பிரதேசத்திலிருந்து இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ள எம்.எச்.எம். றமீஸ், வை.எம். ஆசாத், ஏ.பி.எம்.ஹக்கீம், எம்.எவ். பைறூஸ், எம்.சஹீரா பர்வீன், ஐ.எவ்.சிறாஜா ஆகிய மாணவர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி சிறப்பு வகுப்புக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டு, ஏறாவூர் நகர பிரதேசசபைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள எம்.எச்.எம். ஹமீம், மிராகேணி பிரதேச சமூகசேவை முன்னோடிகளாகத் திகழ்ந்துவரும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கே.எம்.பைசர், செயலாளர் யூ.ஏ.லத்தீத், கிராமசேவை உத்தியோகத்தர் வி.ரி.எம். இப்றாஹிம் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை, இப்பிரதேச அபிவிருத்திக்காக உழைத்துவரும் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கிராமமக்களால் நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். (ளி)

# வைத்திய அத்தியட்சகரை இடமாற்றக் கோரிக்கை

அம்பாறை, ஓக 02

கல்முனை வடக்கு ஆதாரவைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அத்தியட்சகரை காலம் தாழ்த்தாது இடமாற்றம் செய்யுமாறு அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் மகஜர் மூலம் சுகாதார அமைச்சரைக் கோரியுள்ளது.

நிர்வாகத்திறனும், ஆளுமையுமிக்க வைத்திய அத்தியட்சகர் ஒருவரை புதிதாக நியமனம் செய்து, பழம் பெருமை மிக்க இந்த வைத்தியசாலையின் சிறந்த சேவைக்கு வழிவகுக்குமாறும் மேற்படி சங்கம் அதில் வலியுறுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் சார்பில் தலைவர் செயலாளர் ஆகியோரால் ஒப்பமிடப்பட்டு சுகாதார அமைச்சருக்கு இம்மகஜர் அனுப்பப்பட்டுள்ளது. (ளி)




# ஊவா மாகாணசபையிடம் தமிழர்கள் எதனையுமே எதிர்பார்க்க முடியாது

## ஐ.தே.க.உறுப்பினர் வேலாயுதம் ஆதங்கம்

பதுளை, ஓக 02

ஊவாமாகாண விளையாட்டு விழாவுக்கான அழைப்பிதழ் தனிச் சிங்களத்தில் அச்சிடப்பட்டமை குறித்து மாகாணசபை அமர்வில் ஆட்சேபனையும், ஆதங்கமும் வெளியிடப்பட்டுள்ளன.

''ஒரு விழாவுக்கான அழைப்பிதழைக் கூட தமிழில் வெளியிட முடியாத இந்தச் சபையிடம் தமிழ் மக்கள் எதையுமே எதிர்பார்க்க முடியாது''

- இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார் மாகாண சபையின் ஐ.தே.க. உறுப்பினர் கே. வேலாயுதம் .

சபைத் தலைவர் ஹேமா ரட்ணாயக்க தலைமையில் இடம்பெற்ற இம்மாத அமர்வில் வேலாயுதம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''ஊவா மாகாண சபையில் ஆரம்பம் தொட்டே தமிழ் மொழிபெயர்ப்பு அவசியம் என்பதை வலியுறுத்தி வந்திருந்தேன். ஆனால், அதை இச்சபை கவனத்தில் கொள்ளவில்லை. பிரேரணைகள் மூலம் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. அதனாலேயே எனக்கு பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்குத் தயக்கமாக உள்ளது.

ஏற்கனவே கதிர்காமம் உற்சவம் தொடர்பான அழைப்பிதழ் எனக்குக் கிடைத்தது. அது தனிச்சிங்கள மொழி மூலமே அமைந்திருந்தது. அது குறித்து எனது அதிருப்தியை வெளியிட்டேன். அது சபையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் மாகாண விளையாட்டு விழாவுக்கான அழைப்பிதழ் கிடைத்தது. அதுவும் தனிச் சிங்களத்திலேயே இருந்தது. ஒவ்வொரு முறையும் அதிருப்தி வெளியிடுவதுதான் எனது வேலை.

இரு மொழி கொள்கையைக் கூடப் பின்பற்றத் திராணியற்ற இந்த மாகாண சபையிடமிருந்து எம்மால் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?''- இப்படி வேலாயுதம் வினா எழுப்பினார்.

இதற்குப் பதிலுரைத்த சபைத் தலைவர் ஹேமா ரட்ணாயக்க கூறியவை வருமாறு:-

''வேலாயுதம் முன்வைத்த விடயங்களை கவனத்தில் எடுத்துள்ளேன். தமிழ், சிங்களம் என்ற இருமொழிக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். இனிமேல் தனிச் சிங்களத்தில் எந்தவொரு விடயமும் அமையாது. தமிழ் மொழிபெயர்ப்பு அவசியம் இடம் பெறும்.

அதேவேளை, சபையில் முன்வைக்கப்படும் பிரேரணைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டது. நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் அனைத்தும், அதற்குப் பொறுப்பான மத்திய அரசின் அமைச்சரைச் சென்றடைகின்றன. அவை மத்திய அமைச்சு மூலம் நிறை வேற்றப்படுகின்றன. தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவில்லை என்று கூறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது''- இப்படி ரட்ணாயக்க பதிலுரைத்தார். (ளி)




# பிரேதப்பெட்டிக்குள் சாராயம்

பதுளை, ஓக 02

பதுளை, பரணகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிரேதப்பெட்டிக்குள் வைத்து மதுபானம் விற்பனை செய்துவந்த நபரொருவருக்கு வெலிமடை நீதிமன்ற நீதிவான் துமிந்த முதுன்கொட்டுவ 60,000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

பரணகம பகுதியிலுள்ள பிரேதப்பெட்டி விற்பனை நிலையம் ஒன்றில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றது எனப் பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். இதனையடுத்து அந்நிலையத்தை சுற்றிவளைத்த பொலிஸார் பிரேதப் பெட்டிக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவான மதுபானப் போத்தல்களைக் கைப்பற்றினர்.

சம்பந்தப்பட்ட நபர் நீதிமன்றத்தில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். (ளி)

# உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட கலை நிகழ்வு

கொழும்பு, ஓக 02

2010 உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஓகஸ்ட் 13 ஆம் திகதி கொழும்பில் விசேட கலை நிகழ்வுகளை நடத்துவதற்கு அஞ்சல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள உலக அஞ்சல் தினத்தையிட்டே இக்கலைவிழா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இக்கலைவிழாவை முன்னிட்டு பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இவ்விழாவில் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ளி)

# நுவரெலியா அரச அலுவலகங்களில் தமிழ்மொழி முற்றிலும் புறக்கணிப்பு

நுவரெலியா, ஓக 02

நுவரெலியா மாவட்ட அரச நிறுவனங்களில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுகின்றது எனத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான எம். உதயகுமார் விசனம் தெரிவித்துள்ளார்.

''தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியா மாவட்ட அரச நிறுவனங்களில் தமிழ்மொழி உரியவகையில் அமுல் படுத்தப் படவில்லை. இதனால் தமிழ் பேசும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர். இவ்விடயம் குறித்து பொறுப்பு வாய்ந்த தரப்புகள் கவனம் செலுத்தவேண்டும்'' - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''நுவரெலியா மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்கள், கல்விப் பணிமனைகள், பிரதேச செயலகங்கள், வைத்தியசாலைகள், தொழில் திணைக்களங்கள், நீதிமன்றங்கள் உட்பட பல்வேறு அரச நிறுவனங்களில் தமிழ்மொழி அமுலாக்கல் உரியவகையில் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தமிழ் மக்கள் பல வருடங்களாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமிழ்மக்கள் செறிந்து வாழும் பிரதேச செயலகப் பிரிவுகளில் அரசகரும மொழியான தமிழ்மொழி உரியவகையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. எனினும், இங்கு இன்னும் அது நடை முறைக்கு வரவில்லை.

குறிப்பிட்ட அரச நிறுவனங்களில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

எனினும், தமிழ்பேசும் உத்தியோகத்தர்கள் கடமையாற்றும் அரச நிறுவனங்களும் சில இது தொடர்பில் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிக்கின்றன.

பெருந்தோட்டப் பகுதியில் படித்துவிட்டு தொழில் வாய்ப்பின்றி ஆயிரக்கணக்கான இளைஞர் - யுவதிகள் உள்ளனர். இவர்களுக்கு அரசகரும மொழிப் பயிற்சியை வழங்கி உரிய நியமனங்களை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் .

இவ்வாறான நியமனங்கள் ஊடாக நுவரெலியா மாவட்டத்தில் அரச நிறுவனங்களில் தமிழ்மொழி அமுலாக்கலைப் பூர்த்தி செய்ய முடியும். இதற்கு உரிய தப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.-இப்படி உதயகுமார் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஒக.2

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2011/ 2012ஆம் கல்வியாண்டுக்கான 'முயற்சியாண்மையும் சிறுவணிக முகாமைத்து வமும்', சான்றிதழ் கற்கைநெறி (ESBM) ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கைநெறியைப் பயில விரும்புவோர் ஜி.சீ.ஈ.(சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் எனவும், கற்கைநெறிக்குரிய விண் ணப்பங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆறாம் திகதிக்கு முன்னர் யாழ்.திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இணைப் பாளர் அறிவித்துள்ளார்.

(எ-317)





### தேவை

1.கணக்காய்வாளர்
(ஓய்வுபெற்ற அரச/திணைக்கள லிகிதர்)
2.எழுதுவினைஞர்
(A/L.வர்த்தகப்பிரிவு, கணனி அறிவு உடையவர்கள்)
3.பண வசூலிப்பாளர்
ஆகியோர் தேவை.

தொடர்பு:- சிவா பிறதர்ஸ்
205,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(0773604107).



BLACK&DECKER DEWALT

உங்களிடமுள்ள எந்தவொரு பழைய மின் வலுசக்தி உபகரணங்களையும் கொடுத்து மாற்ற

**விசேட பரிமாற்றச் சலுகை!**



**25% தள்ளுபடி**

முந்துங்கள்... இச் சலுகை வழங்கல் 2010 ஒகஸ்ட் 31 வரை மட்டுமே

**பரிமாற்றச் சலுகையைப் பெறக்கூடிய யாழ்ப்பாண முகவர்கள்:**

| | |
|---|---|
| நந்தலாலா இரும்பகம் | யாழ்ப்பாணம் |
| நியூ கமல் செரமிக் | யாழ்ப்பாணம் |
| தங்கம் ஸன்ஸ் | நெல்லியடி |
| சுந்தர் சன்ஸ் | மானிப்பாய் |
| தேவன் சன்ஸ் | சுன்னாகம் |
| சிவராஜ் ட்ரேடிங் கம்பனி | பருத்தித்துறை |
| லிங்கம் அன்ட் கம்பனி | யாழ்ப்பாணம் |

டெல்மேஜ் உத்தரவாதத்துடன்

DELMEGE CONSTRUCTION PRODUCTS

இலங்கையில் ஏக விற்பனை முகவர்
டெல்மேஜ் கொன்ஸ்ட்ரக்ஷன் புரடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.
உடனடி அழைப்பு: 077 2 010 173 (துவாரகன்)


### வீதியில் குவிக்கப்பட்ட குப்பைகள் அகற்றப்படுகிறது

யாழ்ப்பாணம், ஒக.2

யாழ்ப்பாணம் தாவடிப் பிரதேசத்தில் ஆசாரி வீதிக்கு உட்பட்ட ஒழுங்கைப் பாதையில் மக்களால் குவிக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள்கள் மாநகர சபை ஊழியர்களால் அகற்றப்பட்டு வருகின்றன.

இப்பகுதி மக்களால் டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு சில நாள்களாக வீதிகள், வீடுகள்தோறும் துப்புரவு செய்து வெளியேற்றப்பட்ட குப்பைகளே இவ்வாறு வீதியோரமாகக் குவித்துவைக்கப்பட்டிருந்தன.

இதனால் குறித்த பாதையில் பயணிப்போர் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்தே தற்போது இந்தக் கழிவுகளை மாநகர சபை ஊழியர்கள் அகற்றி வருகின்றனர்.

(எ-313)


**ரன்ஒன பாதுகாப்பு அடகுக்கு வெற்றி வாய்ப்பு**

இலங்கையில் முதன்முறையாக யூனியன் வங்கியின் மூலம் உங்களுக்கு அறிமுகப்படுத்தும் பெறுமதியான வெற்றி வாய்ப்பு

ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு முறை உங்கள் அடகு நகைகளை இலவசமாக மீட்டெடுக்க ஒரு சிறந்த வரம்...



ரன் வன்

முழு அடகு/வட்டிப் பணத்தில்
ரூ. 100,000/- விலக்கழிப்பு

இரண்டாம் பரிசு:
முழு அடகு/வட்டிப் பணத்தில்
ரூ. 75,000/- விலக்கழிப்பு

மூன்றாம் பரிசு:
முழு அடகு/வட்டிப் பணத்தில்
ரூ. 50,000/- விலக்கழிப்பு

24 கரட் தங்கப் பவுணுக்கு ரூ. 29,000/-

22 கரட் தங்கப் பவுணுக்கு ரூ. 26,500/-

உயர் பாதுகாப்புடன் மிகக் குறைந்த வட்டி


உடனடி சேவைகளுக்காக நாடு பூராகவும் பரந்துள்ள யூனியன் வங்கியின் 19 கிளைகளும் உங்களுக்காக திறந்திருக்கும்.

யூனியன் வங்கி தொலைபேசி: 011 2370870

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.naptbs.com


## எங்கள் தெய்வத் தந்தையின் ஒன்பதாவது நினைவுத் திருவஞ்சலி



திதி: அபரபக்க சப்தமி (02.08.2010)

மலர்வு: 01.07.1938

உதிர்வு: 11.08.2001

வாஞ்சையுடன் நாம் தொழும் - எங்கள்
நேசத் தந்தையே...
நீதியின் சோதியாய்
நிமிர்ந்தொளிர்ந்த திருவிளக்கே....!
சட்டென நீங்கள் சரிந்திட்ட வேளைதனில் - நாங்கள்
பட்டதுயர் கொஞ்சமல்ல
பரிதவித்து விம்மி நின்றோம் - அன்று
சுட்டெரிந்த எங்கள் பாசப்பூஞ்சோலை - இன்று
புத்தம் புதியதாய்த் துளிர்விட்டுக் கிளையெறிந்து
மொட்டவிழ்ந்து மலர்ந்து நிமிர்ந்து மகிழ்வில் மணம் வீச
விழியுருகி தங்களைப் பூசித்து நிற்கின்றோம்.

என்றும் எங்கள் தெய்வத் தந்தையின்
ஆசீர்வாதங்களுக்காகத் தலை தாழ்த்திக் கைகூப்பும்:
மனைவி, மகன்மார், மகள்,
மருமகன், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

அமரர் உயர்திரு **பொ.சங்கரப்பிள்ளை**(J.P)
அதிபர் தரம் - I
(முன்னாள் அதிபர்,
யா/உடுத்துறை மகா வித்தியாலயம்)

உடுத்துறை தெற்கு, தாளையடி,
தொ.பே: 0778084475.

(101063)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் நல்லதா கெட்டதா?



உலகம்
மிகவும் கெட்டுப் போயிற்று ஐயா! அந்தக் காலத்திலே எல்லாம் இது மாதிரி அக்கிரம் நடக்குமா? அப்படி சொல்லி அலுத்துக் கொள்பவர்கள் கொஞ்சப் பேர்!
இந்த உலகம் மிகவும் முன்னேறி இருக்கு ஐயா! அடுத்த கிரகத்துக்குப் போய் வீடு கட்டலாமா? என்று சிந்திக்கின்ற அளவுக்கு வந்துவிட்டமே! அப்படிச் சொல்லுபவர்கள் கொஞ்சப்பேர்.
அதுசரி நிஜமாக இந்த உலகம் நல்லதா? கெட்டதா?
கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பார்த்தால் உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்குதா? சரியான ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என்றால் கவலைப்பட வேண்டாம். வாருங்கள் ராமகிருஷ்ணரிடம் போகலாம். அவர் இந்தக் கேள்விக்குப் பதில் சின்ன கதை மூலமாக சொல்லி இருக்கிறார்.

உலகம் நல்லதா? கெட்டதா? என்று ஒரு பெரியவரைப் பார்த்து ஒருவர் கேட்டிருக்கிறார். அதற்கு பதில் சொல்லுகிறேன். அதற்கு முன்பு நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு என்றார். சரி கேளுங்க என்றார் அவர்.
பூனைக்குப் பல் இருக்கிறதே அது நல்லதா? கெட்டதா? என்று கேட்டார். இதைக் கேட்டதும் அவர் குழம்பத் தொடங்கினார். இவருக்கு ஒன்றும் புரியவே இல்லை. அதற்குப் பெரியவர் விளக்கம் கொடுத்தார். பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று அந்தப் பூனையின் குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்.
என்னுடைய அம்மாவிடம் இருக்கிறது வெறும் பல் இல்லை... அது கருணையின் வடிவம். என்னைக் கௌவித் தூக்கிக்கொண்டு பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு போவது அம்மாவின் பல்தான். அது இல்லை என்றால் நான் இல்லை. என்று பதில் சொல்லும்.
அதே கேள்வியை எலியிடம் போய்க் கேளுங்கள். அதுசொல்லும் பல்லா இயமன்! கடவுள் பூனையைப் படைத்திருக்கவே கூடாது? அதற்கு பல்லை எதற்காகப் படைத்தார். கடிபடும் எனக்குத்தான் தெரியும் அந்தப் பல்லின் கொடுமை என்றுஎலி புலம்பும்.
பூனையின் பல்மீது குட்டி ஒரு மாதிரி! எலி ஒரு மாதிரி பார்வை அமைகிறது. அதேமாதிரித்தான் உலகத்தின் தன்மையைப் பார்க்கிறவர்களைப் பொறுத்தது. இந்த உலகம் உள்ளவரைக்கும் நல்லது என்று சொல்லுபவர்களும்இருப்பார்கள். கெட்டது என்று சொல்லுபவர்களும் இருப்பார்கள்.

**நன்றி: தென்கச்சி கோ-சுவாமிநாதன்.**



# வாழ்க்கை ஒரு தடை ஓட்டம்.....!

தடைகளைத் தாண்டி ஓடும் ஓட்டம் என்று ஒட்டப் பந்தயத்தில் ஒரு வகை உண்டு. ........ என்பார்கள். அதில் ஏற்படுத்தப்படும் தடைகள் எதுவுமே இயற்கையான தடைகள் அல்ல... விளையாட்டுக்கு ...செயற்கையாக நாமே ஏற்படுத்திக் கொடுப்பது. அந்தத் தடைகளைத் தாண்டி ஓடும் போது அல்லது அப்படிப்பட்ட பந்தயத்தைப் பார்க்கும் போது வாழ்வு பற்றிய புதிர் மடல் அவிழும்.
தடைகள் செயற்கையானவை. தாண்டப்பட வேண்டியவை. தடைகளைத் தாண்டி ஜெயிப்பதில் ஓர் அதீத சுவாரஸ்யம் இருக்கிறது. தடைகள் தடுப்பதற்காக அல்ல. தாண்டி ஜெயிக்கும் பலத்தை வளர்ப்பதற்காக ... இதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
ஒரு மகான் ஊருக்கே வழிகாட்டும் ஒப்பற்ற குருவாக மதிக்கப்பட்டார். அவரை சந்தித்த இளைஞன் ஒரு குரு இருக்க வேண்டும். அவர் யார் என்று நான் அறியலாமோ? என்று கேட்டான். குரு சிரித்தபடி '' என் குருவை தெரிந்து உனக்கு என்ன ஆகப் போகின்றது ? '' என்றார்.
'' தாங்களே இவ்வளவு சக்தி உள்ளவர்களாக இருக்கும் போது உங்கள் குரு இன்னும் சக்தி உள்ளவராக அல்லவா இருப்பார். அவரிடம் ஞானம் பெற்றால் என் வாழ்வு உங்கள் அளவு உயரும் அல்லவா'' என்றான் இளைஞன்.
'' நான் குருவைக் காட்டுவேன். ஆனால் நீ நம்பமாட்டாய் நம்பினால் சொல்கிறேன்'' என்றபடி எதிரே மரத்தடியில் படுத்திருந்த நாயைக் காட்டி '' அதோ அவரே என் குரு '' என்றார் துறவி. இளைஞன் அவநம்பிக்கையுடன் திகைத்து நின்றான்.
துறவி தொடர்ந்தார் '' ஞானம் நான் அலைந்த போது இந்த நாயை ஒரு நாள் கண்டேன். அது பக்கத்தில் உள்ள குளத்தின் நீரைப் பருக ஓடியது. ஆனால் நீருக்கு அருகே போனதும் குரைத்து விட்டு திரும்ப ஓடி வந்தது. பயந்தது... தயங்கியது... மீண்டும் ஓடியது... குரைத்து விட்டு திரும்பி வந்தது. நான் கவனித்துக் கொண்டே இருந்தேன். தண்ணீரில் உள்ள தனது நிழலைக் கண்டே குரைக்கிறது என்று எனக்குப் புரிந்தது. நாலைந்து முறை பயந்து திரும்பிய நாய் திடும் என்று துணிந்து ஒரு முறை தண்ணீரைக் குடித்தது. நிமிர்ந்து பிறகு நிழல் நாய் தன்னை ஏதும் செய்யவில்லை என்றதும் நிம்மதியாக நீரைக் குடித்தது. இந்தச் செய்கை என்னுள் ஒரு பொறி ஏற்படுத்தியது...
'' நமக்கு நாம் தான் தடை .. நம்முடைய மனம் நமது வெற்றிக்கு எதிரியாக இருக்கிறது நமது முன்னேற்றத்திற்கு நாம் தான் தடையாக இருக்கிறோம். இப்படியில்லாத நாயை அதாவது தன் நிழலை தனக்குத் தடையாகக் கருதிய நாய் போல, நமது மனமே நமக்குத் தடையாக இல்லாதவற்றைத் தடையாக நினைக்கிறது. இந்த உண்மையை எனக்கு உணர்த்திய ஞானகுரு இந்த நாய் தானே! முடிவில் பயம் தயக்கத்தைத் தள்ளி ஆவது ஆகட்டும் என்று துணிவோடு குடித்தது. தாகம் தீர்ந்தது. இப்படி மனம் சார்ந்த தடையைப் புறக்கணித்து நாம் காரியத்தில் குதித்து விட்டால் சாதிக்க முடியும் என்ற எண்ணம் பிறந்தது என்றார் நாயாரின் சீடர். அந்த நாய்க்கு இருக்கும் விவேகம் கூட நமக்கு இல்லையே என்பதே இன்றைய பெரும் குழப்பம் .
ஒரு நபரைச் சந்தித்துப் போகும் போது '' அவர் பெரிய மனிதர்'' என்கிற பிரமிப்பு..'' நம்மை மதிப்பாரா '' என்கிற பயம். '' புறக்கணித்துவிட்டால்'' என்கிற தயக்கம் இவைதான் நமது பிரதான தடைகள். தடை அந்தப் பெரிய மனிதர் அல்லர். 'நபர்' என்பதை மாற்றி 'செயல்' என்று கொண்டாலும் அது பற்றிய பிரமிப்பு நம்மை மருளச் செய்கிறது. சின்ன வயதில் விவேகானந்தருக்கு அவர் அப்பா சொன்ன ஆலோசனை '' எதைப் பார்த்தும் ஆச்சர்யப்படாதே.. எவரைப் பார்த்தும் பிரமித்து விடாதே'' என்பதுதான் அதுதான் இராமகிருஷ்ணரிடம் சுலபமாக நெருங்க அவருக்கு உதவியது. பிரமிக்கிறவர்கள் சிறுத்துப் போகிறார்கள். மதத் தலைவர்கள், ஆட்சியாளர்கள், பணக்காரர்கள், ரவுடிகள் முன்பு பிரமித்து நிற்பவர்களை அவர்கள் என்னபாடு படுத்துகிறார்கள் என்று உற்றுக் கவனியுங்கள் நான் சொல்வது புரியும் பிரமிப்பு. பயம். என்பவை மனம் சார்ந்த தடைகள் அவற்றிலிருந்து வெளியே வருவது அவசியம்.
அலைக்கழிக்கப்படும் நாமும் தடைகளை ஒதுக்கினால் விவேகனாந்தர் ஆக உயர முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.
ஆரம்பத்தில் நான் சொன்னது மாதிரி தனக்குத் தானே தடையாக இருந்த நாய் தடை மீறி ஜெயித்த மாதிரி நாமும் ஜெயிக்க வேண்டும். இந்த ஞானம் புகட்டிய நாயைத் தெருநாய் என்னாமல் திருநாய் என்று கூட மரியாதையோடு இனிக் கூப்பிடலாம்!
நாய் விபூதி கொடுக்காமல் இருந்தால் சரி.

*நன்றி: சுகி.சிவம்.*

# பொன் மொழிகள்

1. முன்னேற விரும்புகிறவர்களுக்கு மிக முக்கியமான செய்தி! எதை அடைய வேண்டும் என்கிற தெளிவு உங்களுக்கு இருந்தால்தான் அதை நீங்கள் அடைய முடியும்.
2. காசு வாங்கும் பிச்சைக்காரர்கள் சாப்பாடு எதிர்பார்க்கும் பிச்சைக்காரர்கள் மாதிரி பிறர் உழைப்பை எதிர்பார்ப்பவரும் பிச்சைக்காரர்களே. வாழ்க்கையில் எதற்கும் பிறரைச் சார்ந்திருப்பது ஒருவகை ஊனமே.
3. சவால்களை சந்திக்கும்போது எகிறிக்குதித்து ஓடும் கோழைத்தனத்தைவிட எதிர்த்துப் போராடும் துணிவே நம்மை வாழ வைக்கிறது.
4. பணக்காரப் பிள்ளைகள் மகாலட்சுமியால் பலரை ஆளுகின்றனர். ஏழைப் பிள்ளைகள் சரஸ்வதியால் பலரை ஆளட்டுமே!
5. தரமானவர்களின் தரமான விமர்சனத்தை மதிக்க வேண்டும். விமர்சிக்க வேண்டும் என்கிற வெறியுடன் விமர்சிக்கிற விமர்சனங்களைப் புறக்கணிக்க வேண்டும்.
6. கொலம்பஸ்ஸைப் போல நீங்கள் அமெரிக்காவைக் கண்டுபிடியுங்கள் என்று நான் சொல்லவில்லை. எதையாவது சாதிக்க வேண்டும் என்கிற வெறி உங்களுக்குள் ஒளிந்திருக்கும்... மறைந்திருக்கும்... அந்தக் கொலம்பஸ்ஸை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டாமா?
7. மீண்டும் மீண்டும் முயலும் விக்கிரமாதித்தனின் முயற்சியே இளமையின் இலக்கணம்.
8. இளமையே... தூங்கி வழியாதே விழிப்பாக இரு! காலையில் கண் விழித்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு விஷயத்திலும் விழிப்பாக இரு!
9. பட படக்காமல் பிரச்சினைகளைக் கையாண்டால் புதிய புதிய பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கலாம்.
10. நாம் வெற்றி பெறுவது வேறு, பிறரைத் தோற்கடிப்பது வேறு, பிறரைத் தோற்கடிப்பதே வெற்றி என்று தவறுதலாக அர்த்தம் கொண்டிருக்கிறோம்!

தொகுப்பு: பு.தட்சிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## வணிகக்கல்வி - 01 பகுதி - I

✱ 1 - 20 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. "இன்று சேவைத்தொழில்கள் பல்வேறு வழிகளிலும் வியாபித்துக் காணப்படுகின்றன." எல்லாச் சேவைகளையும் ஒன்றாகச் சேர்க்கும்போது எப்பதம் கொண்டு அழைப்பது சிறந்தது?
1) உற்பத்தி. 2) வணிகம்.
3) வர்த்தகம். 4) வியாபாரம்.
5) துணைச்சேவைகள்.

02. "தற்கால வணிகர்கள் சமூகப்பொறுப்புத் தொடர்பாக அதிக கவனம் செலுத்துமாறு பல்வேறு தரப்பினர்களின் அழுத்தங்கள் காணப்படுகின்றன." இவற்றிற்கு அமைவாக ஒரு வணிகம் பசுமைப்பொருட்களில் பொதிசெய்வது எதனுடன் தொடர்பான சமூகப்பொறுப்பாகவுள்ளது?
1) சமூகமும் சூழலும். 2) நுகர்வோர்.
3) ஊழியர்கள். 4) முதலீட்டாளர்கள்.
5) விநியோகஸ்தர்கள்.

03. ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்வை முன்னுரிமை பொதுவாக்கப்பட்ட திட்டம் $^+$ ($GSP^+$) தொடர்பாகத் தவறான கூற்று எது?
1) குறைவிருத்தி நாடுகளின் உற்பத்திகளுக்கு ஐரோப்பியச் சந்தையில் தீர்வை விலக்கு.
2) தீர்வைச் சலுகை பெறும் நாட்டில் தகுந்த அபிவிருத்தியும், சிறந்த அரசாட்சியும் அவசியம்.
3) இச்சலுகைத் திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் மதிப்பிடப்படும்.
4) இது ஏற்றுமதி மற்றும் கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவிக்கும் பொருட்டு வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவால் ஆரம்பிக்கப்பட்டது.
5) இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிகளை வழங்குகின்றது.

04. அமைப்பு ஒன்றின் பல்வேறு நோக்கங்களினுள் மிகப் பிரதான நோக்கம் எது?
1) நிலைத்திருத்தல். 2) இலாபத்தை உச்சப்படுத்தல்.
3) விற்பனவை உச்சப்படுத்தல்.
4) சமூகத்திற்குச் சேவையாற்றல்.
5) சமூகப் பொறுப்பைப் பேணல்.

05. $M_2$ எனும் வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்படுபவை தொடர்பில்,
1) $M_1$ 2) சேமிப்பு வைப்பு.
3) கால வைப்பு. 4) மேற்கூறிய எல்லாம்.
5) மேற்கூறிய எவையுமல்ல.

06. விருத்தி முறை வரிக்குச் சிறந்த உதாரணம்,
1) பெறுமதி சேர்வரி. 2) வருமானவரி.
3) சுங்கவரி. 4) உள்நாட்டு உற்பத்தி வரி.
5) விற்பனைப் புரள்வு வரி.

07. இலங்கை மத்திய வங்கி உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பாரியளவு கொடுப்பனவுகளையும் பெறுவனவுகளையும் தீர்த்துக்கொள்ளும் முறை தொடர்பில் மிகச் சரியானது,
1) காசோலைத் தீர்ப்பனவு முறை.
2) மத்திய வைப்பகத் தீர்ப்பனவு முறை.
3) பத்திரமற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை.
4) அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறை.
5) பணக்கொள்கை முறை.

08. பணநிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி பின்பற்றும் பல்வேறு கட்டுப்பாட்டுக் கருவிகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவது,
1) வங்கி வீதம். 2) காசு ஒதுக்கு வீதம்.
3) திறந்த சந்தை நடவடிக்கை.
4) வட்டி வீதங்களைத் தீர்மானித்தல்.
5) எல்லை ஒதுக்குத் தொகையைத் தீர்மானித்தல்.

09. பங்குடைமை ஒன்றின் தூங்கும் பங்காளர் தொடர்பாகத் தவறான கூற்றைத் தெரிவுசெய்க.
1) மூலதன ஈடுபாடு. 2) வரையறையற்ற பொறுப்பு.
3) முகாமையில் பங்குபற்றாமை.
4) வெளியாருக்கு பங்காளராகத் தென்படல்.
5). இலாப நட்டங்களில் ஈடுபாடு.

10. தனிவியாபாரத்துடன் ஒப்பிடும்போது பங்குடைமையில் காணக்கூடிய விசேட அனுகூலம் யாது?
1) தொழில் இரகசியங்களைப் பேணுதல்.
2) விரைவாகத் தீர்மானங்களைச் செய்தல்.
3) வரையறுக்கப்படாத பொறுப்பு.
4) சட்ட ஆளுமை அற்ற நிலை.
5) நட்ட அச்சம் பகிரப்படல்.

11. பல்வேறு வியாபார அமைப்புகளில் வரையறுக்கப்பட்ட கம்பனியின் அனுகூலம் அல்லாதது,
1) பாரிய பிரமாணங்கள் காணப்படல்.
2) பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்.
3) சட்ட ஆளுமை காணப்படல்.
4) நீடிய வாழ்வுடையதாக இருத்தல்.
5) மேற்கூறிய எவையுமல்ல.

12. காசோலை ஒன்றின் புறக்குறிப்பிடுதலானது பிறிதொரு கைமாற்றத்தினைத் தடைசெய்யுமாயின் அந்தச் செயற்பாட்டை,
1) வரையறையுடன் புறக்குறிப்பிடல்.
2) வெற்று முறை புறக்குறிப்பிடல்.
3) சிறப்பு முறை புறக்குறிப்பிடல்.
4) நிபந்தனையுடன் புறக்குறிப்பிடல்.
5) பெறுவோன் கணக்கு மட்டும் என குறுக்குக்கோடிடல்.

13. பூரணமாகச் செலுத்தப்படாத காப்புறுதிப் பணத்தை மீளப்பெறக்கூடிய காப்புறுதி ஒப்பந்தம்,
1) தீயபாயக் காப்புறுதி ஒப்பந்தம்.
2) ஆயுட்காப்புறுதி ஒப்பந்தம்.
3) ஊழியர் நட்டஈட்டுக்காப்புறுதி ஒப்பந்தம்.
4) மூன்றாம் நபர் காப்புறுதி ஒப்பந்தம்.
5) களவு அபாயக்காப்புறுதி ஒப்பந்தம்.

14. கப்பல் முகவர் நிலையம் ஒன்றின் பணியாகக் கொள்ளமுடியாதது,
1) சர்வதேச வர்த்தகத்திற்கான ஆவணங்களை ஒழுங்குசெய்தல்.
2) இறக்குமதிப்பொருட்களைத் துறைமுகத்திலிருந்து அகற்ற உதவுதல்.
3) கப்பலில் சரக்குகளை ஏற்ற இடவசதிகளை ஒழுங்குசெய்தல்.
4) ஏற்றுமதியாளரிற்கு சுமைச்சீட்டை வழங்கல்.
5) சரக்குகளைப் பயணத்துக்கமையப் பொதிசெய்தல்.

15. சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபடும் முக்கிய அமைப்பு எது?
1) உலக வங்கி. 2) உலக வர்த்தக நிலையம்.
3) சர்வதேச நாணய நிதியம். 4) ஆசிய அபிவிருத்தி வங்கி.
5) சர்வதேச தரநியம நிறுவனம்.

16. புற இணையம் (Extranet) ஒன்றின் செயற்பாட்டினை விளக்கும் கூற்று,
1) வேறுபட்ட நாடுகளில் உள்ள இரண்டு கணினிகளை இணைக்கும் வலையமைப்பு.
2) வெளியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட விடயங்களை பரஸ்பர நன்மை கருதி இணைக்கும் ஓர் உள்ளக வலையமைப்பு.
3) பல்வேறு உள்ளகக் கணினிகளை இணைக்கின்ற ஒரு வலையமைப்புத்தொடர்.
4) நிறுவனம் ஒன்றின் நிலையான சொத்துக்களை அந்நிறுவனம் முகாமை செய்வதற்கு அனுமதிக்கும் ஒரு முறை.
5) மேற்கூறிய எல்லாம் பொருந்தும்.

17. "அமைப்பு ஒன்றில் தகவல்களைப் பல்வேறு மட்டங்களாக வகைப்படுத்த முடியும்." பின்வருவனவற்றுள் எது அவ்வகை வகைப்படுத்துதலுக்குப் பொருத்தமற்றது?
1) உபாய ரீதியான தகவல்.
2) சமாந்தர ரீதியான தகவல்.
3) செயற்பாட்டு ரீதியான தகவல்.
4) செய்முறைத் தகவல்கள்.
5) மேலே உள்ளவற்றில் 2ஆவதும், 3ஆவதும்.

18. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வியாபாரத்தை விருத்திசெய்வது தொடர்பில் விசேட ஆதரவினைப் பரந்த அளவில் வழங்கும் அமைப்பு எது?
1) உலகவங்கி. 2) உலக வர்த்தக அமைப்பு.
3) சர்வதேச நாணய நிதியம். 4) ஆசிய அபிவிருத்தி வங்கி.
5) ஐரோப்பிய ஒன்றியம்.

19. தங்கநகை, பூச்செண்டு, ஆடை, வீட்டுத்தளபாடம் போன்ற குறித்த வகைப் பொருட்களுக்குப் பிரபல்யம் பெற்றுள்ள விற்பனை நிலையம்.
1) சங்கிலிக்கடை. 2) பகுதிக்கடை.
3) சிறப்புக்கடை. 4) கட்டுண்ட கடை.
5) சிறப்புச்சந்தை.

20. பின்வருவனவற்றில் எது தகவல் முறையின் பகுதி அல்லது உள்ளடக்கமாக கருதப்படக்கூடியது,
1) வன்பாகமும் மென்பாகமும். 2) உயிரியல் பாகம், நிறுவனப்பாகம்.
3) தரவு. 4) செயற்பாட்டு முறைமை.
5) மேற்கூறப்பட்ட எல்லாம்.

✱ 21 - 30 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை தருக.

21. நுகர்வோர் தேவைகள், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக சந்தைக்குக் கொண்டுவரப்படும் எதுவும் ........................................ ஆகும்.

22. வணிகத்துடன் தொடர்புபடும் பிரதான சூழல் காரணியாக ........................................ உள்ளது.

23. புவி மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள் இயற்கைச் சூழலில் பொருத்தமில்லாத கருமங்களை ஆற்றுவதில்லை என செய்துகொண்ட உடன்படிக்கையை ........................................ என அழைப்பர்.

24. போட்டி எதிர்ப்பு நடவடிக்கைகளை நுண்ணாய்வுசெய்து தடுக்கவும் நுகர்வோர் முறைப்பாடுகளை எடுத்து ஆராய்வதற்கும் வசதியாக உறுப்பினர்களைக் கொண்டமைந்த அமைப்பாக ........................................ காணப்படுகின்றது.

25. பங்குடைமையில் ஒவ்வொரு பங்காளரும் ஏனைய பங்காளர்களின் செயல்கள் சார்பாக தொடர்புபடுகின்றனர். இதனை ........................................ எனும் பதம் மூலம் விளக்கலாம்.

26. ஒரே வகையைச் சேராத வெவ்வேறு வணிகங்கள் ஒன்றுசேர்ந்து செயற்படுதலை ........................................ என அழைப்பர்.

27. அடிப்படைப் பணமானது (Base Money) பொதுமக்களிடமும் வர்த்தக வங்கிகளிடமும் மத்திய வங்கியில் வர்த்தக வங்கிகளின் ஒதுக்காகவும் வைக்கப்பட்டிருப்பதால் அதனை ........................................ என அழைப்பர்.

28. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் போக்குவரத்துத் துறையின் பங்களிப்பு .............. சதவீதமாகவுள்ளது.

29. இலங்கையினுள் வணிக நிலையத்தை அமைத்துள்ள ஆனால், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனி ........................................ என அழைக்கப்படும்.

30. வணிகர்களினால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்களில் இருந்து காப்பீடு செய்வதற்காக பெற்றுக்கொள்ளக்கூடிய ஒப்பந்தம் ........................................ என அழைக்கப்படும்.

(13ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: B.S.பசீல், DMI, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 31 - 40 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் எழுதுக.

31. அ. தனியார் மயமாக்கப்பட்டிருந்து தற்போது மீண்டும் அரச உடைமையின் கீழ் கொண்டுவரப்பட்ட அமைப்பு எது?

.......................................................

ஆ. அண்மையில் முறிவடைந்த நிதி நிறுவனம் எது?

.......................................................

32. பின்வரும் சாதனங்கள் ஊடாகப் பொருட்களை ஏற்றி அனுப்புவதற்கு அத்தாட்சியான சான்றிதழ்கள் எவை?

அ. லொறி : .......................................................

ஆ. புகையிரதம் : .......................................................

33. பின்வரும் குறியீடுகள் எவற்றுடன் தொடர்பானவை என அதன் அருகே எழுதுக.

அ. ISO - 22000 .......................................................

ஆ. ISO - 28000 .......................................................

34. இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை உறுப்பினர்களைக் குறிப்பிடுக.

.......................................................

35. ஒப்பந்த உரிமையாளர்களைப் பாதுகாப்பதற்கென நிதியை உருவாக்கும் பொருட்டு காப்புறுதி நிறுவனங்களின் வருடாந்த வருமானத்தின் அடிப்படையில் அறவிடப்படும் கட்டணம் யாது?

.......................................................

36. குறித்த ஒரு நாட்டின் சென்மதி நிலுவை தொடர்பான தரவுகள் கீழே தரப்படுகின்றன.
வர்த்தக நிலுவை (22000), சேவைகள்(தேறியது) 2000, வருமானம் (தேறியது) (5600), நடைமுறை மாற்றல்கள் (தேறியது) 19000, மூலதனக்கணக்கு (தேறியது) 4000, நிதிக்கணக்கு (தேறியது) 8000, நீண்டகால நிதி (தேறியது) 9000, பொருள் ஏற்றுமதிகள் 96000.
தரவுகளின்படி நடைமுறைக்கணக்கு மீதி யாது?

.......................................................

37. யுத்தம் நிலவும் சூழ்நிலையில் பொருட்களை எடுத்துச்செல்லும் கப்பல் சரக்கிற்கு செய்வதற்கு அனுமதிக்கும் காப்புறுதிப் பாதுகாப்பு எது?

.......................................................

38. இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காகப் பிறநாட்டு அரசுகளுடனும், பிரதான தரத்திலான வர்த்தகர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்துவதில் பாடுபடும் முக்கிய அமைப்பு எது?

.......................................................

39. இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முக்கிய மூன்று துறைகளையும் அவற்றின் பங்களிப்புக்களையும் தருக.

.......................................................

40. முகாமை மட்டத்தில் பயன்படும்' தகவல் முறைகள் எவை?

.......................................................

## பகுதி - II

அறிவுறுத்தல்:
* முதலாம், 2ஆம் வினாக்கள் உட்பட நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

01. 1) அ. வணிகத்தின் நட்ட அச்சத்திற்கும் இலாபத்திற்கும் இடையிலான தொடர்பு யாது?
ஆ. வுணிகத்தில் உண்மையான வெற்றியை எவை வெளிக்காட்டும்?
2) வணிகச்சூழலை எவ்வாறு பாய்ச்சல் வரைபடம் மூலம் விரிவாகக் காட்டலாம்?
3) அ. வரவு அட்டை ஒன்றின் முன்புறத்தில் வெளிப்படும் விவரங்கள் எவை?
ஆ. புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் பாவனைக்கு வந்ததால் ஏற்கனவே இருந்து நீங்கப்பட்ட சுட்டெண்கள் எவை?
4) அ. புதிய கம்பனிச்சட்டப்படி ஒரு கம்பனியில் எவை தொடர்பான கடன் தீர்ப்பனவுச் சோதனைகள் இடம்பெறுகின்றன?
ஆ. உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் பண்புகள் எவை?
5) அ. நடமாடும் வர்த்தகம் எனப்படுவது யாது?
ஆ. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எவ்வாறு ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக்குப் பங்களிப்புச் செய்கின்றது என விவரிக்குக.
6) சுருக்கமாக விளக்குக.
அ. லங்கா செக்கியூர் (Lanka Secure)
ஆ. அமைப்பு அகவிதி.
இ. சைபர் கஃபே (Cyber Cafe)

02. 1) அ. வரையறையுள்ள சட்டவிதிப் பணங்களையும் வரையறையற்ற சட்டவிதிப் பணங்களையும் வேறுபடுத்திக் காட்டுக.
ஆ. லங்கா கிலீயர் கம்பனியின் தொழிற்பாடுகளை விவரிக்குக.
2) வணிக வங்கி ஒன்றின் கடமைகளையும், உரிமைகளையும் தனித்தனியாக வகைப்படுத்திக் காட்டுக.
3) அ. பல்தேசிய கம்பனிக்கெதிராக எழும் கருத்துக்கள் எவை?
ஆ. அரசதுறை வணிகங்கள் பல நட்டமடைவதற்கான காரணங்கள் எவை?
4) அ. கணினி வைரஸ் என்பதன் அர்த்தம் என்ன?
ஆ. இலத்திரனியல் அஞ்சல் அதிகம் விரும்பப்படுவதற்கான காரணங்கள் எவை?
5) அ. பயணிகள் பஸ்வண்டிச் சேவை செயற்றிறன் அற்றிருப்பதற்கான காரணங்கள் எவை?
ஆ. ஆசிய வலயத்தில் கொழும்புத் துறைமுகம் முதல் தரசேவை ஆற்றுவதற்கு ஒத்துழைக்கும் அமைப்புக்கள் எவை?
6) சுருக்கமாக விளக்குக.
அ. லங்கா செட்டில் (Lanka Settle)
ஆ. உற்பத்தி நாட்டு சான்றிதழ்.
இ. பங்குப்பிளவு (Share Split)

03. 1) நாட்டில் அரசினுடைய பொருளாதார இலக்குகளைக் குறிப்பிடுக.
2) அ. வணிக ஒழுக்கம் எனப்படுவது யாது?
ஆ. விவேகச் சொத்துக்கள் தொடர்பான ஒழுக்கநெறி தொடர்பாக வணிக அமைப்புக்கள் யாது'செய்யவேண்டும்?
3) அ. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிகள் நான்கை விவரிக்குக.
ஆ. அரச வணிக முயற்சிகளில் இருந்து நுகர்வோர் பெறக்கூடிய இரு பயன்களைத் தருக.
4) சுருக்கமாக விளக்குக.
அ. SWIFT ஆ. முன்விபரணம்.
இ. நாணயக் கடிதம்.

04. 1) அ. கூட்டுறவுத்துறை வணிகம் ஒன்று அனுபவிக்கும் அனுகூலங்களைத் தருக.
ஆ. கம்பனிகள் இணைந்து செயற்படுவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்களைக் கூறுக.
2) அ. குத்தகைக் கம்பனி மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் எவை?
ஆ. இலத்திரனியல் பணவகைகளில் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில் தொடர்புபடும் தரப்பினர்களைத் தருக.
3) அ. எழுத்துமூலமான தொடர்பாடலின் அனுகூலங்கள் எவை?
ஆ. போக்குவரத்துத் துறையின் நவீன போக்குகளாக எவற்றைக் கூறமுடியும்?
4) சுருக்கமாக விளக்குக.
அ. அங்கீகார ஒப்பந்தம்.
ஆ. முற்கொடுப்பனவு அட்டை.
இ. ஆசியன்.

05. 1) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிக்கும், வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிக்கும் இடையிலான வித்தியாசங்களைத் தருக.
2) ஒப்பீட்டு நயத்திற்கான காரணத்தைத் தீர்மானிக்கும் அவசியக்கூறுகள் எவை?
3) அங்கீகார வணிகம் ஒன்றின் மூன்று வகைகளையும் கூறி விளக்குக.
4) சுருக்கமாக விளக்குக.
அ. போலிப்பங்காளர்.
ஆ. ஒன்லைன் வங்கிச்சேவை (Online Banking)
இ. குரல் அஞ்சல் (Voice Mail)

06. 1) தன்னியக்க வங்கிச்சேவை மூலம் வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் கிடைக்கும் அனுகூலங்களை தனித்தனியே குறிப்பிடுக.
2) அ. கடன் அட்டைப் பாவனையால் வணிகர்களுக்கு ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் எவை?
ஆ. வரவு அட்டைப் பாவனையால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் எவை?
3) அ. மோட்டார்வாகனக் காப்புறுதியில் தற்போது பின்பற்றப்பட்டுவரும் மூன்று வகைகளைப் பெயரிடுக.
ஆ. இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமானம் தேய்வடைந்து செல்வதற்கான காரணங்கள் எவை?
4) சுருக்கமாக விளக்குக.
அ. தரவு
ஆ. தகவல் தொழில்நுட்பம்.
இ. பூகோளச் சூழல்.

(வணிகக் கல்வி II வினாத்தாள் நாளை இப்பகுதியில்)

# விடைக் குறிப்புகள்

## கணக்கீடு 01, பகுதி - I (19.07.2010)

01- 2 02-4 03-5 04-3 05-4 06-2 07-2 08-1 09-3 10-2
11- 5 12-2,4 13-4 14-2,3 15-1 16-1,3,5 17-4 18-3 19-2
20- 2 21 - இணைத்தல் எண்ணக்கரு.
22- கணக்குகளை மூடி இறுதி விளைவை மூலதனத்திற்கு மாற்றுதல்
23- ரூபா 227,000 24 - ரூபா 411,625
25- கடன்அட்டை வழங்கிய நிறுவனக் க/கு வரவு, விற்பனைக் க/கு, வங்கிக் க/கு வரவு வட்டிக் க/கு வரவு, கடன்அட்டை வழங்கிய நிறுவனக் க/கு செலவு.
26- 1-நிதிக் கூற்றுக்கள்-தயாரிக்க வழிகாட்டுதல், 2-நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும், நியாயமானதுமாக அமைதல்.
27- நிறுவனத்தின் உண்மைத்தன்மையைக் காட்ட நிறுவனத்தின் உண்மை இலாபத்தைக் கருத்துக்கொள்ளல் அவசியமாகிறது. இதற்கமைய எதிர்பார்க்கப்படும் நட்டம் பதியப்படவேண்டுமென்பது.
28 - 1-நிறைவில் பதிவு கொடுக்கல்வாங்கல்களை முழுமையாகக் காட்டமாட்டா. ஆனால், இரட்டைப் பதிவில் முழுமையான விவரங்கள் காட்டப்படும்.
2-நிறைவில் பதிவில் கணக்குப்பதிவு முறை திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்படமாட்டா. ஆனால், இரட்டைப்பதிவில் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்படும்.
29 - 1-தொங்கல் கணக்கு பிழைகள் தவறுகளினால் ஏற்படும். ஆனால்,கட்டுப்பாட்டுக் கணக்கு பிழைகள் தவறுகளைக் குறைக்க ஏற்படுத்தப்படும்.
2-தொங்கல் கணக்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறையன்று. ஆனால், கட்டுப்பாட்டுக் கணக்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறையாகும்.
30 - 1-மொத்த விற்பனை வரியிலுள்ள வரி குவிர்ப்புத் தவிர்க்கப்படும்.
2-உற்பத்தியாளன், விற்பனையாளன் ஊக்குவிக்கப்படுகின்றனர்.
31- சரி 32 - பிழை 33 - பிழை 34 - பிழை 35 - பிழை
36 - ஒரு சொத்து அதன் ஆயுட்காலம் முடிவடைந்து பழையதாகி அதன் ஒடிவுப்பக்குவ நிலையில் உள்ளபோது ஓர் உரிமம் அதை விற்பனைசெய்து பெறக்கூடிய மதிப்பீட்டுத் தொகையில் விற்பனைக் கிரயத்தை கழித்துவரும் தொகை.
37 - தேறக்கூடிய நிகரப் பெறுமதி, மொத்த ரீதியாக, உருப்படி ரீதியாக.
38 - பழைய விலை 39 - 5% 40 - நியாயபூர்வப் பெறுமதியில்.

(கணக்கீடு 02, பகுதி I இற்கான விடைகள் நாளை இப்பகுதியில்)

தொகுப்பு: D.Sam, DMI, யாழ்ப்பாணம்.

## பொருளியல் 01, பகுதி - I (28.07.2010)

01-3 02-5 03-3 04-1 05-1 06-2 07-1 08-3 09-4 10-2
11-5 12-2 13-2 14-2 15-5 16-4 17-3 18-2 19-3 20-2

## பொருளியல் 02, பகுதி - I (29.07.2010)

01-3 02-4 03-1 04-4 05-5 06-3 07-3 08-5 09-1 10-3
11-3 12-4 13-4 14-4 15-3 16-3 17-5 18-4 19-5 20-3

தொகுப்பு: S.S.சிறி, DMI, யாழ்ப்பாணம்.


## வரலாறு (இலங்கை), பகுதி - I (29.07, 31.07.2010)

01-3 02-4 03-4 04-3 05-3 06-3 07-2 08-4 09-3 10-1
11-1 12-4 13-1 14-3 15-2 16-2 17-4 18-4 19-1 20-1
21-1 22-1 23-4 24-2 25-3 26-4 27-1 28-4 29-5 30-3
31-3 32-2 33-1 34-1 35-1 36-2 37-5 38-4 39-3 40-3

தொகுப்பு: M.பத்மன், DMI, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரமும் யாழ். மாநகரசபையின் வரலாறும்


யாழ்.மாநகரசபையின் முன்னைய தோற்றம்

''எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்'' என்பதற்கு இணங்க இலங்கையின் வரைபடத்தை எடுத்து நோக்கும்போது சிரசாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது. இதில் யாழ்.நகரே பிரதானமாகக் கொள்ளப்படுகின்றது. யாழ். நகரின் முழுமையான தொன்மை வரலாற்றைப் பெற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் அந்நியர் ஆட்சியில் ஏற்பட்ட சில தடயங்கள் மூலம் ஓரளவு உறுதிப்படுத்த முடிகிறது.

கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் நிலை பெற்ற தமிழ் அரசின் தலைநகரம் சிங்கை நகர் என்பதாகும். இது நல்லூரையே குறிப்பிடுவதாகக் கூறப்படுகின்றது. முன்பு நல்லூர், பூநகரிப் பிரதேசத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டதே தற்போதுள்ள நல்லூர் ஆகும். சிங்கை நகர் என்பது வல்லிபுரத்தையும் குறிப்பதாக முரண்பாடுகள் உண்டு. வல்லிபுர அகழ்வில் கிடைத்த தங்கத்தட்டின் அரிப்பும் கந்தரோடையில் கிடைத்த அகழ்வுச் சான்றுகளும் இவ்விரு இடங்களின் தொன்மைக்குச் சான்றுகளாகும்.

இவ்வாறான பல முக்கிய சின்னமாக விளங்கும் யாழ்.நகரம் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்து அளப்பரிய வரலாற்றைக் கொண்டு விளங்குகின்றது.

கி.பி.15 ஆம் நூற்றாண்டில் தென்னிலங்கை அரசுகள் யாழ்ப்பாண அரசின் மீது போர் நடத்தி தலைநகராக விளங்கிய நல்லூரை அழித்து, பின் புனரமைப்புச் செய்தன. கி.பி. 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் நல்லூர் நகரை அழித்து தமது கோட்டையையும், நகரையும் இன்னொரு இடத்தில் அமைத்தனர்.

பின்பு போர்த்துக்கேயரிடமிருந்து ஆட்சியைப் பிடித்த ஒல்லாந்தர் தமது ஆசியப் பிராந்திய ஆட்சித் தலைமையை இன்றைய ஜகார்த்தாவில் (இந்தோனோசியாவில்) அமைத்தனர். அக்கோட்டையை விட போர்த்துக் கீசரிடம் இருந்து கைப்பற்றிய யாழ்ப்பாணக் கோட்டையே பெரியது என்று இங்கிருந்த போல் டயஸ் என்ற ஒல்லாந்த ஆசிரியர் குறிப்பிட்டு இருந்தார்.

ஒல்லாந்தரிடமிருந்து இலங்கைத்தீவை ஆங்கிலேயர் கைப்பற்றியதை அடுத்து கொழும்பிலிருந்து ஒல்லாந்தர்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறினர். 19ஆம் நூற்றாண்டில் இலங்கை ஒன்றுபடுத்தப்பட்டு யாழ்ப்பாணம் வடமாகாணத்தின் தலைநகராக விளங்கியது. இந்நூற்றாண்டிலேயே புகையிரதப் போக்குவரத்து வசதிகள் யாழ்ப்பாணம் வரை விரிவுபடுத்தப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியில் யாழ்.நகர் துரித வளர்ச்சியடைந்து இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமாகத் திகழ்ந்தது.

போர்த்துக்கேயர் வர்த்தக நோக்கில் அமைத்த யாழ்ப்பாணநகர் கோட்டையை 17ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் நிர்வாக கேந்திரமாக்கியதால் யாழ்.நகர் மேலும் விரிவடைந்து துரித வளர்ச்சி கண்டது. இலங்கைத் தீவில் ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்ட விளைவுகளில் ஒன்று நகரங்களின் வளர்ச்சியாகும்.

இன்றைய நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி நிர்வாக அமைப்பில் யாழ்ப்பாண நகரமும் மாநகரசபை அந்தஸ்துப் பெற்ற நகரங்களில் ஒன்றாகும்.

இலங்கையில் மக்கள் தொகையிலும் சேவை வசதிகளிலும் பலகாலமாக கொழும்பு மாநகரத்திற்கு அடுத்து 2 ஆவது இடத்தில் யாழ்.மாநகரம் இருந்து வந்தது. ஆனால் இன்று பின் தள்ளப்பட்டுள்ளது. யாழ்.நகர் 1977 இற்குப் பின் இனக்கலவரங்களால் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டது.

இதன் காரணமாக 1977ஆம் ஆண்டு யாழ். நகரச் சந்தை, 1981ஆம் ஆண்டு நூல் நிலையம் மற்றும் வீடுகள் அழிக்கப்பட்டன. 1984 ஏப்பரலிலிருந்து கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஆஸ்பத்திரி வீதிக்கட்டடம் என்பவற்றிற்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. யாழ்.மாநகரம் பொருளாதார ரீதியில் மட்டும் அன்றி சமூக ரீதியிலும் பாதிப்புக்குள்ளாகியது.

யாழ்ப்பாண மாநகரசபை வரலாற்றில் பல முக்கிய மைல்கற்கள் உள்ளன. 1906 ஆண்டு ஜூலை மாதம் யாழ்ப்பாண ஸ்தலசபை, யாழ்ப்பாணக் கச்சேரி என்பன உருவாகின. மாகாண அதிபராக இருந்தவருடன் மாகாண வைத்திய அதிகாரியும் மாகாண மராமரத்துப் பொறியியலாளரும் தேசாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்களுமாக 6பேர் இச் சபையில் அங்கத்துவம் வகித்தனர். சபைக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் முதற் சனிக்கிழமையில் கூடியது.

1906ஆம் ஆண்டு 29ஆம் திகதி சபைச் செயலாளர் ஒருவர் மாதம் 125 ரூபா சம்பளத்தில் அமர்த்தப்பட்டார்.

1907.01.01இல் பொது மராமத்துப் பகுதியில் இருந்து வடிகால், பிரதான வீதிகள் என்பனவற்றைச் சபை தனது பரிபாலனத்தின் கீழ் கொண்டு வந்தது. சபைச் செயலாளருடன் மராமத்து அத்தியட்சகர் பீயோன் பதிவக உத்தியோகத்தர் உட்பட நால்வரே சபை ஊழியர்களாகக் கடமையாற்றினார்கள். 4 வீதம் சோலை வரியாக அறவிடப்பட்டது. 1908ஆம் ஆண்டிலிருந்து 3 வீதம் சோலை வரியாக அறவிடப்பட்டது.

1908.03.07ஆம் ஆண்டில் புகையிரத நிலையத்திற்குச் செல்லும் இரு வீதிகளுக்கும் முதன் முதலாக வீதி வெளிச்சம் அளிக்கப்பட்டது. 1909ஆம் ஆண்டிலே பெரிய கடையிலுள்ள சந்தைக்குச் சீமெந்து போடப்பட்டது. 1910ஆம் ஆண்டு வாகனங்களைப் பரிசோதனை செய்வதற்குப் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட்டார். 1914ஆம் ஆண்டு மேலும் பல வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. 1917ஆம் ஆண்டு சுகாதார பரிசோதகர்களுக்கு வருடமொன்றுக்கு ஆறு ஆங்கில றில் உடுப்புக்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண நகரம் மத்திய வட்டாரம், கிழக்கு வட்டாரம், மேற்கு வட்டாரம் என 3 பிரிவுகளாக 1917.10.13 இல் பிரிக்கப்பட்டன. நகரசபை ஒன்று 1923ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது. எட்டு வட்டாரங்களையும் 8.5 சதுரமைல் விஸ்தீரணத்தையும் 42436 மக்களையும் கொண்டதாக இருந்த இச் சபையில் அ.கனகரெத்தினம், ஆர்.ஆர். நல்லையா முறையே தலைவராகவும் உபதலைவராகவும் இருந்தனர். சபைக்கு ரூபா 129,396.18 சதம் வருமானமாகக் கிடைத்தது. சபையில் ஐந்து அங்கத்தவர்கள் நியமனம் பெற்றனர்.

1932ஆம் ஆண்டு யாழ். நகரசபை 8.5 சதுர மைல்களில் இருந்து 7.45 சதுரமைல்களாகக் குறைக்கப்பட்டது. 46200 மக்களையும் 8 வட்டாரங்களையும் 4 நியமன அங்கத்தவர்களையும் கொண்டிருந்ததோடு ரூபா 404, 996.87 சதம் வருமானமும் பெற்றுக் கொண்டது.

1935ஆம் ஆண்டு தமிழ் இலவச நூலகம் யாழ்.மாநகரசபையினரால் பொறுப்பேற்கப்பட்டது. யாழ்ப்பாண நகர மண்டபமும் சுமார் 3 லட்சம் ரூபா செலவில் 1936 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு சபையின் தலைவராக இருந்த ஆர்.நல்லையாவின் வேண்டுகோளிற்கிணங்கத் தேசாதிபதி சேர்.எட்வேட் ஸ்ரப்ஸால் ஆனிமாதம் 9ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.


எட்டு வட்டாரங்களைக் கொண்டதாக இருந்த நகரசபை 1944ஆம் ஆண்டு 12வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. சனத்தொகை 50,500 பேராக உயர்ந்தது. சி.பொன்னம்பலம் தலைவராகவும், கே.வி.சின்னத்துரை உபதலைவராகவும் கடமையாற்றினார்கள்.

தமிழரசி

யாழ்.நகரசபை 1949.01.01 இல் மாநகரசபை அந்தஸ்தைப் பெற்றது. 12 வட்டாரங்கள் 15 ஆக உயர்ந்தன. யாழ்.மாநகரசபையின் முதலாவது முதல்வராக சாம்.ஏ.சபாபதியும், உதவி முதல்வராக எஸ்.எஸ்.நவரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். 15 வட்டாரங்களாக இருந்த யாழ்ப்பாண மாநகர சபை 1960 ஆம் ஆண்டு 17 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது.

1966.05.23 இல் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரால் யாழ்ப்பாண மாநகரசபை கலைக்கப்பட்டது. 1966.09.30இல் விசேட ஆணையாளரின் நிர்வாகத்தில் யாழ்.மாநகரசபை பொறுப்பளிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் புதிய சந்தைக்கட்டடம் 1967.12.05இல் பிரதமர் டட்லி சேனநாயக்காவால் அமைக்கப்பட்டது.

இவ்வாறான பல முக்கிய மைந்தர்களாக வரலாற்றினைக் கொண்டுள்ள யாழ். மாநகரசபையின் யாழ்ப்பாண நகரில் உள்ள ''புராதன சின்னங்களாக'' உள்ளவை யாழ்ப்பாணக் கோட்டை, கைலைநாதர், கைலாயபிள்ளையார் கோயில் (1475), வெங்கடேசவரதராசப் பெருமாள் கோயில் (1347), நல்லூர் சட்டநாதர் கோயில், கோட்டைடச்சுத் தேவாலயம் (1706), சங்கிலியன் தோப்பு (1475), யமுனா ஏரிக் கேணி (1475); யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரம், யாழ்ப்பாண பொதுசன நூலகம் என்பனவாகும்.




யாழ்.மாநகர சபையின் நிர்வாகக் கட்டமைப்பினை எடுத்து நோக்கின் பதவி மேலிருந்து கீழாகச் செல்லச் செல்ல ஒவ்வொரு நிலையிலும் அதிகாரமும் பொறுப்புக்களும் குறைந்து செல்வதாகவே இருக்கும். அதிகாரம் பொறுப்புக்கள் என்பன சபையிடமே கூடுதலாகக் காணப்படும். இச் சபை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும். மாநகர எல்லைக்குள் வாழ்கின்ற மக்களிற்கு தேவைப்படுகின்ற வாழ்க்கை வசதிகள் பொதுநல வசதிகள் என்பனவற்றைச் சிறந்த முறையில் வழங்குவதே சபையின் நோக்கமாகும். இத்தகைய நடவடிக்கைகள் சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கும் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட சட்ட முறைகளுக்கும் உட்பட்ட வகையிலேயே அமைந்திருக்கும்.

சபையின் உறுப்பினர்கள் பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். யாழ். மாநகர சபையில் இவ்வங்கத்தவர்களின் எண்ணிக்கை 1949ஆம் ஆண்டில் 15 ஆகவும் 1967 ஆம் ஆண்டில் 17 ஆகவும் 1969 ஆம் ஆண்டில் இருந்து 23 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.05.1993

* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுடன் நான் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எவரும் உதவி புரியலாம். பேச்சு வார்த்தைக்கு நான் எப்போதும் தயாராகவே உள்ளேன் என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

* குறித்த காலக்கெடுவுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட மாட்டாது. 1995 மார்ச் மாதத்தில்தான் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க திட்டவட்டமாகத் தெரிவிப்பு.

17.05.1993

* இலங்கையின் புதிய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவுடன் நிபந்தனை எதுவுமின்றி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாக பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இருந்து இயக்கத்தின் சர்வதேச அலுவல கப் பேச்சாளர் தெரிவிப்பு.

* நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைத் தொடருவது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

18.05.1993

* வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய 7 மாகாணங்களிலும் நேற்று மாகாண சபைத் தேர்தல்கள் மிக அமைதியாக நடைபெற்றதாக அறிவிப்பு.

* இனிவரும் காலத்தில் எதிர்க் கட்சிகள் அரசைக் தூஷிக்கும், அமைதியைக் குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுமானால் அதை அவை பிரதிநிதித்துவப் படுத்தும் மாகாண சபைகளுக்கான அபிவிருத்திக்குரிய நிதியை ஒதுக்க மாட்டேன் என நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான டி.பி.விஜேதுங்க தெரிவிப்பு.

19.05.1993

* நேற்று முன்தினம் நடைபெற்ற 7 மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் 4 மா மாகாண சபையில் பொ.ம.ஐ. முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சந்திரிகா அச் சபையின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்படுவார் என ஊகம் தெரிவிப்பு.

20.05.1993

* ஜனாதிபதி விஜேதுங்க தலைமையிலான புதிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வித்தில் முக்கிய அரசாங்க இலக்குகள் மீது விடுதலைப் புலிகள் துணிகரத் தாக்குதல்களை நடத்தக் கூடும் என பாதுகாப்புத் துறை மூத்த அதிகாரிகள் அச்சம் தெரிவிப்பு.

* இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா தலையிட முனையும் பட்சத்தில், அந்த நேரத்தில் அது குறித்து அரசு பொருத்தமான முடிவு எடுக்கும் என ஜனாதிபதி விஜேதுங்க தெரிவிப்பு.

21.05.1993

* நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்குப் பதிலாக நாடாளுமன்ற ஆட்சி முறையை மீண்டும் கொண்டு வர வேண்டும். அதற்கான புதிய அரசமைப்பைத் தயாரிக்க தற்போதைய நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்ற வேண்டும் என்ற ஒரு யோசனையை புதிய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க பரிசீலித்து வருவதாகத் தெரிவிப்பு.

* அரசமைப்பு மாற்றம் என்ற பெயரில் மாகாண சபை முறையையே ஒழித்துவிட அரசு முடிவு செய்திருப்பதாக தோன்றுகிறது என பிரபல அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவிப்பு.

22.05.1993

* மாகாண சபைத் தேர்தல் நீதியர்னதாகவும் சுதந்திரமானதாகவும் நடாத்தப்பட்டது என தேர்தலைக் கண்காணிக்க வந்திருந்த சர்வதேச அவதானிகள் குழு தமது அறிக்கையில் தெரிவிப்பு.

* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவும் முன்முயற்சியில் தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர் குழு ஒன்று ஈடுபட உள்ளதாகத் தெரிவிப்பு.

23.05.1993

* தென்மாகாணம் மற்றும் வடமேல் மாகாணத்தில் போதிய பெரும்பான்மைப் பலம் இல்லாத போதிலும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களை முதல் அமைச்சர்களாக நியமித்தமைக்கு எதிரணியினர் அதிருப்தி தெரிவிப்பு.

* பலாலி இராணுவ முகாமிலிருந்து அளவெட்டி மற்றும் வலி.வடக்கு, மேற்குப் பகுதிகளை நோக்கி நேற்று படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

24.05.1993

* தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள பரபரப்பான அரசியல் சூழ்நிலையில், ஜெயலலிதா தலைமையிலான மாநில அரசு எந்நேரமும் கலைக்கப்படலாம் என அரசியல் அவதானிகள் ஊகம் தெரிவிப்பு.

* இனங்களுக்கு இடையே அமைதியையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்காக மீண்டும் யாழ்ப்பாணம் செல்ல தாம் தயாராக இருப்பதாக அங்கிலிக்கன் திருச்சபையினால் தெரிவிப்பு.

25.05.1993

* கிளாலிக் கடற்பரப்பில் நேற்றிரவு கடற்புலிகளுக்கும் கடற்படை யினருக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றதால் கிளாலிக் கடற்பாதையூடான பயணம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

* கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் தடுப்புக் காவலில் இருந்தவாறே நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பதாகத் தெரிவிப்பு.

26.05.1993

* முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலமாகிவிட்டார் என்ற வதந்தி ஒன்று கொழும்பில் பரவியதால் கொழும்பு மாநகரில் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பு நிலவியதாகத் தெரிவிப்பு.

* தீவிரவாதத் தொடர்புடையவர்கள் சிலர் வடக்கு, கிழக்கிலிருந்து கொழும்பி லும் அதை அண்மித்த பகுதிகளிலும் வந்து தங்கியுள்ளதாகவும் அவர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறும் கூட்டுப் படைகள் தலைமையகம் பொதுமக்களுக்கு எச்சரிக்கைவிடுப்பு.

27.05.1993

* தென்மாகாணம், வடமேல் மாகா ணம் ஆகியவற்றுக்கு நியமிக்கப் பட்ட புதிய முதலமைச்சர்கள் தமது பணி எதனையும் ஆரம்பிப்பதை இடைநிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பிப்பு.

* இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண என நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுமாறு அக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

28.05.1993

* வெளிநாடுகளைச் சேர்ந்த அகதி கள் சட்டவிரோதமாக தமது நாடுகளில் குடியேறி வருவதைத் தடுக்கும் வகை யில் ஐரோப்பிய நாடுகள் கூட்டாக நட வடிக்கை எடுக்கத் தயாராவதாகத் தெரி விப்பு.

* விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள இந்திய இராணுவத்தை மீண்டும் வரவழைக்குமாறு ஜனாதிபதி விஜேதுங்கவிடம் பலதரப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக 'இந்து' பத்திரிகை தெரி விப்பு.

29.05.1993

* கொழும்பு மற்றும் தெகிவளை - கல்கிச மாநகர சபைகளைக் கலைக்க மேல் மாகாணத்தில் பதவியேற்றிருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தலை மையிலான மாகாண அரசு முயற்சிகளில் இறங்கியிருப்பதாகத் தெரிவிப்பு.

* இடம்பெயர்ந்த யாழ்.மாவட்ட மக்களின் நிவாரணப் பணிகளுக்கென ஜேர்மன் அரசு வழங்கிய உதவி நிதியில் ஒரு பகுதியான 60 லட்சம் ரூபா அரசினால் வேறுமாவட்டத்தின் தேவைக்கு திசை திருப்பப்பட்டதாகக் குற்றச்சாட்டு.

30.05.1993

* சுதந்திரக் கட்சி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்த வேலைகளில் இறங்கியிருப்பதாக அது தொடர்பாக ஆராயவென நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர் அனுருத்த ரத்வத்தை தெரிவிப்பு.

* பொலன்னறுவ மாவட்டம் - ஜெயந்திபுர மினி முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய தாக்குதலை பாதுகாப்புப் [illegible] தாகத் தெரிவிப்பு.

# 'நிதிச்சேவையூடாக வறுமையைக் குறைத்தல்' வங்கி ஊழியர்களுக்கான பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஓக.2

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் ''நுண்பாக நிதி மூலம் வறுமையை இல்லாது ஒழித்தல்' எனும் தலைப்பில் வங்கி ஊழியர்களுக்கான முதலாவது பயிற்சி நிகழ்ச்சி யாழ். திறந்த பல்கலைக் கழக முதுகலைமாணி இணைப்பாளர்களான டாக்டர் என்.மொராயஸ், டாக்டர் சாந்த அபயசிங்க ஆகியோரின் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

வருமானம் குறைந்த மக்களுக்குக் கடன் வசதி போன்ற நிதிச்சேவைகளை வழங்குவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை வங்கிகள் மேற்கொள்வதற்காக இப்பயிற்சி நெறி, மத்திய வங்கியினால் 'நிதி சேவைகள் ஊடாக வறுமையைக் குறைத்தல்' திட்டத்தினூடாக வங்கி ஊழியர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றது.

யப்பானின் நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் கடன்வசதிகளை வங்கிகள் செய்ய இருப்பதாகவும் இவை கிராம மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறி கொழும்பு, யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு, அநுராதபுரம், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 5 கற்கை நிலையங்களில் இருந்து 250 வங்கி ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டு பொது நலவாய கற்கை மையத்தின் அனுசரணையுடன் திறந்த பல்கலைக்கழக சமூக கற்கைகள் திணைக்களத்தின் மூலம் பயிற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-310)

# வடக்கு மாவட்டங்களுக்குச் செல்ல இனி பிரிட்டிஷ் பயணிகளுக்கு தடை இல்லை

கொழும்பு,ஓக.2

நாட்டின் வடக்கில் உள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்குத் தனது குடிமக்கள் செல்ல இதுவரை விதித்திருந்த பயணத் தடையை பிரிட்டன் நீக்கி உள்ளது.

இலங்கைக்கான பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் மார்க் கூடிங் தலைமையில் தூதரகக் குழு கடந்த ஜூன் மாதம் மேற்படி பகுதிகளுக்குச் சென்று பாதுகாப்பு மதிப்பீடுகளை மேற்கொண்டதை அடுத்து இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது.

''இந்த மாற்றத்தின் மூலம் இலங்கையின் எந்தவொரு பாகத்திற்கும் செல் வதற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த எச்சரிக்கை எதுவும் இனிமேல் தொடராது'' என பிரிட்டிஷ் தூதர் பீற்றர் வோய்ஸ் தெரிவித்தார்.

அதேவேளை, வடபகுதியில் நிலக் கண்ணி அச்சுறுத்தல் இருப்பதையும் அப்பகுதிக்குச் செல்வதற்கு இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்பதையும் அங்கு செல்ல விரும்பும் பிரிட்டிஷ் குடிமக்கள் அறிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஏ-சி)

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து இலங்கையுடன் பேச ஜப்பான் தயார்

டோக்கியோ,ஓக.2

இலங்கையுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வது தொடர்பாக பேச்சு நடத்த ஜப்பான் தயாராகவுள்ளதாக ஜப்பான் பொருளாதார, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் மசாயுகி நவோஷ்மா தெரிவித்துள்ளார்.


ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் போதே ஜப்பான் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் முதலீடு செய்ய இது சிறந்த காலகட்டமென்பதால் ஜப்பான் இலங்கையுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து கவனம் செலுத்த வேண்டுமென்று அமைச்சர்கள் ஜி.எல். பீரிஸும், பஸில் ராஜபக்ஷவும் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலை, ஸ்திரத்தன்மை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு முடிந்த உதவிகளை ஜப்பான் வழங்குமென அந்நாட்டு பொருளாதார அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜப்பானில் இலங்கை வர்த்தக சமூகம் ஏற்பாடு செய்திருந்த ஜப்பான் வர்த்தக சம்மேளனக் கூட்டம் பலரையும் கவர்ந்தது. பெரும் எண்ணிக்கையான ஜப்பான் முதலீட்டாளர்கள் இலங்கை அமைச்சர்களிடம் இலங்கையில் முதலீடு செய்யக்கூடிய வாய்ப்புகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டனர். (ஏ-சி)

# மாட்டு வண்டிக்கு மரியாதை



கைதடி,ஓக.2

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஏ-9 வீதியில் மாட்டுவண்டி ஒன்று அண்மையில் உலா வந்ததைப் பலரும் ஆர்வத்துடன் பார்த்தனர்.

முதியவர் ஒருவர் யாழ் நகரில் இருந்து பொருள்கள் சிலவற்றை ஏற்றிக் கொண்டு வெகு உல்லாசமாக மாட்டு வண்டியில் ஏ-9 வீதியில் அண்மையில் சவாரி செய்தார். நவீன ரக வாகனங்கள் இவ் வீதியால் மிக வேகமாக வந்த போதும் இம் மாட்டு வண்டியைக் கண்டதும் வேகத்தைக் குறைத்து ஓரமாக நிறுத்தி இதற்கு மரியாதை செலுத்தியதனையும் அங்கு அவதானிக்க முடிந்தது. (எ-288)

# ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதைக் கடைகள் மீண்டும் முளைத்தெழ முயற்சி

யாழ்ப்பாணம்,ஓக.2

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் தடைசெய்யப்பட்டிருந்த நடைபாதை வியாபாரத்தை மீண்டும் ஆரம்பிக்க முன்னாயத்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது.

பாதசாரிகளுக்கும், வாகனங்களுக்கும் ஆஸ்பத்திரி வீதியில் மேற்கொள்ளப் பட்ட நடைபாதை வியாபாரம் காரணமாகப் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டன. அத்தோடு மக்கள் குறித்த நடைபாதைக் [illegible] மாக நின்று பொருள் [illegible] கொள்வனவு செய்வதனால் விபத்துக்களும் அடிக்கடி ஏற்பட்டன.

இதன் காரணமாக அண்மைக் காலமாக நடைபாதை வியாபாரம் இப்பகுதியில் தடைசெய்யப்பட்டதோடு, நடை பாதைக் கடைகளும் அகற்றப்பட்டிருந்தன.

எனினும் மீண்டும் இவ்வீதியில் நடைபாதை வியாபாரத்தை ஆரம்பிக்கும் நடவடிக்கையிலும், தற்காலிகக் கடைகளை அமைக்கும் பணியிலும் ஒரு சிலர் ஈடுபடுகின்றனர்.

இதனால் மீளவும் இந்த வீதியில் போக்குவரத்து நெருக்கடியும், விபத்து அபாயமும் தோன்றிவிடுமோ என மக்கள் எண்ணுவதாகக் கூறப்படுகின்றது. (எ-314-318)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபிள் வகைகள் மலிவு விற்பனையில்

வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சுவர் மாபிள்கள், நில மாபிள்கள், கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், யாழ்ப்பாணத்திற்கு நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட கால்மிதிபேசன்கள் போன்றவற்றை தரமான பொருளாகவும் மலிவான விலையிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**ஸ்ரார் செரமிக்ஸ்**

இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
0215672061, 077 7578277.

போக்குவரத்து வசதி இலவசம்.



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1212 சிவப்பு

சிங்கம்

11 18 51 53 — 30-07-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 3,005,450/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 226,222 | 20/- | 4,524,440/- |
| 2 இலக்கங்கள் | 20,802 | 40/- | 832,080/- |
| 1 இல. + லக்கினம் | 20,573 | 60/- | 1,234,380/- |
| 2 இல. + லக்கினம் | 1,883 | 200/- | 376,600/- |
| 3 இலக்கங்கள் | 557 | 1000/- | 557,000/- |
| 3 இல. + லக்கினம் | 44 | 10,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,005,450/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,564,500/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 612 | | 604,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 270,696 | | 9,169,000/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,016,100/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

13 22 27 49

ஜக்பொட் பரிசு ரூபா. 600,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 609 | 500/- | 304,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 600,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 612 | | 604,500/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.700,000/-


# நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் உள்ள கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி பொதுமுகாமையாளர் : 101-08

சம்பளத்திட்டம் (66/2006 இன்படி): 11200 - 14100 / 140 X10 - 150 X 10

**தகைமைகள்:**

01. கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்துக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருட அனுபவம்.

அல்லது

02. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத் துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப் பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

03. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தி/ க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

01. வயதெல்லை : 18-45 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

02. கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது என்பதுடன் அவர்கள் தமது விண்ணப்பத்தை தாம் பணி புரியும் சங்கத்தின் ஊடாகவே அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. கணனித் தகைமை அறிவு விரும்பத்தக்கது.

04. தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் பிணையை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை சங்கத்தில் 10ரூபா செலுத்திப் பெற்றுப் பூரணமாக்கி சான்றிதழ்களின் நிழல்பிரதியுடன் தலைவர், நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு என்ற முகவரிக்கு 14.08.2010 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ பதிவுத் தபாலிலோ அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவர்,**
**நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்**

(...1343)


**SHAMROCK** A/L- 2011 PAPER CLASS

★ அரசியல் Sat, Sun -10 Am — S.S.செந்தூரன்
★ புவியியல் Sat, Sun - 3 Pm — A.ராஜா

★ Gr 1 முதல் O/L வரை
★ Eng, Med. 6 To 11
★ Eng, Lit. 10 To 11
★ புலமைப் பரிசில் (5)
★ I.C.T., G.I.T
★ சிங்களம்



**மின்சார தராசு விற்பனை**

அரச அளவு நிறுவைத் திணைக்கள அங்கீகாரம் பெற்ற மின் தராசு வகைகள் விற்பனைக்குண்டு.

**நந்தலாலா இரும்பகம்**
29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.021 222 6234 (101461)



**தேவை**

யாழ்.நகர் பகுதியில் சாப்பாட்டுக் கடை நடத்துவதற்கு இடம்தேவை.
தொடர்பு:
0776142571 (ரிறா). (101462)



**மணமகன் தேவை**

யாழ் இந்து, வயது 26, உயரம் 5 '2", மிருக -சீரிடம் 4ம் பாதம், பாவம் 50 (3 சுற்று), இரண்டில் செவ்வாய் உள்ள கொழும்பில் Telecom Engineer (BSc) ஆக பணிபுரியும் மணமகளுக்கு உள்ளாடு/வெளிநாடு Engineer/Accountant மணமகன் தேவை.

தொடர்பு - 0777 852035



# STUDY IN UK

லண்டனில் உயர்கல்வி தொடர விரும்புவோர்களுக்கான ஓர் சிறிய சேவை.
ஆகக்குறைந்த தகைமை க.பொ.த.சாதாரண சித்தி. இத் தகைமையுடையோருக்கு VISA உறுதியாகப் பெற்றுத்தரப்படும். நமது சேவைகள் அனைத்தும் அடங்கியது.

NO NEED IELTS (AUGUST BATCH) NBC
451, Kandy Road, Nunavil Centre,
Chavakachcheri.
Tel: 0777491163, 0717706624.
(101089)


## கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் நீண்ட கால அங்கத்தவரும் வெள்ளிவிழாக் கண்ட நாயகனுமான

**அமரர் விநாசித்தம்பி சுப்பிரமணியம்**

(உரிமையாளர்- மணியம் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி)

அவர்கள் 30.07.2010ஆம் திகதி நடைபெற்ற வீதி விபத்தில் அகால மரணமடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

(சி/569620)

## நாவாந்துறை நீக்கிலஸ் ஆலயம் மீளமைப்பு

கொழும்புத்துறை, ஓக.2

நாவாந்துறை புனித நீக்கிலஸ் ஆலயம் புதிதாக இடவிஸ்தரிப்புடன் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

முன்னர் இருந்த ஆலயம் முற்றாக அகற்றப்பட்டு புதிய ஆலயத்தின் கட்டடப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

தற்போது இந்த ஆலயத்திற்கான வழிபாடுகள், சடங்குகளை நாவாந்துறை புனித மரியாள் ஆலயத்தில் மக்கள் மேற்கொண்டு வருவதாகப் பங்குத்தந்தை தெரிவித்தார்.

(த-145)

## மீண்டும் சொந்த இடத்துக்கு!

யாழ்ப்பாணம், ஓக.2

ஆனைக்கோட்டையில் தற்காலிகமாக இயங்கி வந்த தபால் நிலையம் மீண்டும் பழைய இடத்துக்கே சென்றுள்ளது.

கூழாவடியில் இயங்கிய இத் தபால் நிலையம் சில காரணங்களினால் சிறிது காலமாக ஆனைக்கோட்டையில் இயங்கி வந்தது. இத் தபாலகம் சில நாள்களுக்கு முன்னர் மீண்டும் கூழாவடிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(எ-314)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயாலே வந்தது — 14 . 04 . 1928

தீயாலே வெந்தது — 03 . 07 . 2010

**அமரர் வீரகத்தியார் சின்னத்தம்பி நடராஜா**

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர்)

எமது குலவிளக்கின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வும், அந்தியேட்டி நிகழ்வும் இன்று (02.08.2010) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நெல்லியடி கிழக்கு,
முடக்காடு, கரவெட்டி. (சி/569605)

**குடும்பத்தினர்.**

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08.12.1945





உதிர்வு
03.08.2006

**அமரர் லடிஸ்லாஸ் மேரிபேர்டினட்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

தேடாத இடமெல்லாம் தேடியே அலைகிறோம்
வாடாத உன் முகத்தைக் காணவே துடிக்கிறோம்
வற்றாத உன் சிரிப்பில் மூழ்கவே வேட்கை
சுவையான உன் பேச்சைக் கேட்கவே ஆசை-உம்மை
வேண்டாத நேரத்தில் வேண்டியே எடுத்திட்டான்-எம்மை
தீராத சோகத்தில் ஆழ்த்தியே விட்டிட்டான்.

அகத்திலும் புறத்திலும் உன் உருவம்
நிஜத்திலும் நிழலிலும் உன் மூச்சு-எம்மைத்
துரத்தியே வருகின்ற உன் நினைவு
நான்கு வருடமென்ன நாற்பது ஆண்டுகள் ஆனாலும்
தாளாது எம் துயரம் தயங்காது எம் கண்ணீர் தளராது எம் அன்பு

மனையாளும், மக்களும், பெற்றவளும், உற்றவரும்
நீ சென்ற இத்தினத்தில் உனை நினைந்து
முடிவில்லா வாழ்வில் இன்புற்றிருக்கவே
நெஞ்சார வாழ்த்தி கண்ணீர் சொரிந்து கதறி நிற்கின்றோம்.



நாளை (03.08.2010) செவ்வாய்க்கிழமை காலை 6மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளை, தாய், சகோதரர்கள்.

முதலாம் குறுக்குத்தெரு,
பாசையூர், யாழ்ப்பாணம். (101292)


# මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

30.07.2010

அலுவலக முடிவுகள் — சீட்டிழுப்பு இல. 2272

வெற்றி எழுத்து: K — வெற்றி எண்கள்: 7 4 2 4 5 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K | 7 | 4 | 2 | 4 | 5 | 0 | ரூபா.14,876,549/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 7 | 4 | 2 | 4 | 5 | 0 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 4 | 2 | 4 | 5 | 0 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 2 | 4 | 5 | 0 | ரூபா. 10,000/= | பரிசுகள் 142 |
| 4 பரிசுகள் | | | | | 4 | 5 | 0 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1353 |
| 5 பரிசுகள் | | | | | | 5 | 0 | ரூபா. 100/= | பரிசுகள் 13594 |
| 6 பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. 20/= | பரிசுகள் 135140 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 7 | 4 | 2 | 4 | 5 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 7 | 4 | 2 | 4 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 135 |
| 9 பரிசுகள் | | 7 | 4 | 2 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1358 |
| 10 பரிசுகள் | | 7 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13479 |
| 11 பரிசுகள் | K | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 54094 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 14,391,830.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

மக்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி. கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் காணி உரிமை இல்லாததால் 2466 பேர் வீட்டுத்திட்ட உதவிகளை இழக்கும் நிலை!

## 'நேர்ப்' பிரதித்திட்டப் பணிப்பாளர் தகவல்

கிளிநொச்சி,ஓக. 2

கிளிநொச்சி மாவட்டத்தில் 3290 பேருக்கு வீடமைப்பு உதவிகள் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் காணி உரிமம் இல்லாததால் 2466 பேருக்கு உதவி வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

'நேர்ப்' திட்டத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் கந்தையா தெய்வேந்திரன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள மக்களிடம் காணி உரிமைப் பத்திரங்கள் இன்மையால் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டமான 'நேர்ப்'திட்டத்தின்கீழ் வீட்டுத்திட்டப் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்திற்கு முன்னரான சமாதான காலத்தில் 'நேர்ப்' திட்டத்தின்கீழ் 1490 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 2006 ஆம் ஆண்டு வீட்டுத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன.

இதில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 746 பேரும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 179 பயனாளிகளும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 325 பயனாளிகளும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 240 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் மீள் குடியேற்றத்தின் பின்னர் 571 பேரின் வீட்டுத்திட்டப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏனையோரும் எம்முடன் தொடர்பு கொள்ளுமிடத்து அவர்களது பணிகளும் மீள ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் தற்போது நடைமுறைப் படுத்தப்படும் புதிய திட்டத்தின்கீழ் 3290 பயனாளிகளுக்கு அனுமதி கிடைத்துள்ள போதிலும், 824 பயனாளிகளை மட்டுமே இனங்கான முடிந்துள்ளது. ஏனெனில் தெரிவுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களில் பெருமளவானோரிடம் காணி தொடர்பான உரிமைப் பத்திரங்கள் இல்லை. இதனால் அவர்களைப் பயனாளிகளாகத் தெரிவு செய்ய முடியவில்லை.

புதிய திட்டத்தின்கீழ் கரைச்சி பிரதேச செயலர்பிரிவில் 1997 பேருக்கும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 270 பயனாளிகளுக்கும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 837 பயனாளிகளுக்கும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 184 பயனாளிகளுக்குமாக மொத்தமாக 3290 பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டத்தினை வழங்க முடியும்.

ஆனால் தற்போது கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 258 பேரும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 227 பேரும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 215 பேரும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 184 பேரும் ஆக மொத்தமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 824 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீட்டுத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ-405)

## சம்புக்குளத்தில் ஊக்குவிப்பு திட்டம்

கிளிநொச்சி,ஓக. 2

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சம்புக்குளம் கிராமத்தில் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சம்புக்குளம் கிராம மாதர் சங்கத்தினூடாக டி.ஆர்.சி நிறுவனத்தினரால் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சம்புக்குளம் கிராமத்தில் மீள்குடியேறியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்தச் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டம் சுழற்சி முறையில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான பயனாளிகளைப் பதிவு செய்யும் கலந்துரையாடல் ஒன்று சம்புக்குளம் கிராமத்தில் இடம் பெற்றது. (ஐ-405)

## தருமபுரத்தில் கி.அ.சங்கம்

கண்டாவளை,ஓக. 2

தருமபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் கண்டாவளைக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

புதிய நிர்வாக

உத்தியோகத்தர்களாக த.சரவணம் (தலைவர்), க.ஜெயக்குமார் (செயலாளர்), க.சிவநாதன் (பொருளாளர்), அ.முருகேசு (உபதலைவர்), து.கிருஸ்ணசிங்கம் (உப செயலாளர்), உறுப்பினர்களாக மு.செல்லையா, கோ.வேல்முருகு, க.தர்மலிங்கம், கி.சத்தியநாதன், பெ.அப்பாவு, நா.சந்திரகுமார், இ.ஞானரத்தினம், பு.நல்லையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ-432)

## கனகபுரம் ம.வியில் ஒன்று கூடல்

கிளிநொச்சி,ஓக. 2

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய க.பொ.த. உயர்தர மாணவர் ஒன்று கூடல் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கரைச்சி பிரதேச செயலர் திருமதி கு.சுலோஜினியும் சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கமும் கலந்து கொண்டனர்.

முன்னதா விருந்தினர்கள் உயர்தர மாணவரால் நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு மண்டப நிகழ்வுகள் நடைபெற்றன. தொடர்ந்து மதிய போசன விருந்துபசாரமும் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம் பெற்றதோடு விருந்தினர் உரைகளும் இடம் பெற்றன. (ஐ-405)

## கிளிநொச்சி பொதுச் சந்தைக் கடைகளை திறக்காவிட்டால் சட்ட நடவடிக்கை

### ஆணையாளர் எச்சரிக்கை

கிளிநொச்சி,ஓக. 2

கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் பூட்டிய நிலையில் உள்ள வர்த்தக நிலையங்களை உடனடியாகத் திறக்கும்படி கரைச்சிப் பிரதேச சபை வர்த்தகர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் பூட்டிய நிலையிலுள்ள சகல வர்த்தக நிலையங்களையும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்பாகத் திறக்கும்படி கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு பின்னர் திறக்கப்படாத சகல வர்த்தக நிலையங்களின் வியாபார உரிமம் ரத்துச் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-432)




## தருமபுரம் ம.வியின் 160 மாணவருக்கு அரிக்கன் லாம்புகள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி,ஓக 2

கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஜி.சீ.ஈ (சாதாரண) தரத்தைச் சேர்ந்த 160 மாணவர்களுக்கு ஒளிவிளக்குத் திட்டத்தின் கீழ் அரிக்கன் லாம்புகளைக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் வழங்கியுள்ளார்.



வித்தியாலயத்தில் இடம் பெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த உதவிகளை வழங்கினார்.

அத்துடன் வித்தியாலய பாண்ட் வாத்திய அணிக்கு நிதி உதவியையும் அவர் வழங்கினார்.

வித்தியாலய அதிபர் பூலோகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிவஞானம் சிறிதரன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்கியதுடன், மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உதவிகளையும் வழங்கினார்.

குறிப்பாக எதிர்வரும் க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவும் நோக்குடன் தனது "ஒளி விளக்கு" திட்டத்தின்கீழ் மாணவர்களின் பெற்றோர்களுக்கு 160 அரிக்கன் லாம்புகளை அவர் வழங்கினார். (ஐ)

## மன்னாரில் கழுதைகளுக்கு மறுவாழ்வு; கணக்கெடுப்புப் பணி ஆரம்பமாகியது

மன்னார்,ஓக. 2

மன்னார்ப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கழுதைகளின் தொகை பற்றிய கணக்கெடுப்பு ஆரம்பமாகியுள்ளது. இதற்கான பணிப்புரைகள் பிரதேச செயலாளரால் கிராம சேவைகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மன்னாரில் தற்போது கட்டாக்காலிக் கழுதைகள் பல்கிப் பெருகியுள்ளன. இவைகள் நகரின் பேருந்து நிலையங்கள், வர்த்தகப் பகுதிகள், பாடசாலைகள், பள்ளிகள், கோயில்கள் மற்றும் தெரு வீதிகளில் அலைந்து திரிந்து நகரை அசுத்தம் செய் [illegible] ஓடித்திரிந்து பொது [illegible] துக்களையும் ஏற்படுத்துகின்றன.

ஒரு காலத்தில் 'விண்ணர்' களின் செல்லப் பிள்ளைகளாகவும், பொதி, சுமக்கும் வாகனங்களாகவுமிருந்த இவைகள் தற்போது முற்றாகக் கைவிடப்பட்ட நிலையில் கட்டாக் காலிகளாகிவிட்டன.

எனவே இவைகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தி மறுவாழ்வளிக்கும் முகமாக இக் கணக்கெடுப்பு இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் தற்போது கழுதைகள் தென்னந் தோட்டங்களில் வண்டுகளை ஒழிக்கும் பணியில் பெரும் சேவையாற்றி வருகின்றன. (ஐ-80)

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

கிளிநொச்சி,ஓக. 2

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேச சபையும், பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமை வரை காலை 9 மணிக்குக் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கரைச்சி உதவி அரசாங்க அதிபர் திருமதி கு.சுலோஜினி கலந்து கொள்வார். (204-432)

## கிளிநொச்சியில் தேர்தல் அலுவலகம்

கிளிநொச்சி,ஓக. 2

கிளிநொச்சி செயலகத்தில் கடந்த ஜூன் மாதம் தேர்தல் அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது.

இந்த அலுவலகத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக ஏ.எஸ். கருணாநிதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் கொழும்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றியவராவர்.

இந்த அலுவலகம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தேர்தல் செயலக பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது இவ்விரு மாவட்டங்களிலும் வாக்காளர்களைப் பதிவு செய்யும் பணியினை இந்த அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. (ஐ-405)

## கண்டாவளையில் தற்காலிக வீட்டுத்திட்டம்

கிளிநொச்சி,ஓக. 2

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சோஆ நிறுவனத்தினரின் தற்காலிக வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நாவல்நகர், ரங்கன் குடியிருப்பு ஆகிய கிராமங்களில் முதலாம் கட்டமாக 70 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன.

அடுத்தகட்டமாக நாவல்நகர், ரங்கன் குடியிருப்பு, இரட்டைப்பனைக் குளம், பிள்ளையார்குளம் போன்ற கிராமங்களில் உள்ள குடியிருக்க வீடுகளற்ற குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்து வழங்கப்படுவதுடன் மலசல கூட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-405)

## பரீட்சைகள் குறித்த அறிவுறுத்தல் கூட்டம்

கிளிநொச்சி,ஓக. 2

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தர, தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சை, பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை ஆகியவற்றில் கடமைகளில் ஈடுபடவுள்ளவர்களுக்கான பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை கிளிநொச்சி மகா வித்தியால யத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரீட்சை நிலைய நிர்வாகி, பரீட்சை நிலைய உதவி நிர்வாகி, இணைப்பு அலுவலர், உதவி இணைப்பு அலுவலர் ஆகியோருக்கே இந்த அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைகளில் குறித்த கடமைகளுக்கு நியமிக்கப்பட்டவர்களை இக் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-405)

## கிளிநொச்சி திரேசாவில் கௌரவிப்பு நிகழ்வு

கிளிநொச்சி,ஓக. 2

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் இருந்து 2009 ஆம் ஆண்டு தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-405)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

சமுர்த்தி வாழ்வாதாரக் கருத்திட்டத்தின் மூலம் தையல் இயந்திரம் பெற்ற சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகளின் திட்டமுன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பி.ப.2 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் ஏ.அன்ரன் யோகநாதன் தெரிவித்துள்ளார். (எ-313-318)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 29.07.2010 அன்று இல.19, கண்டிவீதி, பதுளையில் சிவபதமடைந்த எமது உறவினரான

**காசிநாதசுவாமி கிருஷ்ணராஜா சர்மா**

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து மிகுந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குருக்கட்டுப் பிள்ளையார் கோயில்,
வல்லிபுரம், துன்னாலை. (101466) க.சாந்தரூப சர்மா

இணுவில் -இளவாலை

**திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரை** அவர்களின்
31 ஆம் நாள் அந்தியேட்டித்தின அஞ்சலியும்
நன்றி நவிலலும்



தாய்மடியில்
24.03.1944

சிவனடியில்
03.07.2010

எங்கள் இல்லத்து அரசியோ!
பார்க்கும் இடங்களெல்லாம்
உன் பவளமுகம்
தோன்றுதம்மா
கேட்கும் குரல்கள் எல்லாம்
உன்குரலாய்க் கேட்குதம்மா
எல்லாமாய் நீயிருந்து
எங்களை வாழ்வித்தாய்
எல்லாம் இழந்தோமே
உன்போல் இனியாரம்மா
உன் ஆத்ம சாந்திக்காய்
ஓயாது தொழுகின்றோம்.

எங்கள் தெய்வத்தாய் திடீரென இறையடி சேர்ந்தபோது தேடிவந்து துயர்பகிர்ந்தும், பல்வேறு விதங்களில் உதவிகள் செய்தும் ஆறுதல் தந்தோர் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

கணவர்: சு.செல்லத்துரை,
மைந்தர்களான: நாவரசன்,மாவிரதன்
இளவாலை. (சி/569194) குடும்பத்தினர்.

## ஜும்மா பள்ளிவாசல் வீதி மோசமாகச் சேதம்

யாழ்.ஜும்மாப் பள்ளிவாசல் வீதி மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கவும், பள்ளிவாசலில் தொழுகைகளை மேற்கொள்ளவும் இவ்வீதியூடான பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது.

இவ்வீதியை புனரமைத்து உதவுமாறு அப்பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (த-135)

## நுளம்புகளைத் தேட துப்பாக்கி கிடைத்தது

கொழும்பில் டெங்கு ஒழிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் ரி-56 ரக துப்பாக்கியொன்றை கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்கிசைப் பகுதியில் கடற்படையினர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக கழிவு வாய்க்காலொன்றைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சேற்றினுள் மறைந்திருந்த இந்த ரி-56 ரக துப்பாக்கியைக் கண்டு அதனைக் கைப்பற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் பொது மக்களின் உதவியுடன் துப்பாக்கியை வீசிச் சென்றவர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (க)


**Multimedia மற்றும் Accounting**
கணினி பாடநெறிகளுக்கு சிறப்புக் கட்டணச்சலுகை

கிராமம் முதல் நகரம் வரை காணப்படும் 20 கணினி பயிற்சி மையங்களிலும் இச்சலுகை வழங்கப்படுகிறது

**Bumper Offer**
பரீட்சைகள் எதுவும் இன்றி நேரடியாக தெரிவு செய்யும் எந்தவொரு பாடநெறிக்கும்
50% கட்டணச் சலுகை

Dip in Video Editing
Dip in Computerized Accounting
Dip in Graphic Design
Tally Accounting Technician
Dip in 3D Modeling & Graphics
Professional Video Production

Free study pack for all courses

**aat** All Three Stages
December பரீட்சைக்கான புதிய வகுப்புக்கள்..

யாழ் குடாநாட்டில்...

**TECHNO WORLD**
Studies (Pvt) Ltd
கணினிப் பயிற்சி நிறுவனம்

கஸ்தூரியார் வீதியில்
344, கஸ்தூரியார் வீதி
021-4921124


மானிப்பாயில்
தினேஸ் வெதுப்பக மேல்மாடி,
182, யாழ் வீதி 021-4922400

திருநெல்வேலியில்
64, பலாலி வீதி
021-4922401

சாவகச்சேரியில்
கென்ஸ்மன் வீதி, நீதிமன்றம் எதிரில்
021-5102600

கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்


# மரண அறிவித்தல்



## வினாசித்தம்பி சுப்பிரமணியம்

**(மணியம் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி)**

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி சுப்பிரமணியம் 31.07.2010 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி- மாணிக்கம் தம்பதியரின் மூத்த மகனும் வேதாரணியம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நடனேஸ்வரியின் பாசமிகு கணவரும் கேமாவதி (ஆசிரியை, யா/ டிறிபேக் கல்லூரி), தயாபரன் (நில அளவையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அற்புதரவியின் மாமனும் கனகம்மா, வேலாயுதபிள்ளை, மங்கையர்க்கரசி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நடேசபிள்ளை, திருவிளங்கம், கோபாலபிள்ளை, இராசலட்சுமி மற்றும் கமலாவதி, சிவமூர்த்தி (ஓய்வுபெற்ற நில அளவை அலுவலகர்), தியாகராசா (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்) ஆகியோரின் மைத்துனரும் நவபாலகுமாரன், வசந்தமலர், சிவயோகமலர், தேவகுமாரன், தவமணி, மலர்விழி, ஐங்கரன், யாமினி, மதிவதனா, சந்திரகலா, சசிகலா, சிவகலா ஆகியோரின் மாமனும் செந்தில், தயாளினி, தர்மினி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2010) முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிக்காடு (மட்டுவில்) மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு ஒழுங்கை,
மட்டுவில்.
தொ.பே: 0213001372

தகவல்:
குடும்பத்தினர்.
(சி/569622)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க 'கப்பினஸ்' அணி வெற்றிக் கிண்ணம் சுவீகரித்தது



யாழ்ப்பாணம் , ஓக. 2

திலீபனின் சிறப்பான ஆட்டம் கை கொடுக்க 'கப்பினஸ்'(ஏ) அணி 'ஸ்ரார் போய்ஸ்' அணியை 11ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் பாசையூர் 'கோல்டன் ஸ்ரார்' விளையாட்டுக்கழகம் நடத்திய அமரர் இராயப்பு யோகேந்திரன் ஞபகார்த்த வெற்றிக் கிண்ண உள்ளூர் அணிகளுக்கு இடையிலான 6 பேர் பங்குகொள்ளும் 5 பந்து பரிமாற்றங் களைக் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

'கப்பினஸ்' (ஏ) அணியை எதிர்த்து 'ஸ்ரார் போய்ஸ்' அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற 'ஸ்ரார் போய்ஸ்' அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவதாகக் கூறியதை தொடர்ந்து 'கப்பினஸ்' (ஏ) அணி துடுப்பெடுத்தாட களம் இறங்கியது.

'' கப்பினஸ்'(ஏ) அணியினர் ஐந்து ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்ட ங்களைப் பெற்றது.

டெனோல்டன் 13 ஓட்டங்களை யும் டெனோசன் 23 ஓட் டங்களையும் திலீபன் ஆட்டமிழக் காமல் 43 ஓட்டங்க ளையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

றெஜின், லவன் ஆகியோர் முறையே தலா ஒரு விக்கெட்டை வீழ்த் தினர்.

85 ஓட்டங்களைப் பெற்றதால் வெற்றி யென களம் இறங்கிய 'ஸ்ரார் போய்ஸ்' அணி நான்கு விக்கெட்டுக்களை 73 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

சுஜித், 29 ஓட்டங்களையும் , சுரேன் 21 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

யதீபன்,ஒரு விக்கெட்டையும் டெனோசன் இரண்டு விக்கெட்டுக்களையும் கலிஸ்ரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த் தினர்.

கப்பினஸ்( ஏ) அணி 11 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சிறந்த ஆட்ட நாயகன் விருதினை கப்பினஸ் (ஏ) அணி வீரன் அ.திலீபன் பெற்றுக் கொண்டார்.

போட்டியில் அறு அடித்த வீரனுக்கு உரிய விருதுக்கு கப்பினஸ் (ஏ) அணி டெனோல்ரன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த பந்து வீச்சாளருக்குரிய விருதினை ஸ்ரார் போய்ஸ் அணி வீரன் றெஜின் பெற்றுக்கொண்டார். (ஐ-23)

## வள்ளம் ஓடும் போட்டியில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம் , ஓக.2

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி நடத்திய பாய் விரித்து வள்ளம் ஓடுதல் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

''ஏ'' பிரிவு வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

கோ.குணகரன், வி.செல்வகுமார், க.சந்திரகுமார்.

''பி'' பிரிவில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

வே.தேவராசா, சி.ஆனந்தராசா, நா.சோமசுந்தரம். (ஐ-23)

# காவலூர் சென். ஜேம்ஸ் வி.க.வை 4 ஓட்டங்களால் வென்றது காந்திஜி

யாழ்ப்பாணம் , ஓக 2

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் 4 ஓட்டங்களால் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

மனித உரிமைகள் இல்லம் நடத்திய 6பேர் பங்கு கொள்ளும் 5 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வாரம் இடம்பெற்றது.

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணிமோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.இதற்கமைய தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது.

கதீசன் 26ஓட்டங்களையும் அருள்ராஜ், 20 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பிரசாந் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி 5 ஓவர் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பிரசாந்26ஓட்டங்களையும் யூட் 10 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற் றுக் கொடுத்தனர்.

சத்தியராஜ் 2 விக்கெட்டுக்களையும், அரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.(ஐ-23)

# வளர்மதி வி.கவின் கரப்பந்தாட்டப் போட்டி; இந்து இளைஞர், கே.கே.எஸ் அணிகள் வென்றன




யாழ்ப்பாணம் , ஓக 2

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த புதன்கிழமை வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டங்களாக இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி எதிர்த்து விளையாடிய மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கைதடி மின்ஒளி விளையாட்டுக்கழக அணி மோதியது.

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடிய கைதடி மின் ஒளி விளையாட்டுக்கழக அணியை 2:0 என்ற கணக்கில் வெற்றி கொண்டது. (ஐ-23)

# 19 வயது பெண்கள் பிரிவில் வெற்றிபெற்றோரின் விவரம்

வலி.வடக்கு , ஓக. 2

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான தடகளப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**நீளம் பாய்தல்**

வி.தனுஷியா 4.74 மீற்றர்- மன்னார் அல்மினா மகா வித்தியாலயம், பி.அஜரின் ஸ்ரெலாபீரிஸ் - மன்னார் அரிப்பு மகா வித்தியாலயம், எஸ். விதுசிகா -வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

**முப்பாய்ச்சல்**

க.சியாணி- யாழ்.வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்,ஆ. அஜிதா -தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, ச.பானுஜா - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, எஸ் .விதுசிகா - வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயம்.

**கோலூன்றிப் பாய்தல்**

ச.தனுஜா 2.40 மீற்றர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி,இ. ஜக்சனா - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

**குண்டு போடுதல்**

கா. கஜானி 7.64 மீற்றர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.ஸ்ரீதசாங்கி - கிளிநொச்சி சென்.திரேசா மகளிர் கல்லூரி, பி.கஜேந்திரன் - வவுனியா கிடாய்சூரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அ.கோபிகிருஸ்ணா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

**தட்டெறிதல்**

க.சியானி 25.48மீற்றர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், ச.யசோதா - புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி, முல்லைத்தீவு கோட்டை கட்டியகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை,எஸ். டார்ளினா லம்பேட்- மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்.

**ஈட்டியெறிதல்**

ச. ஜானகி (26.85மீற்றர்) வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பா. மாதங்கி -கிளிநொச்சிஇந்துக் கல்லூரி, ச.யசோதா-புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரி ,ஜே.சுமிதா- முல்லைத் தீவு கோட்டை கட்டியகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

**4 x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**

அளவெட்டி அருனோதயாக் கல்லூரி, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.

**4 x 400 மீற்றர் அஞ்சலோட்டம்**

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி,அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை, யாழ்.மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி. (ஐ-86)

## முன்பள்ளியின் விளையாட்டு விழா

காரைநகர் , ஓக. 2

காரைநகர் வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற உள்ளது.

வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச. சண்முகசங்கரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம வித்தியாலய அதிபர் பொ. சிவானந்தராசாவும் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்தியமூர்த்தி, காரைநகர் பிரதேசசபை செயலாளர் இ. லோகநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(201-250)



பாசையூர் கோல்டன் ஸ்ரார் கோஷ்டி அமரர் இராயப்பு யோகேந்திரன் ஞபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக உள்ளூர் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை றோய் பேடினன் அவர்களுக்கு வீரர்களை அறிமுகம் செய்துவைப்பதை முதல் படத்திலும்,சிறந்த ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட கப்பினஸ்(ஏ) அணி வீரன் அ.திலீபனுக்கு டியூறன் அவர்கள் விருதினை வழங்குவதை இரண்டாவது படத்திலும் சிறந்த பந்து வீச்சாளராக தெரிவு செய்யப்பட்ட ஸ்ரார் போய்ஸ் அணி வீரன் எஸ். றெஜினுக்குரிய விருதினை கி.தட்சன் வழங்குவதை மூன்றாவது படத்திலும் வெற்றி பெற்ற கப்பினஸ் அணித் தலைவர் கொலினிடம் கி. டேமியன் வெற்றிக் கிண்ணத்தினை வழங்குவதனை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**ஈஸ்வரி பரமகுரு**
B.Sc., Dip.in.Edu.
(இளைப்பாறிய ஆசிரியர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

தோற்றம்:
02.08.1937

மறைவு:
24.07.2008

உள்ளத்தால் உயர்வாகி வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் தெய்வமே!
ஈராண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறாது எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

முத்துமாளிகை,
பருத்தித்துறை. (98224/3338) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை செல்லத்துரை



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை 26.07.2010 கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-ஐயாத்தைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் தேவியின் (கனடா) அன்புக் கணவரும் யோகேஸ்வரி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), சந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்), உமாநந்தினி (கனடா), சிவறூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் குறிஞ்சி (பிரான்ஸ்), நதி (பிரான்ஸ்), சாம்பவி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் தம்புநாதர், காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் சகோதரரும் பத்மாதேவி, காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கணேசன், சுப்பிரமணியம், குமாரசாமி, பாலகிருஷ்ணன், தெய்வநாயகி, நவநீதகிருஷ்ணன், பரமேஸ்வரிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.08.2010) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
*யோகேஸ்வரி (லதா-மகள்)*
புன்னாலைக்கட்டுவன். (101467) *0711524866.*

## அராலியூர் சிவஸ்ரீ சிற்சபேசக் குருக்கள் உமாசுதசர்மா



அராலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்சபேசக்குருக்கள் உமாசுதசர்மா கடந்த (31.07.2010) சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஸ்வாமிக் குருக்கள்-கனகசௌந்தரம்மா தம்பதியரின் மூத்த பேரனும் காலஞ்சென்ற சிற்சபேசக்குருக்கள் மற்றும் இலட்சுமி அம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் பாலசுப்பிரமணியசர்மா, லோகநாயகி (Sweedan) தம்பதியரின் அன்பு மருமகனும் வத்சலா அம்மாவின் அன்புக் கணவரும் இரவிச்சந்திரசர்மா (மானிப்பாய்), சசிகலா (France) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவசுதக்குருக்கள் (France), சுந்தரராஜசர்மா (Swiss), சுகுமாரக்குருக்கள் (Swiss), ரவீந்திரசர்மா (Sweedan), சுதாகரசர்மா (Swiss) காலஞ்சென்ற வாசுதேவசர்மா (Sweedan) மற்றும் சுதர்சினி (Sweedan) ஆகியோரின் மைத்துனரும் சுகுமாரசர்மா(Canada), ஜெயக்குமாரக் குருக்கள் (மருதடி), முத்துக்குமாரசர்மா (இளவாலை), பவதாரணி (இளவாலை) ஆகியோரின் உடன்பிறவாத சகோதரனும் ராஜவர்மன், சைநிகா, சிபிவிஷ்டன் (France) ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி சிற்சபேசக்குருக்கள் (தாய்-அராலி)
தொ.பே: 0217900244.
சி.இரவிச்சந்திரசர்மா (சகோதரன்-மானிப்பாய்)
தொ.பே: 0214922951.

*வத்சலா அம்மா*
*00497623718076*
*ஜேர்மனி.* (101471)

## உதவிப் பொருள்கள் விநியோகம்

தென்மராட்சி,ஒக 2

நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியேறிய குடும்பங்களின் 200 பேருக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினால் கடந்த மாதம் 28ஆம் திகதி உதவிப் பொருள்கள் விநியோகிக் கப்பட்டன.

இதுவரை உதவிப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளாத 582 பேரின் பெயர்ப் பட்டியல் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட போதிலும் 200 பேரே பொருள்கள் பெறவந்திருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

(எ-207)

## இளைஞர் காயம்

தென்மராட்சி,ஒக 2

உழவு இயந்திரத்திலிருந்து தவறி வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் பளை தம்பகாமத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ரி.புவனேந்திரன் (வயது 25) என்பவரே இச்சம்பவத்தில் காலில் காயமடைந்த நிலையில் பளைப் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

(எ-207)

## விபத்துக்களில் மூவர் காயம்

தென்மராட்சி,ஒக 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துக்களில் சிக்கி மூவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளும்-சைக்கிளும் மோதியதில் நாவற்குழியைச் சேர்ந்த கனகேந்திரன் (வயது 31), மீசாலையைச் சேர்ந்த ஆர்.தர்மலிங்கம் (வயது 50) ஆகியோரும் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் சாவகச்சேரியைச் சேர்ந்த ஏ.திருப்பதி (வயது 45) என்பவருமே இவ்வாறு காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-207)

## ஓய்வுபெறுகிறார்

தென்மராட்சி,ஒக 2

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தில் தொழில்நுட்ப சேவையாளராகக் கடமையாற்றிய கே.நவரத்தினம் ஓய்வுபெற்றுள்ளார்.

கடந்த 26 வருடங்கள் மின்சார சபையில் கடமையாற்றி ஓய்வுபெறும் இவருக்கு சக உத்தியோகத்தர்களால் அண்மையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

பிரிவு மின்பொறியியலாளர் அன்ரன் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற பிரிவுபசார நிகழ்வில் சக உத்தியோகத்தர்கள் சார்பில் பரிசில்கள் வழங்கப்பட்டன. (எ-207)

## எண்ணெய் அகழ்வு ஜனவரியில் ஆரம்பம்

கொழும்பு,ஒக 2

மன்னாரில் எண்ணெய் அகழ்வு வேலைகள் ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகுமென எண்ணெய் வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறியுள்ளார்.

இந்திய நிறுவனம் ஒன்றே இலங்கையிலுள்ள தனது முகவர் நிறுவனத்தின் மூலம் இந்த எண்ணெய் அகழ்வு வேலைகளை மேற்கொள்ள விருக்கின்றது.

இதில் முதற்கட்டமாக மூன்று எண்ணெய்க் கிணறுகளின் அகழ்வுவேலைகள் நடைபெறவிருக்கின்றன. இந்த வேலைகளுக்கான கூறுவிலைகள் சர்வதேச ரீதியில் கோரப்பட்டுள்ளன. இவ் வேலைகளுக்கான உத்தேச மதிப்பீடு 18 பில்லியன் ரூபாய்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)

## வறுமைக்கோட்டின் கீழுள்ள மாணவர்களுக்கு நிதியுதவி

தென்மராட்சி,ஒக 2

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் மன்ற அங்கத்தவர்களின் அனுசரணையுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்வி வளர்ச்சி நிதி மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.

கல்வி வளர்ச்சி நிதி வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்ட பத்தில் நடைபெற்றது.

முதற் கட்டமாக 12 மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி நிதி வழங்கப்பட்டது.

(த-207)

# நீங்காத நினைவுடன் மூன்றாம் ஆண்டு....



அமரர்
**கணபதிப்பிள்ளை சத்தியரூபன்**

மலர்வு
21.12.1975

உதிர்வு
02.08.2007

மூன்று ஆண்டுகள் என்ன?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில் என்றும்
நிலைத்திருப்பீர்.

குடும்பத்தினர்.

473, அக்கராயன் குளம்,
கிளிநொச்சி.

# நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

*எமது சங்கத்தில் உள்ள கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமை உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*01.பதவி:- பொதி ஊர்தி சாரதி - 312:13*
*சம்பளத்திட்டம் (66/2006இன்படி):- 9950 -11700 / 85X10-90X10*

**தகைமைகள்:**

*01. 05ஆம் வகுப்பு கல்வித் தராதரப் பத்திரம், அத்துடன் சாரதிக்கான பாரவூர்த்தி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். 4 வருட அனுபவம்.*

*02. வயதெல்லை 18-45 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.*

**விண்ணப்பிக்கும் முறை**

*தாங்கள் விண்ணப்பப்படிவத்தை சுயமாகத் தயாரித்து தலைவர், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு என்ற முகவரிக்கு 14.08.2010 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ பதிவுத் தபாலிலோ அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*விண்ணபத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பொதி ஊர்தி சாரதி பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடவும்.*

தலைவர்,
(101343) நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்.



**தற்போது வடக்கில் என்றும் இல்லாத குறைந்த விலையில்**
**DIGITAL PHOTOCOPY MACHINE கள் எமது காட்சியறையில்....**

TOSHIBA estudio 161,163,165,166,205,232,282,352,452

SHARP AR MI60 (5316), AR MI65 (5516), AR M205, AR M207 Refurbished Machines Now Available

A3, A4 Printing Photocopy செலவில்.....
A3 Color Scanning (600 Dpi) வசதியுடன்.....
தன்னியக்க காகித உட் செலுத்தி ADF
இரட்டை பக்க தன்னியக்க காகித உட்செலுத்தி RADF
தன்னியக்க இரட்டைப் பக்க பதிப்பு Duplex
மேலதிக காகித தாங்கி Extra Cassete
விற்பனைக்கு பிந்திய இலவச பராமரிப்பு சேவை
மிக மிக குறைந்த செலவில் பிரதி செய்யக்கூடிய வழிமுறைகள்
மிக மிக குறைந்த விலையில் உதிரிப்பாகங்கள்

விலை 48000/- முதல்....


AR M207

**NORTHERN OFFICE AUTOMATION**
**738A, Hospital Road, Jaffna, Sri Lanka.**
**0215678800, 0215679900, Mobile-0773475220**
email-northernofficeautomation @ gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் மீண்டும் வெடித்தது கலவரம் துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் பரிதாபப் பலி!

## ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலில் 30 பொலிஸார் காயம்

ஸ்ரீநகர், ஓக. 02





காஷ்மீரில் மீண்டும் வெடித்த கலவரத்தின்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் பலியாகினர். அத்துடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் மட்டும் 30 பொலிஸார் உட்பட 40 பேர் காயமடைந்தனர்.

காஷ்மீரில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 10 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். பின்னர் கலவரம் ஓய்ந்திருந்த நிலையில், ஸ்ரீநகரில் பிரிவினைவாத அமைப்பினர் நடத்திய ஊர்வலத்தைத் தொடர்ந்து மீண்டும் கலவரம் வெடித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்ததும் ஊர்வலமாகச் சென்றவர்கள், பொலிஸாரைத் தாக்கினார்கள். இதனால் பொலிஸார் தடியடி - துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். பல்வேறு நகரங்களில் நடைபெற்ற கலவரம் - துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களில் 2 பேர் பலியானார்கள். 70 இற்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

அவர்களில் பாரமுல்லா மாவட்டத்தைச் சேர்ந்த 2 பேர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் காலை பலியானார்கள்.

சும்பல் பகுதியில் உள்ள காஷ்மீர் ஆயுதப்படை பொலிஸ் தலைமையகத்துக்குள் நூற்றுக்கும் மேற்பட்டோர் நுழைந்து தீ வைத்தனர். அத்துடன், பொலிஸாரின் ஆயுதங்களை அவர்கள் பறித்துக் கொண்டனர். இதையடுத்து பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும், துப்பாக்கிச் சூடு நடத்தியும் அவர்களை விரட்டியடித்தனர்.

இதன்போது முத்தாசிர் அகமது லோன் என்ற இளைஞர் காயமடைந்தார். பின்னர் வைத்தியசாலையில் அவர் இறந்தார். ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலில், பொலி ஸ் அதிகாரி உட்பட 10 பேர் காயம் அடைந்தனர்.

பாரமுல்லா பகுதியில் இறப்பர் தோட்டாவால் பொலிஸார் சுட்டதில் ஜாவீது அகமது என்ற இளைஞர் காயமடைந்தார். பின்னர், அவர் வைத்தியசாலையில் உயிரிழந்தார். இதன்மூலம், 2 நாள்களில் பலியானோர் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது.

பல்வேறு இடங்களில் பொலிஸாருடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மோதினர். பத்தான் என்ற இடத்தில், சிறப்புப் படை முகாமைத் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டுக் கொளுத்தினர். தீயை அணைக்க வந்த தீயணைப்பு வாகனத்தையும் அவர்கள் எரித்தனர். பத்தான் பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்த மத்திய ரிசர்வ் படைப் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் 5 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் நடந்த வன்முறையில் மட்டும் 30 பொலிஸார் உட்பட 40 பேர் காயம் அடைந்தனர்.

இதையடுத்து, முதல்வர் உமர் அப்துல்லா தலைமையில் உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது. அதில், அமைதிக்கு எதிராக குந்தகம் விளைவிப்போரிடம் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு உமர் அப்துல்லா கேட்டுக்கொண்டார். பொதுச் சொத்துக்கு சேதம் விளைவிக்கும் தேச விரோத சக்திகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

புதிதாக கலவரம் வெடித்து பரவி வருவதால் காஷ்மீர் மாநிலத்தில் உள்ள அனைத்து முக்கிய நகரங்களிலும் புறநகர் பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளது.

# மீனவர் மீதான தாக்குதலைத் தடுக்க துப்பில்லாத சோனியாவைத் துதித்து சீமானைத் தாக்குவதா?

## இளங்கோவனுக்கு 'நாம் தமிழர்' கண்டனம்

சென்னை, ஓக. 02

தமிழக மீனவர் மீதான இலங்கையின் தாக்குதலைத் தடுக்கத் துப்பில்லாத சோனியா காந்திக்குக் கண்டனம் தெரிவிக்காமல், சீமானைக் குறைகூறி - வாய்க் கொழுப்புடன் பேசிக் கொண்டு திரியும் இளங்கோவன் அரசியலை விட்டு ஒதுக்கப்படுவது உறுதி.

- இவ்வாறு நாம் தமிழர் இயக்கச் செய்தித் தொடர்பாளர் கூத்தன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பெரியாரின் பேரன் என்று கூறிக் கொண்டு பகலிலும் தன்னிலை மறந்து பேசும் குணம் கொண்டவர் சோனியாவின் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இளங்கோவன்.

இவர் சமீபத்திய பேட்டி ஒன்றில் வழக்கம் போல் வாய்க்கு வந்தபடி உளறிக் கொட்டியிருக்கின்றார். அவர் தனது பேட்டியில், சில முத்துக்களை உதிர்த்திருக்கின்றார். அண்டை நாடுகளோடு பிரச்சினை ஏற்படும்போது சுமுகமாகப் பேசித் தீர்க்க வேண்டுமே தவிர, வன்முறையைத் தூண்டக் கூடாது. இலங்கை அரசு தமிழ் மீனவர் மீது தாக்குதல் நடத்தினால் பேசித்தீர்க்க வேண்டும். ஆனால் சீமான் வன்முறையைத் துண்டுகின்றார் என்று இளங்கோவன் தன்னிலை மறந்து கூறி யிருக்கின்றார்.

சாதாரண மனிதர்கள் இடையே பிரச்சினை இருந்தால் பேசித்தீர்க்கலாம். ஆனால் இங்கு நம் மீனவர்களை இலங்கை அரசு தாக்குவது காலம் காலமாக நடக்கின்றது. எத்தனை தடவைகள் முறையிட்டும் இது தீரவில்லை. இலங்கை அரசு துளி கூடக் கேட்கவில்லை. இந்நிலையில் சீமானைக் குறைகூறுவதை விட்டு விட்டு, இதனைத் தடுக்கத் துப்பில்லாத - அவர் அன்னை என்று கூறிக்கொண்டு திரியும் சோனியாவைக் கண்டனம் செய்வதே சரியானதாக இருக்கும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இழந்த அங்கீகாரத்தை மீண்டும் ம.தி.மு.க. பெறும் என்கிறார் வைகோ

சென்னை, ஓக. 02

தமிழகத்தில் வரவுள்ள தேர்தலில் ம.தி.மு.க. சிறப்பான வெற்றி பெற்று இழந்த அங்கீகாரத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளும் - என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு -

ம.தி.மு.க. அங்கீகாரத்தை இழந்துள்ளது என்று இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் ம.தி.மு.கவுக்கு 5.98 சதவீத வாக்குகள் கிடைத்தன. ஆறு சட்டப் பேரவை உறுப்பினர்கள் வெற்றிபெற்றனர்.

குடியரசுத் தலைவர் தேர்தலில் சட்டப் பேரவை உறுப்பினர்களின் வாக்குகளை எண்ணும்போது, 0.5 அல்லது அரை சதவீதத்துக்கு மேல் கிடைக்கும் வாக்குகளை ஒன்று ஒன்றாகக் கணக்கிடலாம் என இந்திய அரசியல் சட்டவிதி கூறுகிறது. இதன்படி, ம.தி.மு.கவுக்கு உள்ள 0.98 சதவீத வாக்குக் கணக்கை ஒன்று என ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், தேர்தல் ஆணையம் இதை ஏற்கவில்லை.

மாநில அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சி, அந்த அங்கீகாரத்தை பின்னர் இழக்க நேர்ந்தால் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு அந்தக் கட்சிக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட சின்னமே ஒதுக்கப் பட வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தின் 10 ஆவது விதி தெளிவுபடுத்துகிறது.

இதன்படி, ம.தி.மு.கவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 'பம்பரம்' சின்னம், 2016 ஜூலை 29 ஆம் திகதிவரை ஒதுக்கப்படும்.

கடந்த 16 ஆண்டுகளில் ம.தி.மு.க. கணக்கற்ற சோதனைகளைக் கடந்து, மக்கள் மன்றத்தில் நன்மதிப்போடு இயங்கி வருகிறது. வரப்போகும் தேர்தலில் சிறப்பான வெற்றி பெற்று, இழந்த அங்கீகாரத்தை மீண்டும் ம.தி.மு.க. பெறும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்தியச் செய்திகள்**

# தெலுங்கானா மாநிலம் அமைக்கக்கோரி பல்கலை. மாணவர் தீக்குளித்துப் பலி!

## ஐதராபாத்தில் பதற்றம்; பொலிஸ் குவிப்பு

ஐதராபாத், ஓக 02

ஆந்திராவில் தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்கக் கோரி உஸ்மானியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொறியியல் கல்லூரி மாணவர் தீக்குளித்துப் பலியானார்.

இதனால் ஐதராபாத்தில் பதற்றம் ஏற்பட்டதையடுத்து உஸ்மானியா பல் கலைக்கழகப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலத்தைப் பிரித்து தெலுங்கானாத் தனி மாநிலம் அமைக்கக் கோரி தீவிர போராட்டம் நடைபெற்று வருகிறது. தனித் தெலுங்கானாவை வலியுறுத்தி



கடந்த நவம்பர் மாதம் முதல் இதுவரை தெலுங்கானாப் பகுதியைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தீக்குளித்து இறந்தனர். மேலும், தெலுங்கானாப் பகுதியைச் சேர்ந்த 12 எம்.எல்.ஏக்கள் ராஜினாமாச் செய்தனர்.

அந்த 12 தொகுதிகளுக்கும் நடந்த இடைத்தேர்தலில் தெலுங்கானா மாநிலத்தைத் தீவிரமாக ஆதரித்து வரும் தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. 11 தொகுதிகளை அந்தக் கட்சியும் ஒரு தொகுதியை பா.ஜ.கவும் கைப்பற்றியுள்ளன. இந்தச் சூழ்நிலையில், தெலுங்கானா தனி மாநிலப் போராட்டம் மீண்டும் தீவிரம் அடைந்துள்ளது. உஸ்மானியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் நேற்றுமுன் தினம் தீக்குளித்தார்.

ஈசான் ரெட்டி என்ற பொறியியல் துறை மாணவர் உஸ்மானியா பல்கலைக்கழகத்திலேயே தீக்குளித்து இறந்தார்.

இதையடுத்து பல்கலைக்கழகம் அமைந்துள்ள பகுதியில் ஏராளமான மாணவர்களும், தெலுங்கானா ஆதரவாளர்களும் குவிந்ததால் பல்கலைக்கழக வளாகத்துக்குப் பொலி ஸார் 'சீல்' வைத் தனர். மேலும், அந்தப் பகுதியில் அசம் பாவிதச் சம்பவங்கள் நடை பெறாமல் தடுப்பதற்காகக் பொலிஸார் குவிக்கப்பட் டுள்ளனர்.

# தி.மு.க. - காங். கூட்டணி தொடருவதை கட்சித் தொண்டர்கள் விரும்பவில்லை!

## சூசகமாகத் தெரிவித்தார் இளங்கோவன்

தமிழகக் காங்கிரஸ் தலைவர்கள் கட்சித் தொண்டர்களின் உணர்வுகளைக் காங்கிரஸ் மேலிடத்திடம் தெரிவிக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வலியுறுத்தினார். தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி தொடருவதைத் தொண்டர்கள் விரும்பவில்லை என்றும் அவர் மறைமுகமாகத் தெரிவித்தார்.

மதுரையில் நடந்த தியாக சீலர் கக்கன் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

தமிழ்நாட்டில் 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னர் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரமுடியாமல் போய்விட்டது. இதற்குக் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளையும், சாதனைகளையும் நாம் மக்களிடம் சரிவர எடுத்துக் கூறாதமையே காரணம். காங்கிரஸ் பேரியக்கத்தை கக்கன் போன்ற பெரிய தலைவர்கள் வளர்த்து வந்த போதிலும் நாம் நமது கடமையைச் சரிவரச் செய்யாமல் இருந்தமையால்தான் 42 ஆண்டுகளாக நாம் ஆட்சியை இழந்து நிற்கிறோம்.

தமிழ்நாட்டில், மக்களுக்கு ஒளிகொடுப்பவர்கள் தாங்கள்தான் என்பது போல தி.மு.கவினர் பேசி வருகின்றனர். தங்களைச் சூரியனாகவும், காங்கிரஸை சந்திரனாகவும் வர்ணிக்கின்றனர். நாங்கள் சந்திரன்தான். ஆனால், வித்தியாசமான சந்திரன். நாங்கள் அவர்களுடன் இருந்தாலும் அவர்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து வருகிறோம்.

தமிழகக் காங்கிரஸ் தொண்டர்களின் மனதில் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. காலம் வரும்போது தங்கள் உணர்வுகளை வெளியிட அவர்கள் தவறுவதில்லை. இங்கே சிலர் பேசும்போது தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வலுவாக இருக்கிறது, கூட்டணி தொடரும் என்று கூறினர். அப்போது தொண்டர்கள் கூட்டத்திலிருந்து தி.மு.கவுடன் கூட்டணி வேண்டாம் என்ற கோஷம் எழுந்தது. எனவே, தொண்டர்களின் உணர்வுகளை தமிழகத் தலைவர்கள் புரிந்துகொண்டு அதை மேலிடத்திடம் தெரிவிக்க வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் வெள்ள அனர்த்தத்தில் பலியானோரின் எண்ணிக்கை 800!

## 10 இலட்சம் பேர் வீடு, உடைமைகள் இழப்பு

இஸ்லாமாபாத், ஓக. 02

வட-மேற்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களுக்குப் பலியானோரின் எண்ணிக்கை 800 ஆக அதிகரித்துள்ளது. பத்து இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடுவாசல்களை இழந்துள்ளனர் என உள்ளூர் அதிகாரிகள் .பி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தனர்.

பல பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன. 30 இலட்சம் மக்கள் எண்ணிக்கையைக்கொண்ட பெரும் நகர் பெஷாவருக்கான வீதிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆப்கானிஸ்தான் எல்லையோடு ஒட்டிய நான்கு மாகாணங்கள் வெள்ளப்பெருக்கால் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. பெருவாரியான கால்நடைகள் பலியாகியுள்ளன. மீட்புப் பணியாளர்களால் பாதிக்கப்பட்ட இடங்களை சுலபமாக அடைய முடியவில்லை. அதனால், அவர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளார்கள் என்றும் அதிகாரிகள் விவரித்தார்கள்.

வெள்ள அனர்த்தங்களுக்கு 800 பேர் வரை பலியாகியுள்ளனர். இந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். பல பகுதிகளுக்கான போக்குவரத்துகளும், தொலைத்தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் உடனுக்குடன் முழுமையான தகவல்களைப் பெறமுடியாதுள்ளது என கைபர்-பஹ்துங்வா (முன்னாள் வட-மேற்கு முனை) மாகாண தகவல் தெரிவிக்கிறது.

பாகிஸ்தானின் சில பகுதிகளில் 80 ஆண்டுகளில் இல்லாத வகையில் பேய் மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பெரிதும் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் மீட்புப் பணியில் 17 ஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் விவரித்தார்கள்.

பாகிஸ்தானின் வடமேற்கில் உள்ள கைபர் - பக்துங்வா மாகாணம், பெஷாவர், சர்சத்தா, நவ்ஷேரா, பஞ்சாப் மாகாணம், பாகிஸ்தான் நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீர் ஆகிய பகுதிகளில் கடந்த சில நாள்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதனால், ஐந்து நாள்களுக்கும் மேலாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பெஷாவர் நகரம் இதர பகுதிகளிலிருந்து மூன்று நாள்களாக துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த மழை வெள்ளம் தொடர்பான பல்வேறு சம்பவங்களில், 800இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். 10 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளையும், உடைமைகளையும் இழந்துள்ளனர் என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

கோகிஸ்தான் மாவட்டத்தில் நீர்மின் திட்டப் பணி ஒன்றில் ஈடுபட்டிருந்த 200 இற்கும் மேற்பட்ட சீனர்களும் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர். 1929ஆம் ஆண்டுக்குப் பின், இப்போதுதான் பாகிஸ்தானில் பெரும் மழை வெள்ளம் ஏற்பட்டுள்ளது என பாகிஸ்தான் அதிகாரிகள் கூறினர்.

இதேபோல், ஆப்கானிஸ்தானிலும் மழை வெள்ளத்தில் 65 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.




## உலகிலேயே நீண்ட ஆயுள் ஜப்பானியப் பெண்களுக்கே!

உலகிலேயே ஜப்பானியப் பெண்கள்தான் அதிக வாழ்நாளை கொண்டுள்ளனர். கடந்த 25 ஆண்டுகளாக ஜப்பான் இந்தத் தொடர் சாதனையை தன் வசம் வைத்துள்ளது.

ஆண்களில், கட்டார் ஆண்களே அதிக ஆயுள் கொண்டவர்களாக உள்ளனர்.

உலகிலுள்ள மக்களில் அதிக வாழ்நாளை கொண்ட பெண்கள் ஜப்பானியர்கள் தான் என்றும்,- அவர்கள் 86.44 ஆண்டுகள் உயிர் வாழ்கின்றனர் என்றும் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஜப்பானிய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

உலகிலுள்ள மக்களில் நீண்ட காலம் வாழ்பவர்கள் ஜப்பானியர்கள் தான். கடந்த 25 ஆண்டுகளாக அவர்கள் தொடர்ந்து இந்தச் சாதனையை செய்துவருகின்றனர்.

உலகளவில் ஜப்பானிய பெண்கள்தான் நீண்ட நாள்கள் உயிர் வாழ்கின்றனர். 86.1 ஆண்டுகள் வாழும் ஹொங்கொங் பெண்கள் உலகில் 2ஆம் இடமும், 84.5 ஆண்டுகள் வாழும் பிரான்ஸ் பெண்கள் 3ஆம் இடமும், 84.4 ஆண்டுகள் வாழும் சுவிட்ஸர்லாந்து பெண்கள் 4ஆவது இடமும் பெறுகின்றனர். கட்டார் ஆண்கள் 81 ஆண்டுகள் வாழ்கின்றனர். ஆண்களில், இவர்கள்தான் உலகில் அதிக ஆயுள் கொண்டவர்கள்,

ஹொங்கொங் ஆண்கள் 79.8 ஆண்டுகளும், ஐஸ்லாந்து, சுவிட்ஸர்லாந்து ஆண்கள் 79.7 ஆண்டுகளும் வாழ்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த மருத்துவ வசதி காரணமாக புற்றுநோய், இதய பாதிப்பு, வலிப்பு ஆகிய மூன்று நோய்களால் இறப்பு விகிதம் குறைந்து, ஜப்பான் நாட்டினரின் ஆயுள் அதிகரித்துள்ளது.

சிறந்த உணவு, உயர்ந்த வாழ்க்கைத்தரம் ஆகியவையும் அவர்களின் ஆயுள் அதிகரிப்புக்கான முக்கிய காரணங்கள்.

## பில் கிளிண்டன் புதல்வியின் பிரமாண்டமான திருமணம்

நியூயோர்க், ஓக. 02

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனின் புதல்வி செல்சியாவின் திருமணம் சனிக்கிழமை பிரமாண்டமாக நடைபெற்றது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன், இப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தம்பதியின் புதல்வி செல்சியா (வயது - 30). இவர் நீண்டகாலமாக வங்கியாளர் மார்க் மெஸ்வின்ஸ்கி (வயது - 32) என்பவரைக் காதலித்து வந்தார்.

இவர்களது திருமணம் நியூயோர்க் நகருக்கு அருகேயுள்ள ரைன்பெக் என்ற சிறிய நகரில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்தத் திருமணம் நடைபெறுவதை யொட்டி அப்பகுதியில் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

நீண்டநாள்களாக இவர்களது திருமணம் குறித்த விடயங்கள் வெளியாகவில்லை. இத்திருமண விடயம் கடந்த வாரம்தான் திடீரென வெளியாகியது. இதனால், திருமணம் நிகழ்ந்த சிறிய நகரில் ஏராளமான பத்திரிகையாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் குவிந்தனர்.

நூற்றாண்டின் திருமணம் என வர்ணிக்கப்படும் இவர்களது திருமணத்துக்கு சுமார் ரூ. 140 கோடி முதல் ரூ.230 கோடி வரை செலவாகியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ மதத்தில் மெதடிஸ்ட் பிரிவைச் சேர்ந்தவர் செல்சியா. யூத மதத்தைச் சேர்ந்தவர் மெஸ்வின்ஸ்கி. செல்சியா யூத மதத்தைத் தழுவினாரா என்பது குறித்து எந்தத் தகவலும் இல்லை.

பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சியாளர் ஓஃப்ரா வின்ஃபிரே, ஹொலிவுட் இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க், பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் ஜோன் மேஜர் உள்ளிட்ட பிரபலங்கள் அழைக்கப்பட்டிருந்தனர். ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு அழைப்பிதழ் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் நிலக்கரிச் சுரங்க விபத்து; 15 பேர் மரணம்; 20 பேர் படுகாயம்!

பீஜிங், ஓக. 02

வடக்கு சீனாவின் ஷான்சி மாகாணத்தில் சனிக்கிழமை ஏற்பட்ட நிலக்கரிச் சுரங்க விபத்தில் 15 பேர் இறந்துள்ளனர்.

ஷான்சி மாகாணத்திலுள்ள லின்பின் நகரில் இந்த நிலக்கரிச் சுரங்கம் அமைந்துள்ளது. இதிலுள்ள தொழிலாளர்கள் விடுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில், 15 பேர் பலியாயினர். 20 பேர் காயமடைந்துள்ளனர்.

பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். விபத்துக்கான காரணங்கள் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

மீட்புப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. சீனாவில் வருடந்தோறும் நூற்றுக்கணக்கானோர் சுரங்க விபத்துகளில் பலியாகின்றனர்.

மத்திய சீனாவின் ஹூனான் மாகாணத்திலுள்ள வருமான வரி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடந்த குண்டுவெடிப்பில் பலியானவர்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது. இதேபோல், வடகிழக்கு சீனாவின் ஜிலின் மாகாணத்திலுள்ள கடையில் வெள்ளிக்கிழமை நடந்த குண்டு வெடிப்பில் ஒருவர் பலியாகியுள்ளார்.

## ஈரானில் பூகம்பம்: 274 பேர் படுகாயம்!

தெஹ்ரான், ஓக. 02

ஈரானில் ஏற்பட்ட பூகம்பத்தில் 274 பேர் காயமடைந்தனர். ஈரானின் வடகிழக்குப் பகுதியில், தெஹ்ரானிலிருந்து 700 கி.மீ. தொலைவிலுள்ள டோர்பட்-இ-ஹைதரியா நகரில் வெள்ளிக்கிழமை மாலை இந்தப் பூகம்பம் ஏற்பட்டது.

இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.7 புள்ளிகளாகப் பதிவானது. வீடுகள் குலுங்கியதையடுத்து, மக்கள் அலறியடித்துக்கொண்டு தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறினர்.

சனிக்கிழமை காலை தெற்கிலுள்ள கெர்மான் பகுதியில் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.8 புள்ளிகளாகப் பதிவானது. இந்தப் பூகம்பத்தால் ஏற்பட்ட இடிபாடுகளில் சிக்கி, 274 பேர் காயமடைந்தனர்.

அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வருகின்றனர். உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

**தேவை**

கணனி திருத்துநர், Typing தெரிந்தவர் தேவை.

தொடர்பு: SKY COMPUTER (PVT) LTD.
162, Main Street, Jaffna.
TP.: 021 222 1417

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

சில்லாலை வா.க்கு.1ண்ா த்தரிப்பு என்னும் முகவரியுடைய யோகநாசன் றொபின்சன் என்பவரின் தே.அ.அட்டை 01.08.2010 அன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0779934764, 0774672764

**துயர் பகிர்வு**



எமது ஆலயத்தின் உற்சவ
குருவாகிய
பிரம்மஸ்ரீ செ.சுகுமாரக்குருக்கள்
அவர்களின் அன்புத் தந்தை
**தி.செந்திநாதசர்மா**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அவருக்கும்,
அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின்
துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

பரிபாலனசபை,
ஸ்ரீ அருட்கதிர்காமகந்தன் ஆலயம்.

## மரண அறிவித்தல்/OBITUARY

### குலராஜா குக்

(முன்னாள் கணக்காய்வாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், விதானையார் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட T.S.K. குக் சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா குக் - றோஸ் குக் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தியாக ராசா - அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மதனிகா குக்கின் (ஆசிரியர், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்) அன்புக் கணவரும், தங்கராணி, யோகராணி, E.D.T குக் (U.K), காலஞ்சென்ற A.R.Y. குக் மற்றும்V.S. குக் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வின்சன் பெர்னாண்டோ மற்றும் எத்தனா (U.K), நிர்மலாம்பிகை, பபி ஆகியோரின் அன்பு மைத்துனரும், துஷாந்தி, தர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற டயானா சாருகேசி மற்றும் ஷேர்லி, செரின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லீடக்க ஆராதனை இன்று (02.08.2010) திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி மதனிகா குக்
(மனைவி).



### KULARAJA COOKE

(Retired Internal Auditor, Paranthan Chemicals)

KULARAJA COOKE (Retired Internal Auditor, Paranthan Chemicals) of 37, Vidan's Lane, Chundikuli, Jaffna, passed away on 31st July 2010. He is the son of Late Mr. & Mrs. P.T.Cooke and son-in-Law of Late Mr. & Mrs. Thiyagarajah, beloved husband of Mathaniga Cooke (Angel's International School, Manipay), brother of Thangarani, Yogarani, E.D.T Cooke(UK), Late A.R.Y.Cooke and V.S.Cooke, brother-in-law of Late Vincent Fernando, Ethana(UK), Nirmalambigai and Babi. Uncle of Thusanthi, Tharsini, Late Diana Sarukesi, Shirley and Sherin.

The funeral-service will be held on 2nd August 2010 at3.p.m. at his residence and burial at St.John's Cemetry, Jaffna.

Relatives & friends are kindly requested to accept this announcement.

37, Vidan's Lane,
Chundikuli, Jaffna,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் பேசும் மக்களை வடக்கு கிழக்கிலும் சிறுபான்மையினராக்க அரசு கங்கணம்

## கல்முனையில் மாவை எம்.பி. கருத்து



கொழும்பு, ஓக. 02

''வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ் பேசும் மக்களைச் சிறுபான்மையினராக்கி விடுவதற்கு அரசு கங்கணம் கட்டி செயற்பட்டு வருகின்றது.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கல்முனை, சம்மாந்துறை, காரைதீவு ஆகிய பிரதேசங்களில் கட்சியின் பிரதேசக் கிளைகளை அமைக்கும் கூட்டம் நேற்றுக் கல்முனை வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மக்களை பல வழிகளில் திசை திருப்ப முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே ஆதரவு வழங்கி வருகின்றனர். உங்களின் இந்த ஆதரவினாலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்திய அரசு கூட எங்களுடன் பேச்சுகளை நடத்த முன்வந்துள்ளது.

வடக்கு, கிழக்கை அரசு தனித்தனியாகப் பிரித்தாலும், நாம் ஒற்றுமையுடன் வாழவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் ஊடாகத் தமிழ், முஸ்லிம் மக்களை சிறுபான்மையினராக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் இணக்கப்பாட்டுடனேயே செயற்பட்டு வருகின்றது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் பட்சத்தில் முஸ்லிம் மக்களுக்கான பிரதிநிதித்துவம் உரிய வகையில் வழங்கப்படும்.

எனவே, வடக்கு, கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் மக்களின் பங்களிப்பும் தேவை. - என்றார். (ஓ-சி)

## ஜி.சீ.ஈ. பரீட்சைக்கான அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், ஓக.2

எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு சுபநேரத்தில் வழங்கப்படும் என்று யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.கணேசராசா அறிவித்துள்ளார்.

மாணவர்கள் சமுகமளித்து அனுமதி அட்டைகளை இன்றே பெற்றுக்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (ஓ-ஐ)

## இலங்கைப் பணிப்பெண்கள் 41 பேர் றியாத்தில் அநாதரவான நிலையில்

கொழும்பு, ஓக. 02

இலங்கைப் பணிப்பெண்கள் 41 பேர் சவூதி அரேபியாவின் தலைநகரான றியாத்தில் கடந்த மார்ச் மாதம் முதல் அநாதரவான நிலையில் உள்ளனர் என்று 'அராப் நியூஸ்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களினால் வழங்கப்பட்ட உத்தரவாதத்திற்கு அமைய அவர்களுக்கு றியாத்தில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படவில்லை என இலங்கைத் தூதுவராலய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பணிப்பெண்கள் தற்போது தங்கியுள்ள இடம் சுகாதார வசதியற்றது என்றும் உண்பதற்கு சத்துணவு இல்லாத நிலையில் 6 பணியாளர்கள் சுகவீனமுற்றுள்ளனர் என்றும் 'அராப் நியூஸ்' செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களைக் கண்டறியும் திடீர் சோதனை நடவடிக்கைகளை இலங்கை வேலைவாய்ப்பு பணியகம் ஆரம்பிக்கவுள்ளது.

இதன் முதல் கட்டமாகப் பதிவுசெய்யப்பட்ட அனைத்து முகவர்கள் குறித்து விசேடமாக ஆராயப்படவுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது போலி முகவர்கள் 20 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்றும் பணியக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-சி)

## வவுனியா 'மெனிக்பாம்' அகதிகள் குறித்து தெற்கு பல்கலை மாணவர்களின் வேதனை

யாழ்ப்பாணம், ஓக 2

வவுனியா ''மெனிக்பாம்'' அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

அவர்களைத் தாம் நேரில் சென்று பார்த்ததாகத் தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் வடக்கு ஊடகவியலாளர்களிடம் ஆதங் கத்துடன் எடுத்துக்கூறினர்.

அண்மையில் வடக்கிலிருந்து தென்னிலங்கைக்குச் சுற்றுலா சென்ற ஊடகவியலாளர்களுக்கும் தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள சமூக - சமய - நடுநிலைமை நிலையத்தில் நடைபெற்றது.

அந்தக் கலந்துரையாடலின்போது அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

வவுனியா 'மெனிக்பாம்' அகதிமுகாமில் உள்ள மக்களைச் சந்திப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கே அனுமதி வழங்கப் படாத நிலையிலும் தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் அண்மையில் சந்தித்தோம்.

அந்த வேளையில்தான் அங்குள்ள மக்கள் படுகின்ற இன்னல்களைக் கண்டோம். அங்குள்ள 'கதிர்காமர்' எனும் அகதி முகாமில் உள்ள மக்கள் பல்வேறு துன்ப துயரங்களைச் சந்தித்து வருகின்றனர்.

சிறிய குடிசையில் வாழுகின்ற அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாது பல்வேறு நெருக்கடிக ளைச் சந்தித்து வருகின்றனர்.

சுகாதாரம், கல்வி எனப் பலவிதமான அடிப்படை வசதிகளின்றி அங்குள்ள மக்கள் சிரமங்களுடன் காலத்தைக் கடத்தி வருகின்றனர் - என்றனர். (ஓ-9)

## தமிழக மீனவர் மீதான தாக்குதல்: இந்திய - இலங்கை அரசுகள் பேச்சு

சென்னை, ஓக. 02

இலங்கை கடற்படையினரால் தமிழ் நாட்டு மீனவர்கள் தாக்கப்பட்டனர் என்று சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டு தொடர்பில் மத்திய அரசு, இலங்கை அரசுடன் பேச்சுகளை நடத்தி வருவதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் கருணாநிதியை நேற்று சந்தித்த சிதம்பரம், ஈழத் தமிழர்களின் துயர் துடைப்பதற்காக இந்திய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை தொடர்பாக விளக்கினார்.

இச்சந்திப்பைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றினார் சிதம்பரம். அப்போதே தமிழக மீனவர்களின் தாக்குதல் தொடர்பாக இலங்கையுடன் இந்தியா பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றது என்று கூறினார்.

ஈழ அகதிகள் மீள்குடியேற்றம் தொடர்பாகவும், அவர்கள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவது தொடர்பாகவும் இந்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றி சிதம்பரம் இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேலும் கூறினார். (ஓ-சி)

### சரத் பொன்சேகா விவகாரத்தில்

## நீதிமன்றத்தின் உத்தரவை மீறினால் அரசுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### ஜனநாயக தேசிய முன்னணி எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 02

ஜனநாயக தேசிய முன்னணித் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவை நாடாளுமன்ற கூட்டத்திலும், நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் பங்குபற்ற அனுமதிக்கும் நீதிமன்ற உத்தரவை அரசு நடைமுறைப்படுத்தத் தவறினால் அது தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனநாயக தேசிய முன்னணி எச்சரித்துள்ளது.

நாடாளுமன்றத்தின் கடந்த அமர்வின்போது ஜெனரல் சரத் பொன்சேகாவை நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்பட்டது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த முன்னணியின் உறுப்பினரும், ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க அரசின் செயலைக் கண்டித்தார்.

''நீதிமன்ற உத்தரவை அரசு மதித்து நடக்கும் என ஜனநாயக தேசிய முன்னணி எதிர்பார்க்கின்றது. நாம் நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். ஜெனரல் சரத் பொன்சேகாவை நாடாளுமன்றக் கூட்டத்திலும், நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் பங்குபற்ற அனுமதிக்காவிட்டால், ஜ.தே.முன்னணி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்.'' - இப்படி அவர் கூறினார். (ஒ-சி)

## கே.பிக்கு அரசாங்கத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெலவத்தையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர் மாநாடு நடத்தப்பட்டது. அதிலேயே அவர் கே.பி. விவகாரம் குறித்து காட்டமான கருத்துகளை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

அரசால் தடுத்துவைக்கப்பட்ட ஒருவர் பத்திரிகைக்குப் பேட்டியளிக்க முடியாது. இதற்குச் சட்டத்தில் இடமில்லை. ஆனால், கே.பி. பத்திரிகைகளுக்குப் பேட்டி யளிக்கின்றார். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்குச் சுதந்திரமாகப் பயணம் செய்கின்றார். எனவே அவர் தடுத்துவைக்கப்படவில்லை என்று உறுதியாகக் கூறமுடியும்.

அரசு இப்போது கே.பியின் புகழ் பாடத் தொடங்கியுள்ளது. அவர் 'தேசப்பற்றாளர்' என்ற பட்டியலில் சேர்க்கப்படலாம் என்று கடந்த வாரம் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

கே.பி. வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்குப் புலம்பெயர் சமூகத்தின் உதவியை பெற்றுத் தருகின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2009 ஓகஸ்ட் 7ஆம் திகதி கே.பி. கைது செய்யப்பட்ட சமயத்தில், கெஹலிய ரம்புக்வெல பின்வருமாறு தெரிவித்திருந்தார்:

''புலிகளின் சர்வதேச ஆயுதக் கொள்வனவுக்குப் பொறுப்பானவர். சர்வதேச ரீதியில் புலிகளுக்கு நிதி சேகரிக்கும் பொறுப்பையும் இவர் கொண்டிருந்தார். ராஜீவ் காந்தி கொலையிலும் சம்பந்தப்பட்டுள்ளார். இவரை இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுத்தால் அதுகுறித்தும் அரசு ஆலோசிக்கும்.'' - என்றார்.

இப்படித் தெரிவித்த அவர், கே.பி. பயங்கரவாதத்தைப் பரப்பியவர் எனவும் முன்னர் எல்லாம் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அப்போது பிரதமராகவிருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஹொரணையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது, கே.பி. வழங்கிய தகவல்களை அடுத்து கொழும்பில் வெடிபொருள்கள், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவித்தார் எனப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

ஆனால், இப்போது எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது.

கே.பி. கைதுசெய்யப்பட்டு இம்மாதம் 6ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. ஆனால், இவர் இதுவரை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. விசாரணை நடத்தப்பட்டதா? அதனை மேற்கொண்டவர்கள் யார்? பொலிஸாரா அல்லது இரகசியப் பொலிஸாரா? பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா? எதுவும் தெரியவில்லை. அவரது 'பி.ரிப்போர்ட்' நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திப் பணிகளை அரசதரப்பினரும், மஹிந்தவும் சிறப்பாக மேற்கொள்கின்றனர் என சமீபத்திய பேட்டியில் கே.பி. தெரிவித்துள்ளார்.

அவர் மீது இதுவரை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படாதது ஏன்?

கே.பி. கைதானபோது அவர் பெயரில் 17 கப்பல்கள் இருக்கின்றன எனவும் கோடிக்கணக்கான யூரோக்களும், டொலர்களும், பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் இருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இப்போது இவை எங்கே? இவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தால் இவரது சொத்துகள் எங்கே என்ற விவரங்கள் வெளிவந்துவிடும். இதனாலா அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை.

இவருக்கு ஐரோப்பிய நாடுகளில் பல பெற்றோல் நிலையங்கள் இருக்கின்றன எனவும் கூறப்படுகிறது. குடும்ப ஆட்சியின் கீழ் இந்த சொத்துகளும் குடும்பத்தில் சிக்கிக்கொண்டனவா? கே.பியை நீதிமன்றத்தின் முன் நிறுத்தினால் சொத்துகள் எங்கே என்ற கேள்வி வரலாமென்பதால், அவர் ஆஜர் செய்யப்படவில்லையா? இவரது சொத்துகள் சட்டப்படி அரசுடைமையாக்கப்பட்டிருக்கவேண்டும்.

### விடுதலைப்புலிச் சந்தேக நபர்களை விடுதலை செய்ய வேண்டும்

அரசு இரண்டு தரப்பினரையும் இரண்டு விதமாக நடத்துவது ஏன்? இறுதிக் கட்ட யுத்தத்தில் விடுதலைப் புலிகளால் கட்டாய ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் எதுவித விசாரணையுமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

பல இளைஞர், யுவதிகள் எங்கே தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர் என அவர்களது பெற்றோருக்குத் தெரியாது.

இறுதி யுத்தத்தின்போது கைதுசெய்யப்பட்ட, சரணடைந்த புலிச் சந்தேகநபர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் வழக்குத் தொடரவேண்டும். இல்லையேல் அவர்களை விடுதலை செய்யவேண்டும்.

புலிகளுக்கு சர்வதேச ரீதியில் நிதி சேகரித்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வழங்கிய கே.பி. இன்று சுக போகம் அனுபவிக்கின்றார். இவரால் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் பலர் உயிரிழந்தனர். இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். அங்கவீனமுற்றனர். ஆனால், யுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து நாட்டை விடுவித்த ஜெனரல் சரத் பொன்சேகா இன்று தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிட்டதற்காகப் பழிவாங்கப்படுகின்றார் என்றே மக்கள் கருதுகின்றனர்.

இன்று நாட்டில் சட்டம், ஒழுங்கு இல்லை. ஒரு குடும்பம் நினைத்ததுதான் சட்டம் என்றாகிவிட்டது.

இந்த நாடு ஒரு குடும்பத்தின் பிடியில் சிக்கித் தவிக்கின்றது. சட்டம் சகலருக்கும் சமமானதாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்தக் குடும்ப ஆட்சியை ஒழிக்க மக்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்.

- இவ்வாறு அவர் சொன்னார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் 'வால் பிடிக்கும்' இயக்கமாக செயற்படாது தமிழர் கட்சிகளின் அரங்கம்

## 'அப்படி நடந்தால் நான் விலகிவிடுவேன்' என்கிறார் சங்கரி

யாழ்ப்பாணம், ஓக. 2

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் அரசின் 'வால் பிடிக்கும்' இயக்கமாக செயற்படமாட்டாது. அவ்வாறு அது செயற்படுமானால், நான் அந்தச் அரங்கத்திலிருந்து உடனேயே விலகிவிடுவேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை எமது அரங்கத்தில் இணையுமாறு மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்து வருகிறோம். அத்துடன் தமிழ்க் கட்சிகள் கலந்துரையாடும் விடயங்களில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் இருப்பின் அவற்றைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்மிடம் தெரிவிக்கலாம்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர், வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார். நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்ரான்லி வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் கட்சி ஆதரவாளர்களுடனான ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்றது.

கட்சி உறுப்பினரும் மாநகர சபை உறுப்பினருமான இரா. சங்கையா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வீ.ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இடம்பெயர்ந்திருந்த நிலையில் மக்கள் சொல்லொணா துன்பங்களை எதிர்கொண்டிருக்க மக்களை மீளக்குடியமர்த்த முன்னர் சுய லாபத்துக்காக எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என தேர்தலை நடத்தி ஜனாதிபதி தனது இலக்கில் வெற்றி கண்டுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலில் நான் வேட்பாளராகக் களமிறங்கியது மக்களுக்கு சேவை செய்வதற்கான சந்தர்ப்பத்தைப் பெறுவதற்கே. எனினும் மக்கள் எனக்கு வாக்களிக்கவில்லை. அது எனக்கு கவலையில்லை. ஆனால் தேசியம், சுயநிர்ணயம் எனும் அர்த்தமற்ற வார்த்தைகளைக் கூறி மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றுபவர்களுக்கு வாக்களித்து மக்கள் ஏமாற்றப்படுவதே எனக்குக் கவலையளிக்கிறது. தேசியம், சுயநிர்ணயம் என்பது இன்றைய அர்த்தமற்ற வார்த்தைகளாகவே உள்ளன.



### வன்னியில் சிங்கள மக்களை குடியமர்த்தினால் என்ன?

வன்னிப்பகுதியில் சிங்கள இராணுவத்தைக் குடியமர்த்தவென ஐயாயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளது அச்சுறுத்தல் இனி இல்லை. உழைக்கும் நோக்குடன் வறுமை நிலையிலுள்ள சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டால் அது பரவாயில்லை.

மக்களது வாழ்வுக்காகவும் சுதந்திரத்துக்காகவும் நான் நிதானமாக உழைத்து வருகிறேன். எந்தத்தரப்பினதும் சரி பிழைகளைக் கூறும் தைரியம் வேண்டும். அதுவே நிதானமான அரசியல் ஆகும். அதனையே நான் செய்துவருகிறேன்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் என்பது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டும் நடத்தவில்லை. அதில் பல்வேறு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே அதில் இணையாமல் உள்ளது.

நாம் கட்சி பேதமின்றி ஒன்று சேர்ந்தால்தான் எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். தேசியம் சுயநிர்ணயம் எனக்கூறி மக்களைத் துன்பப்படுத்தியது போதும். அவ்வாறு கூறியே கிளிநொச்சி, முல்லைத்தீவு அழிக்கப்பட்டது.

### என்னை அரசின் 'வால்' என்கிறார்கள் சிலர்

'அரசின் வால்' என என்னை விமர்சித்து வருகின்றனர். அவ்வாறு விமர்சிப்போர் தகுந்த காரணத்தைக் கூறவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் இணையுமாறு இதுவரை நான்கு முறை அழைப்பு விடுத்திருக்கிறோம். இன்னமும் அவர்கள் எம்முடன் இணைந்வதற்கான எவ்வித பதிலையும் வழங்கவில்லை - என்றார். (ஒ-14)

## கட்டுநாயக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முதலில் 50 இருக்கைகள் கொண்ட விமானச்சேவை ஆரம்பிக்கப்படும். பின்னர் சேவைகள் விஸ்தரிக்கப்படும். மக்களின் வசதிக்காக கூடுதல் சேவைகள் ஒழுங்கு செய்யப்படும். குறைந்த கட்டணமே அறவிடப்படும் - என்றார். (ஒ-ஐ)

## வெலிகந்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெலிகந்தை, திருக்கோணமடு மற்றும் கந்தகடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களைப் பார்வையிடுவதற்காக அவர்களது பெற்றோரை நாம் அழைத்துச் சென்றோம். அந்த இரண்டு முகாம்களிலும் மூவாயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அந்த முகாம்கள் அனைத்தும் தகரங்களால் அமைக்கப்பட்டுள்ளன. இப்போது அங்கு அதிக வெப்பம் நிலவுகிறது. ஆகவே, அந்த முகாம்கள் வாழ்க்கை நடத்தப் பொருத்தமானவையாக இல்லை.

அங்கு தண்ணீர்ப் பிரச்சினை அதிகம் உள்ளது. 10 நிமிடங்களில் 2 பேர் குளித்து முடிக்கவேண்டும். மருந்துத் தட்டுப்பாடு கடுமையாக இருக்கிறது.

இந்த இளைஞர்கள் இந்த முகாம்களில் அடைக்கப்பட்டு ஒரு வருடமும் 5 மாதங்களும் நிறைவடைகின்றன. இந்த முகாம்களில் உள்ளவர்களில் 90 சதவீதமானவர்கள் அப்பாவிகள்.

இந்த இளைஞர்களின் உறவினர்கள் அனைவரும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் உள்ளனர். அவர்களால் வெலிக்கந்தைக்கு வந்து இந்த இளைஞர்களைப் பார்ப்பது மிகக் கஷ்டம். ஆகவே, இந்த முகாம்கள் கிளிநொச்சிக்கு மாற்றப்படவேண்டும்.

இதைவிடவும், அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதே மிகச் சிறந்தது. குற்றமற்றவர்கள் விடுவிக்கப்படும் அதே வேளை, சந்தேகநபர்களுக்கு எதிரா கச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதிக்குப் பின்னுள்ள நிலைமை வேறு. அதைக் கருத்திற்கொண்டே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த புனர்வாழ்வு முகாம்கள் தடுப்பு முகாம்களாகவே உள்ளன.

அந்த முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் அனைவரும் அவர்களது விடுதலையை வேண்டி நிற்கின்றனர். ஆகவே, அரசு அவர்களை விடுதலை செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (ஒ-சி)


வெற்றி நிச்சயம்
V.M. Exam(Physics)
(2010&Day Batch)
நாளை (03.08.2010) காலை 9 மணிக்கு வெற்றி நிச்சயம் பரீட்சை (பௌதிகவியல்) நடைபெறும்.
இடம்: New Science Hall
Kannathiddy Road, Jaffna.
By: குகன்


## இலங்கைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனத்துக்கும், அந்த வைத்தியசாலைக்கும் இடையில் பிணக்குகள் ஏற்பட்டுள்ளதால், வைத்தியசாலை நிர்வாகம் இவர்களுக்கு தொழில் வழங்கவில்லை ன்றும் இதனால் இவர்கள் அங்கு நிர்க்கதியற்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

## அதிகாரபூர்வ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாடுகள் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் ஒத்துழைப் பதற்கு நிபுணர்குழு விரும்புகிறது என்று கூறி னார்.

நிபுணர்குழு இனிமேல் தான் தனது அதிகாரபூர்வ அமர்வை மேற்கொள்ளப் போகிறது என்பதால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் உட்பட குழு அலசவிருக்கும் ஏனைய விடயங்கள் எதனைப் பற்றியும் விரிவாக பேசுவதற்கு கொய் அம்மையார் மறுத்து விட்டார். நிபுணர் குழுவுடன் ஒத்துழைக்கப்போதில்லை என்று இலங்கை அரசாங்கம் உறுதிப்பட கூறியிருக்கும் நிலையில் தமக்கு வேண்டிய முக்கிய தகவல்களை குழு எவ்வாறு தேடிபெற்றுக்கொள்ளும் என்று கேட்ட போது, இந்த விடயங்கள் தொடர் பான பலவேறு தரப்புகளுடன் குழு பேசலாம் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறது; இலங்கை அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் அது நாடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றார் கொய் அம்மையார்.

எதுவானாலும் அதிகாரபூர்வ அமர்வுகளை ஆரம்பித்ததன் பின்னர் அதன் வழிமுறைகளை குழு ஆலோசித்து முடிவெடுக்கும் என்றார்.

நிபுணர்குழுவின் இறுதி அறிக்கை உத்தியோகபூர்வ அமர்வு ஆரம்பித்த நான்கு மாதங்களில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சகல பிரச்சினைகளையும் குழு ஆராயும் என்றார் அவர். அதன் பின்னர் இலங்கையால் 2009 ஆம் ஆண்டு மனித உரிமைகள் தொடர்பாக சம்மதம் தெரிவித்தவைகளை எவ்வாறு செயற்படுத்துவது என்பது குறித்து குழு தனது ஆலோசனைகளை செயலாளர் நாயகத்துக்குத் தெரிவிக்கும்.

அந்த வழிமுறைகளை ஆராய்ந்து சர்வதேச தரங்களை எவ்வாறு செயற்படுத்துவது என்பது குறித்தும் தெரிவிக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்களையும் கவனத்தில் கொண்டு நிபுணர் குழு தனது ஆலோசனைகளை வழங்கும் என்றார்.

குழுவின் இறுதி அறிக்கையை இலங்கை அரசாங்கம் விரும்பினால் தாமும் கேட்டு பெற்றுக்கொள்ளலாம். தனது திட்டங்களில் அதனையும் ஒரு மூலாதார ஆவணமா கப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஐ.நா. தெரிவித் துள்ளது. (ப)


புத்தக மலிவு விற்பனை
உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் ஸ்ரீலங்கா புத்தகசாலையினர் நடத்தும் மாபெரும் புத்தக கண்காட்சியும் விற்பனையும். காலம் ஒகஸ்ட் 2 ஆம் திகதியிலிருந்து ஒகஸ்ட் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
இல.234, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.


## யாழ். சென்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இந்தியப் பிரஜை எதற்காக யாழ்ப்பாணம் சென்றார் என்பது குறித்து முழுமையாக விசாரணை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-சி)

## அரச ஊழியர்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தனர்.

இதன்போது ஜனாதிபதி, நாட்டுக்குப் பொறுப்புவாய்ந்த தொழிற்சங்கமே தேவை என்றும் குறுகிய தனிப்பட்ட தேவைகளுக்காக கொள்கைகளை மாற்ற முடியாது என்றும் தெரிவித்தார்.

நாட்டில் 1.2 மில்லியன் அரச ஊழியர்கள் உள்ளனர். அவர்களுக்கு 2,500 ரூபா வீதம் சம்பள உயர்வை வழங்க 36 பில்லியன் ரூபா தேவைப்படும். இது சாத்தியமற்ற விடயமாகும். ஆனாலும் அரச ஊழியர்களின் சம்பள மீளாய்வு மற்றும் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு தாம் விசேட குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் அதில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உள்ளடங்கின்றனர் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தக் குழுவினர் தயாரிக்கும் அறிக்கைகள் 2011 வரவு செலவுத் திட்டத் தில் சேர்க்கப்படும் எனவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி தெரிவித்தார். (அ-10)

## கல்முனைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போயிருந்த நிலையிலேயே அவர், நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டார் என்று கல்முனை பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சடலம் பிரேத பரிசோத னைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டது என்றும் - இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மீள் குடியேற்றப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்

அமைச்சர் ப.சிதம்பரம் நேற்று கோபாலபுரத்திலுள்ள முதல்வரின் இல்லத்திற்குச் சென்று அவரை நேரில் சந்தித்தார்.

இச்சந்திப்பிற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்புக் குறித்து மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் மறுவாழ்வுப் பணிகள் குறித்து முதல்வர் கருணாநிதியுடன் ஆலோசனை செய்தேன். இலங்கைத் தமிழர் மறுவாழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்காக இந்திய வெளி விவகார அதிகாரி இந்த வாரம் இலங்கை செல்கிறார். அங்கு அவர் வீட்டு நிர்மாணப் பணிகளை நேரில் ஆய்வு செய்வார்.

பலாலி விமானத்தளம், காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றின் சீரமைப்புக் குறித்தும் இதன்போது ஆய்வு செய்யப் படும் - என்றார். (ஒ-சி)

## வானொலி நிலைய தாக்குதலை கண்டிக்கிறது அமெரிக்கா!

வெற்றி எப்.எம். வானொலி நிலையத் தாக்குதலை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில், இந்தக் தாக்குதல் சம்பவகம் ஆனாது பிரகீத் எக்னலி கொட என்ற ஊடகவியலாளர் காணமாற்போன சம்பவம் தொடர்பாக தீர்வு காணப்படமால் இருக்கும் விடயம் மற்றும் ஏனைய பத்திரிகைளுக்கு எதிரான வன்முறைகளுடன் இணைந்ததாக இடம்பெற்றுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் ஆனது ஏனை ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன் ஊடக சுதந்திரத்தை இலங்கை நெருக்கடி நிலைக்குள்ளாக்கி உள்ளது. இது தொடர்பாக உரிய பொலிஸ் விசாரணை நடைபெற்று குற்றமிழைத்தவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ- க)

## ஜி.சீ.ஈ. உயர்தர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதியாக நாடளாவிய ரீதியில் 1931 பரீட்சை நிலையங்கள் செயற்படவுள்ளன. பரீட்சை நிலையங்களுக்கு வினாத்தாள்கள் மற்றும் காகிதாதிகளை வழங்கல், விடைத்தாள்களை சேகரித்தல் என்பவற்றுக்கு 292 இணைப்பு நிலையங்களும் 33 ஒருங்கிணைப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

கடந்த வருடத்திலும் பார்க்க இந்தவருடம் 26,842 மாணவர்கள் அதிகமாகத் தோற்றுகின்றனர். இந்தவகையில் இந்த வருடம் 104 பரீட்சை நிலையங்கள் மேலதிகமாக செயற்படவுள்ளன.

இந்தவருடம் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைகள் நடைபெறுகின்றன. கிளிநொச்சியில் 14 பரீட்சை நிலையங்களும் முல்லைத்தீவில் 10 பரீட்சை நிலையங்களும் செயற்படவுள்ளன. யாழ். மாவட்டத்தில் 77 பரீட்சை நிலையங்கள் செயற்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 18 இணைப்பு நிலையங்களும் 2 ஒருங்கிணைப்பு நிலையங்களும் கிளிநொச்சியில் 7 இணைப்பு நிலையங்களும் ஒரு ஒருங்கிணைப்பு நிலையமும் முல்லைத்தீவில் 9 இணைப்பு நிலையங்களுக்கு ஒரு ஒருங்கிணைப்பு நிலையமும் செயற்படவுள்ளன.

பரீட்சை நிலையங்களாகச் செயற்படவுள்ள பாடசாலைகள் 6ஆம் திகதி பரீட்சைக்காக பொறுப்பேற்கப்படவுள்ளன. பரீட்சைக்கான வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து 4 கட்டங்களாக வெளிமாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதுடன் நான்கு கட்டங்களாக விடைத்தாள்களும் அங்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இதேவேளை -

பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலைகளில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன. (ஒ-11)


பல மாணவர்களின் வேண்டுதல்களுக்கு அமைய
யாழ் முன்னணி ஆசிரியர் தற்போது வலிகாமத்தில்
பௌதிகவியல் N.B கஜேந்திரன் A/L - 2012 தேர்ச்சி 02
ஆரம்பம்: 03.08.2010
செவ்வாய்க்கிழமை மாலை 5.00மணி
சஜீத் விஞ்ஞானக் கல்வி நிலையம் மானிப்பாய் வீதி, உடுவில்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org